# சரிநிகர்

[illegible] சமானமாக வாழுவமிந்த நாட்டிலே பாரதி

தொடரும் தணிக்கை 189வது நாள்

இதழ் 161

டிச.10 - டிச.23.1998

விலை ரூபா 10.00



## இந்தியா: காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்குமா?

## மாவீரர் தினம்: பிரபா சொன்னதும் சொல்லாததும்





## கோணேஸ்வரி: வழக்கும் முடிவும்?

## சென்னன் எம்.பி: திருப்பித் தாக்குவதே சரியானது!





## எல்லைப் புற கிராம மக்கள்: யுத்தம் வேண்டாம்!

## அஷ்ர.்.ப்: தனித்தும் கூட்டாயும்!



# பூச்சாண்டித்தனத்துக்கு களம் தேடும் அமெரிக்கா:

## சர்வதேச முஸ்லிம்களின் கருத்தறியும் முயற்சி!

அமெரிக்கா தனது சண்டித்தனத்தையும் பலத்தையும் உலகறியச் செய்யும் நோக்குடன் வளைகுடாவில் மீண்டும் போர்முழக்க ஆரவாரங்களைச் செய்து வருவது தெரிந்ததே.

ஈராக்கும் அதன் தலைவர் சதாம் உசைனும் தனது ரவுடித்தனத்தை அலட்சியம் செய்கின்ற போக்கு தொடர்ச்சியாகவே அமெரிக்காவுக்கு கௌரவப் பிரச்சினையை ஏற்படுத்தி வருகிறது. கிளின்டன் தான் சிக்கியிருக்கும் மோனிக்கா லிவின்ஸ்கி விவகாரத்திலிருந்து அமெரிக்க மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கு செய்யும் முயற்சியே அண்மைய வளைகுடா ஆரவாரங்களுக்குக் காரணம் என்று அமெரிக்காவில் எதிர்க்கட்சிகளால் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது. சதாம் உசைன் விடும் சவாலானது அமெரிக்க மக்களின் கௌரவத்துக்கு இழுக்கெனும் கருத்தை பரவவிட்டு அதிலிருந்து அமெரிக்காவை காக்கவேண்டுமென்கின்ற பிரச்சினையை மேலெழுப்புவதன் மூலம் மோனிக்கா விவகாரத்தை காணாமல் போய்விடச் செய்யலாம் என்று கிளின்டன் கருதுகிறார் என்ற கருத்தை பொய்யென்று ஒதுக்கிவிட முடியாது.

இந்த நிலையில் வளைகுடா யுத்தத்துக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு எப்படியிருக்கப்போகிறது என்று உரசிப்பார்க்கும் வேலையை ராஜதந்திரமட்டத்தில் அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது. அமெரிக்காவின் துதுவராலயங்களின் வாயிலாக அந்தந்த நாட்டு அரசாங்கங்களினதும் ஏனைய சக்திகளினதும், முக்கியமாக முஸ்லிம்களின் அபிப்பிராயத்தை அறியும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

இந்தப் பின்னணி நோக்குடன் கடந்த நவம்பர் மாத இறுதியில் அமெரிக்க உயர்ஸ்தானிகராலயம் இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுகின்ற உறுப்பினர்களுக்கு ஒரு விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் ஐ.தே.க.விலிருந்து எம்.எச்.மொஹமட், அலி சாகிர் மௌலானா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ரவுப் ஹக்கீம், எம்.சுபைர், அபுபக்கர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இவர்களைத் தவிர மாலைதீவு தூதுவர் அஸீஸ் (மாலைத்தீவுக்கான அமெரிக்கா தூதுவராலய விவகாரங்கள் இலங்கையிலேயே மேற்கொள்ளப்படுவது தெரிந்ததே.) மற்றும் சவுதியில் முன்னர் இலங்கைக்கான தூதுவராக இருந்த ஜாவேட் யூசுப் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஐ.தே.க.வைச் சேர்ந்த ஏ.எச்.எம்.அஸ்வருக்கு அழைப்பு கிடைத்திருந்த போதும் ஈராக் மீதான பொருளாதாரத் தடைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவர் அதில் கலந்து கொள்ளவில்லை.

இந்த விருந்தின் போது ஏறத்தாழ ஒன்றரை மணி நேரமாக ஈராக் விவகாரம் பற்றி பேசப்பட்டுள்ளது.

இதில் கருத்து கூறியவர்களில் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்டவர் சுபைர் எம்.பி. உலகின் ஏகபோக பலம்வாய்ந்த நாடாகிய அமெரிக்கா இந்த விடயத்தில் நடுநிலையில் நடந்து கொள்வதே நல்லது என்றும் ஒவ்வொரு நாடுகளின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வது நல்லதல்ல என்றும் குறிப்பிட்டார். என்ற போதும் அதில் கலந்து கொண்ட பலரின் கருத்துக்களில் இரு பக்கத்தையும் பாதுகாக்கின்ற வகையிலேயே அமைந்தன. எம்.ச.மொஹமட் கருத்துகூறும்போது ஒவ்வொரு நாடுகளின் இறைமையில் தலையிடுவது நல்ல காரியமில்லையென்று கூறிய அதே வேளை சதாமின் நடவடிக்கைகளை தான் ஏற்கமாட்டேன் என்றும் கூறினார்.

இவ்வாறு இந்த விருந்துபசாரம் என்கின்ற பேரில் முஸ்லிம் தரப்பினை உரசிப் பார்க்கும் காரியத்தை நடத்தியிருந்தது அமெரிக்க துதுவராலயம்.

எது எவ்வாறிருப்பினும் அமெரிக்கா தனது உலக ஏகபோக முதலாளித்து நலன்களைத் தக்க வைக்க ஒரு முறை தனது பலத்தைக் காட்டுவதற்கான களமொன்றை தேடிவருகிறது என்பதும் அதற்கான வாய்ப்புகளை வளைகுடாவிலேயே உருவாக்கி வருவதையும் எவரும் மறுக்க மாட்டார்கள். அதே வேளை அவ்வாறு வளைகுடாவில் அப்படியொரு யுத்தம் மூழுமாயிருந்தால் அனைத்துலகிலுள்ள முஸ்லிம் நாடுகளின் எதிர்ப்பை நிச்சயம் சந்திக்குமென்பதும், அது முஸ்லிம் நாடுகளை ஒன்று சேர்க்கும் என்கின்ற பயமும் அமெரிக்காவுக்கு பொதுவாக இருக்கிறது. குவைட் மீதான ஈராக் தாக்குதலைக் கூட வளைகுடா முஸ்லிம் நாடுகள் மறக்குமளவுக்கு ஈராக் மீதான பொருளாதாரத் தடையினால் ஈராக் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட விளைவுகள் மோசமாக இருந்துள்ள. எனவே தான் சில நாடுகள் இம்முறை அமெரிக்கா தங்களது நாடுகளில் ஆயுத தளபாடக்குவிப்புக்கோ அல்லது போர் விமானங்களை தரையிறக்குவதற்கோ அனுமதி வழங்குவதில்லையென அறிவிக்க வேண்டியதாயிற்று.

ஆனாலும் அமெரிக்காவுக்கு தனது போர்த்தளபாட கண்காட்சிக்கு ஏற்ற களமாக வளைகுடாவை விட மாற்று ஒன்று உடனடியாக இல்லை. ஆனால் அமெரிக்காவுக்கு நீண்ட கால நோக்கில் அப்படியான களங்களை உருவாக்கின்ற நோக்கம் இல்லாமலிருக்க வாய்ப்புமில்லை. அந்த வகையில் கியுபா உள்ளிட்ட தென் அமெரிக்காவின் வட பகுதி, இந்திய உபகண்டம், கிழக்காசிய, தென்கிழக்காசிய பகுதிகள் அதன் நீண்ட கால இலக்குக்கான கண்காட்சிக் களங்களாக மாறக்கூடுமென்ற அபிப்பிராயம் அவதானிகள் மத்தியில் நிலவுகின்றது. அமெரிக்கா தனது முதல் அணுக்குண்டுப் பிரிசோதனைக்கான களமாக இரண்டாம் உலகப்போரை சாதகமாக்கிக்கொண்டு ஹிரோஷிமா நாகசாக்கி மீது அதனை பிரயோகித்து பல லட்சக்கணக்கான ஜப்பானிய மக்களை கொன்றொழித்தது இந்த இடத்தில் நினைவிற்கொள்வோம்.

—கோமதி

# விளையாடவேண்டாம் !

நவம்பர் இறுதி ஞாயிறன்று காலை ரோந்து சென்ற இராணுவத்தினரைப் புலிகள் அதிரடியாகத் தாக்கியதில் ஒன்பது இராணு-வத்தினர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் மூதூரில் பச்சனூர் என்ற இடத்தில் நிகழ்ந்துள்ளது. மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாக இராணுவத் தகவல்கள் கூறுகின்றன. ஐந்து இராணுவத்தினரின் சடலங்கள் களத்திலேயே கிடந்துள்ளன. நால்வரின் சடலங்களை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு சென்று மறுநாள் செஞ்சிலுவைச் சங்கத்தூடாக ஒப்படைத்துள்ளார்கள்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எவரும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இராணுவத்தினரின் பதிலடி ஷெல் வீச்சில் பொதுமக்கள் சிலர் காயம-டைந்துள்ளனர். மரணச்சடங்கொன்றில் கலந்து கொள்வதற்காகத் திருகோணமலைக்குச் சென்ற இளைஞன் ஒருவரும் ஷெல் வீச்சால் காயமடைந்தார்.

மாவீரர் வாரத்தை முன்னிட்டுத் தாக்குதல் நிகழலாம் எனப் பாதுகாப்புத் தரப்பாரை நம்ப வைத்து விழித்திருக்க வைத்துச் சோர்வடையச் செய்த பின்னரே இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது. மாவீரர் தினம் மூதூரில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. மூன்று நாட்கள் தொடர் விளையாட்டுப் போட்டிகளும் இந்தக் கொண்டாட்டத்தில் ஒரு அம்சம்.

விடுதலைப் புலிகள் தங்களுக்குள் விளையாட்டுப் போட்டிகளை நடத்தட்டும். எங்களுடன் விளையாடாமல் இருந்தால் போதும் என்ற மனோபாவமே அந்தப் பகுதிப் பா்துகாப்புத் தரப்பாரிடம் மேலோங்கிக் காணப்பட்டது.

என்றாலும், விடுதலைப் புலிகள் தங்கள் போட்டிகளை முடித்துக் கொண்டு இராணுவத்துடனும் நிதானமாக ஒரு சுற்று ஆட்டம் ஆடி, அதில் இராணுவத்துக்கு ஆடச் சந்தர்ப்பம் வழங்காமலே வெற்றி பெற்று விட்டனர்.

திரிபுரன்

# சட்டியிலிருந்து நெருப்புக்குள்..

பல மணி நேரம் உயிருக்காகப் போராடிக் கரை சேர்ந்த மீனவர் ஒருவர், எவ்வித விசாரணைகளுமின்றி எடுத்த எடுப்பிலேயே வாகரை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்-பட்டுள்ளார். நவம்பர் 12ம் திகதி கலர் மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற அந்தோனி-ப்பிள்ளை அகிலதாஸ் என்ற 34 வயதுடைய மூன்று குழந்தைகளின் தந்தையே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த அகிலதாஸ் கலர்மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டவர். அன்றும் வழக்கம் போல சென்றிருக்கின்றார். கடலுக்கடியில் செல்லும் உபகரணங்களுடன் சென்று இவர் நீண்டதுாரம் நீரினடியில் சென்றதால் ஏற்றி வந்த படகைப் பிரிந்து விடவே வேறு வழியின்றி நீரோட்டத்தை அனுசரித்து நீந்தி, பல மணிநேரப் போராட்டத்தின் பின் வாகரைக் கரையைச் சேர்ந்திருக்கிறார். கரையில் வைத்தே களைத்துச் சோர்ந்த அகிலதாஸ் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. கடலுக்குச் சென்றவரைக் காணவில்லை என்று தேடிய குடும்பத்தினர் வாழைச்சேனையிலிருந்து கிடைத்த செய்தியைத் தொடர்ந்து அங்கு சென்ற போதே உண்மை வெளிப்பட்டிருக்கிறது.

அப்பாவி மீனவரான அகிலதாஸின் மூன்று குழந்தைகளுக்கும் யார் பதில் கூறப்போகிறார்கள்?

—விவேகி

# சூரியனும் இலஞ்சமும் !

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளின் மீது கைதுசெய்யப்பட்டு இப்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள பிரித்தானியாவின் பாரிய ஆசிய வானொலி மத்திய நிலையத்தின் (ABC) தலைவரும், இலங்கையின் ஹிரு, தரு, சூரியன் எப்.எம்., சன் எப்.எம். கோல்டன் எப்.எம். வானொலி சேவைகளின் பிரதான பங்குதாரருமான பிரித்தானியரான அவிதார் லிட் இப்போது லொஸ் ஏஞ்ஜல்ஸ் ஊடாக இலங்கைக்கு வந்துள்ளதாக ராவய செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தி மேலும் தெரிவிப்பதாவதும்,

பிரிதானிய வானொலி அதிகார சபையின் ஜெனற் லீ என்ற சிரேஷ்ட உறுப்பினருக்குப் புதிய வானொலி ஒலிபரப்பொன்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் இலஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டின் மீது இவர்கள் இருவரும் ஸ்கொட்லன்ட்யாட் பொலிசாரினால் இரு வாரங்களுக்கு முன்புதான் கைது-செய்யப்பட்டிருந்தனர். இச்சம்பவம் காரணமாக ஜெனட் லீ பிரித்தானிய வானொலி அதிகார சபையின் திட்டமிடல் பிரச்சார தலைவர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம் ஸ்கொட்லன்ட்யாட் பொலிசார் லண்டனிலுள்ள சவுத்ஹோல் பிரதேசத்தில் அமைந்துள்ள அதார் லிற் இனுடைய வீட்டினுள் புகுந்து அங்கிருந்த காகிதக் கோவைகள் பெருந்தொகையா-னவற்றைக் கைப்பற்றியுள்ளனர். அக் கடிதக் கோவைகளினுள் இலங்கையினுள் ஹிரு, தரு, சூரியன் எப்.எம்., சன் எப்.எம். கோல்டன் எப்.எம். திட்டத்துடன் தொடர்புடைய கோவையும் இருப்பதாகவும் இலங்கையில் இத்திட்டத்துக்காக இலஞ்சம் வழங்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்களும் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

லிட் பிரித்தானியாவிலுள்ள ஆசிய இலட்சாதிபதியாவர். பிரித்தானிய

—20

# வடக்கில் நடந்திருந்தால்?

நமக்கு மாவீரர் தினம் என்றவுடனேயே நினைவுக்கு வருவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினமாகும். அத் தினத்தை அவர் மறந்தாலும் நாடு பூராவும் அதனைப் பலத்த பாதுகாப்புடன் ஒரு மாத காலத்துக்கு முன்பிருந்தே அரசாங்கம் விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கத்துக்கு வந்து விட்டது தெரிந்ததே.

அனைவரும் பிரபாகரனின் பிறந்த நாளான அன்று ஏதாவது பாரிய தாக்குதல் நடத்தபடலாமென எதிர்பார்ப்பதும் வழக்கமாகிவிட்டது. எதிர்பார்த்தது போல அன்றைய தினம் தாக்குதல் சம்பவமொன்று நடக்கவே செய்தது!

ஆனால் அந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் புலிகள் அல்ல. கடற்படையினர். தாக்குதல் நடத்தப்பட்டதொ சிங்களப் பொது மக்கள் மீது. அவர்களது வீடுகள் மற்றும் உடமைகள் மீது.

நவம்பர் 24 அன்று பூஸா கடற்படைமுகாம் அதிகாரிகள் சிலருக்கும் காலியிலள்ள பிட்டிவல்ல கிராமத்தினை சேர்ந்த இளைஞர்கள் சிலரக்கும் ஏற்பட்ட வாய்ர்தர்க்கத்தை அடுத்து நவம்பர் 26 அன்று நள்ளிரவு அக்கிராமத்துள் புகுந்து இவ்வதிகாரிகள் 80 வீடுகளுக்கும் ஊர் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்ததுடன் கிராம மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பிரபாகரனின் பிறந்த தினத்தை இவர்கள் புஸாவிலுள்ள சிங்களக் கிராமமொன்று மீது தாக்குதல் நடத்தியே இம் முறை கொண்டாடினர். முகாமின் இரண்டாம் நிலை அதிகாரி தொடர்பூடகங்களுக்கு கோப ஆவேசம் கொண்ட படையினர் சிலர் மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்திருந்தார். இச் செய்தி தொடர்பாக ராவய பத்திரிகையில் வெளிவந்திருந்த செய்திக் கட்டுரை ஒன்று இவ்வாறு தெரிவிக்கிறது.

"இவ் இரண்டாம் நிலை அதிகாரியின் அதிகாரத்தின் கீழ் இவ்வாறான சம்பவம் ஒன்று வட பகுதியில் நடைபெற்றிருந்தால் அயலிலுள்ள தமிழ்க் கிராமங்களைக் கடவுள் தான் காப்பாற்றியிருக்க வேண்டும். பிரபாகரன்கள் உருவாகியிருப்பது இவ்வாறான சம்பவங்கள் காரணமாகவே என எமக்கு இப்போது தெளிவாகிறது என இச் சம்பவம் தொடர்பாக அதே கிராமத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றில் ஊழியராகப் பணிபுரியும் ஜீ.ஜீ.கருணாரத்ன எனும் இளைஞர் கருத்து தெரிவித்தார்.

□

98 டிசம்பர் 10

சர்வதேச மனித உரிமைகள் தினம்




# சமாதான முயற்சியை ஆரம்பிக்கக் கோரி எழுச்சி விழா!

"வாழ்க்கைக்கு யுத்தம் வேண்டாம்! வாழ்வென்பது சமாதானம்! யுத்தமென்பது மரணம்! சமாதானமில்லாவிட்டால் மனிதாபிமா-னம் மனித உரிமைகள் எங்கே வாழ்க்கை சமாதானத்தை அழைக்கிறது. வாழ்க்கை நீண்ட பயணம்! யுத்தம் மரணக்குழியாகும்! சமாதான த்துக்கு வழி விடுங்கள்! என்ற முழக்கங்களுடன் சர்வதேச மனித உரிமைகள் தினமாகிய டிசம்பர் 10ஆம் திகதியன்று வாழ்தலுக்காக ஒரு நாள் என்ற நிகழ்ச்சியொன்றை நடாத்த மோர்ஜ் இயக்கத்தின் சார்பில் வாழ்தல் உரிமைக்கான கூட்டமைப்பு ஒழுங்கு செய்துள்ளது.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் காலை 8.30 முதல் நடைபெறவிருக்கும் ஒரு நாள் நிகழ்ச்சியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வின் போது 'இரு தழல் நடுவே பிஞ்சுப் பாதங்கள்' நெருப்புக் கண்ணீர்ப் பூக்கள் உங்கள் பார்வையில் இலங்கை என்ற தலைப்புக்களில் புகைப்படக் கண்காட்சியும் பெரல் வாதய என்ற தலைப்பில். காட்டுன் காட்சி ஓவியக் கண்காட்சி விதி நாடகம் மற்றும் ஆடல் பாடல் நிகழ்ச்சி-களும் நடைபெறவுள்ளன. இவற்றைத் தொடர்ந்து மாலை 3 மணியளவில் சமாதான பாத யாத்திரை விகார மகா தேவி பூங்காவிலிருந்து புறப்படும்.

மாலை 4 மணியளவில் அண்மையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எல்லைப்புறக்கிராம மக்களின் விபரங்களைத் திரட்டும் ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கை வெளியடப்-படும். இதனைத் தொடர்ந்து எல்லைக்கிராம வீதி நாடகங்கள், மலையக நடனம் என்பனவும் பெண்கள் உரிமை, கல்வியுரிமை, தோட்டப்புற மக்களின் உரிமை என்பவை தொடர்பான உரைகளும் நடைபெறும். இரவு 8 மணியளவில் யுத்தத்தினால் இறந்த அனைவரையும் நினைவு கூரும் தீபாராதனை நிகழ்ச்சி ஒன்றும் நடைபெறும்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் குறிப்-பாக மலையகம், மற்றும் எல்லைப்புறக் கிராமங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுவதாக விழா ஏற்பாட்டாளர்களில் ஒருவர் தெரிவித்தார். விழா ஏற்பாட்டுக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ள "எம்மை வாழ விடுங்கள்" என்று கோரும் துண்டுப்பிரசுரம் ஒன்று உடனடியாக சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பீர் என்று அனைத்து அரசு அரசு-சார்பற்ற துப்பாக்கி நபர்களையும் நிர்ப்பந்திக்க இந்த விழாவில் கலந்து கொள்ள வருமாறு அனைத்து மக்களையும் நோக்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

□

**அண்மையில் பசறையில் நடத்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தின் பின்னர் இன்னமும் தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கப்படாதும், மாறாக தொழிலாளர்கள் தரப்பில் 34 பேரை கைது செய்யும்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதும், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளமையும் தெரிந்ததே.கைது செய்யம்படி உத்தரவிடப்பட்டுள்ள 34 பேரில் பதுளை மாவட்ட இ.தொ.கா. பராளுமன்ற உறுப்பினர் சென்னனும் ஒருவர் எனும் செய்தி மேலும் இப்பிரச்சினையின் தன்மையின்பால் அனைவரையும் அவதானிக்கத் தூண்டியிருந்தது. அவ்விடயம்குறித்த சென்னன் எம்.பி.யுடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.**



**"மலையகத்தில் வெளியிடங்களைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவருக்கே அரசு காணிகளை வழங்குகிறது!"**

**–சென்னன் எம்.பி.**

**சம்பந்தப்பட்ட போராட்டம் குறித்து...?**

அப்போராட்டம் நடத்தப்பட்டதில் எந்தவித கருத்துவேறுபாடும் எமக்குக் கிடையாது. ஆனால் அது ஆரம்பிக்கப்பட்ட முறையில் எமக்கு சிக்கல் இருந்தது. சகல தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடி திட்டமிட்டு முறையாக செய்யப்பட்டிருக்க வேண்டிய காரியம் அது. அப்படிச் செய்யப்படாமல் அரசியல் லாபம் கருதி அவசரப்பட்டமையே நிறைய பிரச்சினைகள் உருவாகக் காரணமாகியிருந்தது. என்ற போதும் எமது தொழிற்சங்கம் அப்போராட்டத்தில் இணைந்து தலைமையேற்கப் பின்நிற்கவில்லை.

**எப்படிப்பட்ட ஒத்துழைப்புகளை வழங்கினீர்கள்?**

எமது தொழிற்சங்கத்தை சேர்ந்த அனைவரையும் ஈடுபடுத்தினோம். போராட்ட காலங்களில் உணவு விநியோகித்தோம், பொலிஸாரிடமிருந்து தொழிலாளர்களை பாதுகாத்தோம் கொடுத்தோம். ஏனெனில் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே தொழிலாளர்களை உசுப்பிவிட்டு வன்முறைகளைத் தூண்டிவிட்டு போராட்டத்தை திசைதிருப்பும் முயற்சிகளை நிர்வாகம் மேற்கொண்டிருந்தது. அப்படியிருந்தும் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டது.

**பொலிஸார் தரப்பிலிருந்து நிர்வாகத்துக்கு அப்படி ஆதரவு வழங்கக் காரணமென்ன?**

அந்த நிர்வாகியின் மனைவி ஒரு நீதிபதி. எனவே நிர்வாகிக்கும் பொலிஸாருக்குமிடையில் நெருங்கிய உறவுண்டு. அந்த நிர்வாகியின் மனைவி கூறுவதை பொலிஸார் கேட்கின்றனர் என்பதே எனது கணிப்பு.

**பங்களா எரிப்புச் சம்பவம் பற்றி?**

சம்பவ நாள் இரவு 8.30 மணியளவில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. மூன்று பொலிஸார் சில கையாட்களை வைத்து லயத்தின் மீது கல்லெறிந்து கலாட்டா செய்ததாகவும் ஏனையோர் தப்பியோடிவிட்டதாகவும் பொலிஸார் மூவரையும் சுற்றி வளைத்துப் பிடித்து வைத்திருப்பதாகவும் அவர்களை என்ன செய்வதென்றும் கேட்டனர். நான் கேட்டேன் அவர்களிடம் துப்பாக்கிகள் உள்ளனவா என்று. அவர்களும் ஆம் என்றனர். நான் அவர்களை விடுவிக்கும்படி கூறினேன். பொறுப்பான எவராவது வந்தால் மட்டும் தான் தாங்கள் விடுவிக்க முடியுமெனத் தொழிலாளர்கள் கூறினார்கள். எனவே நான் எஸ்.பி.க்கு இதனை அறிவித்து உடனே அங்கு செல்லும்படி கூறினேன். எஸ்.பி. போய் சேரும் அதே நேரம், அங்கு பங்களா எரிந்து கொண்டிருந்தது.

**பொலிஸாருக்கு என்ன நேர்ந்தது?**

தீப்பிடித்ததோடு தொழிலாளர்களும், பொலிஸாரும் ஓடிவிட்டனர்.

**இந்தத் தீ வைப்பு எப்படி நேர்ந்திருக்கலாம் என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

நான் மறு நாள் சம்பவ இடத்துக்குச் சென்ற போது எரிப்பு இடங்களைப் பார்வையிட என்னை அனுமதிக்கவில்லை.

**ஏன்?**

விசாரணை நடக்கும் வேளையில் பார்க்கமுடியாதென்று கூறிவிட்டனர். பின்னர் அமைச்சர்கள், ஜனாதிபதி வரை விடயத்தைக் கொண்டு சென்றதன் பின் தான், நான் அவற்றைப் பார்க்க அனுமதியளித்தனர். தங்களுக்கும் இந்த தீவைப்புக்கும் எந்தச் சம்பந்தமுமில்லையென தொழிலாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் நிர்வாகமோ 500 தொழிலாளர்கள் வந்து இதனை செய்ததாகக் கூறுகின்றது.

**உங்களது கணிப்பென்ன?**

சில வேளைகளில் ஆத்திரமேற்பட்டு தொழிலாளர்களே இதனை செய்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் 50 நாட்கள் பொறுத்திருந்தார்கள், நிர்வாகம் தொழிலாளர்கள் மீது வெளியாட்களை வைத்து கலாட்டா மேற்கொண்டது. இதனால் ஆத்திரம் கொண்டிருக்கலாம்.

**இந்த சம்பவத்தோடு உங்களை எப்படித் தொடர்புபடுத்தி கைதுக்கு உத்தரவிட்டுள்ளனர்?**

ஆரம்பத்தில் கல்லெறிந்தனர், தீவைத்தனர் எனக்கூறி 27 பேரைக் கைது செய்தனர். பின்னர் 10 பேரைக் கேட்டனர். அதற்குப் பின்னர் என்னையும் சேர்த்து 34 பேரை கைது செய்யவேண்டுமென கூறியுள்ளனர். இன்னும் கொஞ்சம் நாள் போனால் இன்னும் பல பேரைக் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். நீதியை இவர்கள் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

**உங்கள் கைதுக்கு எந்தவகையில் சட்ட ரீதியிலான காரணம் கூறப்படுகிறது?**

ஒரு வழக்கறிஞர் கூறினாராம் எம்.பி.யின் பேரும் தானே அப்பட்டியலில் உள்ளது அவரையும் கைது செய்ய உத்தரவிடும்படி. நீதிபதியும் உடனே அப்படியென்றால் சபாநாயகரின் அனுமதியுடன் அவரை நீதிமன்றத்திடம் ஒப்படைக்குமாறு கூறியுள்ளார். இது சம்பந்தமாக இதுவரை பொலிஸாரோ அல்லது எவரோ சட்ட ரீதியில் என்னுடன் தொடர்பு கொள்ளவே இல்லை.

**உங்கள் கைதுக்கான சட்ட வாய்ப்புகள் உண்டா?**

முன்னர் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்ய வேண்டுமென்றால் சபாநாயகரின் அனுமதியைப் பெறல் அவசியம். ஆனால் இந்த அரசாங்கம் ஒரு சட்ட மூலமொன்றின் மூலம் அதனை திருத்தி அவ்வாறு சபாநாயகரின் அனுமதியைப் பெறத் தேவையில்லாமல் செய்துள்ளது. மற்றும்படி அப்போராட்டத்துடன் தொழிற்சங்க ரீதியிலான தொடர்பு இருந்ததே தவிர வேறு எந்தச் சம்பந்தமும் எனக்கு இல்லையே. சம்பந்தப்படுத்த முயற்சித்தால் அதற்கும் நாங்கள் தயாராகத் தான் இருக்கிறோம்.

**அண்மையில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது ரட்னசிறி விக்கிரமநாயக்கவுடன் தோட்டக் காணிகள் பகிர்ந்தளிப்பு விடயத்தில் இ.தொ.கா.வுடன் ஏற்பட்ட தகராறுக்கும் உங்கள் கைதுக்கும் தொடர்பிருப்பதாக கூறப்படுகிறதே?**

அப்படியொரு பிரச்சினை நீடிக்கத்தான் செய்கிறது. என்றாலும் அதற்கும் இதற்கும் எந்தவித தொடர்பும் இருக்கமுடியாது.

**தோட்டக்காணிகளை பகிர்ந்தளிக்கும் போது தோட்டத் தொழிலாளர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்கின்ற உடன்பாடு பிரேமதாச காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறப்பட்டதே?**

அப்படியொரு ஒப்பந்தத்தை தான் ஏற்க முடியாதென்றும், தான் விரும்பியோருக்கே காணிகளை வழங்குவதாகவும் அவர் பிடிவாதமாக பேசுகிறார் அமைச்சர்.

நாங்கள் இனவாதம் பேசவில்லையே. இத்தனையாண்டு காலம் யு.என்.பி.க்கும். ஸ்ரீ.ல.சு.க.வுக்கும் தானே ஆதரவளித்து வருகிறோம்.

**இறுதியில் என்ன முடிவெடுக்கப்பட்டுள்ளது?**

இதனை விசாரித்து முடிவெடுக்க இருவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஒருவர் லக்ஷமன் ஜயகொடி, இன்னொருவர் தி.மு.ஜயரத்ன. இவர்கள் இவரும் தான் முடிவெடுக்கப்போகிறார்கள் யார் கூறுவது சரியென்பதை.

**பிரேமதாச காலத்தில் செய்துகொள்ளப்பட்ட அவ்வொப்பந்தம் எழுத்துமூலம் செய்யப்பட்ட ஒன்றா அல்லது வெறும் வாய்மூலமானதா?**

எழுத்து மூலம் செய்யப்பட்டது அது. அவை குறித்த ஆவணங்களும் தலைவர் தொண்டமானால் சமர்ப்பிக்கப்பட்டன.

**அப்படியிருந்தும் அதன் பிறகு எத்தனையோ தடவை மலையகக் காணிகள் வெளியிடங்களைச் சேர்ந்த வேற்று சமூகத்தவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளனவே. அதன் போது இ.தொ.கா என்ன செய்தது?**

ஒரு சில பகுதிகளில் அப்படிப் போராடி 20 பேர்ச்சஸ் வாங்கியிருக்கிறோம். சில பகுதிகளில் ஏழு பேர்ச்சஸ் பெற்றுக்கொடுத்துள்ளோம். அங்கெல்லாம் முன்னனுரிமை தொழிலாளர்களுக்கும், ஏனையவை வேற்றாருக்கும் கொடுக்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்டதன் பிறகு அங்கு தொழில், கடன்வசதிக..., தொழிற்பேட்டைகள் என்பவற்றில் திரும்பவும் வெளியிடங்களிலிருந்து குடியேற்றப்பட்ட பெரும்பான்மை இனத்தவர்களுக்குத் தான் முன்னுரிமை வழங்கப்படுகின்றன. இதனை நாங்கள் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம்.

**மலையகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட கைதுகள், குடியேற்றங்கள், கலவரங்கள், ஏனைய அநியாயங்கள் இந்த அரசாங்கத்தில் அதிகளவில் தொடர்கின்ற நிலையில் இ.தொ.கா. அதனைப் பாதுகாத்து வருவதாகச் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டு பற்றி?**

கைதுகள் நடக்கின்ற போது நாங்கள் தொடர்பு கொண்டதன் பின் விடுவிக்க முடிகிறதே. பிறகென்ன வேண்டும். பிறகு அவர்களுடன் சண்டை பிடிப்பதில் என்ன நியாயமுண்டு. அரசாங்கத்திற்குள்ளிருந்து தான் பலவற்றை சாதிக்க முடிகிறது. நாங்கள் வெளியில் வந்தாலும் ஏனைய தமிழ்க்குழுக்கள் அரசுக்கு ஆதரவு வழங்கத் தான் செய்கின்றன. அப்படிச் செய்தால் மலையகத்தில் பலர் உயிர்த் தியாகம் புரிய வேண்டிவரும். வடகிழக்கு நிலைமைகளைப் போல் இங்கு அந்தளவு தயார் நிலையில் மக்கள் இல்லை.

**உங்கள் பதில்கள் அரசாங்கத்தை பாதுகாப்பதாகத் தானே இருக்கிறது?**

இல்லை, எங்கள் குறைகளை சுட்டிக் காட்டுகிறோம். அவைச் செய்யப்படாத பட்சத்தில் எங்களின் எதிர்ப்புகளைத் தெரிவிக்கிறோம். மற்றும்படி அரசாங்கத்தை பாதுகாக்கத்தான் வேண்டுமென்கிற எந்த நோக்கமும் எங்களுக்கு இல்லை. அதேவேளை வடகிழக்கு பிரச்சினை இனப்பிரச்சினை தான் அதற்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென்று துணிச்சலாக கூறுகின்ற ஒரே ஜனாதிபதி இந்த அம்மையார் தான்.

**வடக்கிழக்கு பிரச்சினையில் அரசு நியாயமாகத் தான் நடந்துகொள்கிறது என்பதா அதன் கருத்து?**

பேச்சுவார்த்தைக்குத் தயாராக, சரியோ பிழையோ ஒரு தீர்வையும் முன்வைத்திருக்கிறார்களே?

**அத்தீர்வுப் பொதி பிரச்சினையைத் தீர்த்துவிடுமென்பதா உங்கள் கருத்து?**

குறைநிறைகள் இருக்கலாம், மாற்றவேண்டியேற்படலாம், ஆனாலும் இத்தனை எதிர்ப்புகள் மத்தியில் முன் வைத்திருக்கிறதே. பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்க வேண்டுமென முன்வந்திருக்கிறதே.

**ஒட்டுமொத்தத்தில் இது நியாயமான அரசாங்கம் என்கிறீர்கள்?**

இல்லை, இது தான் நியாயமான தீர்வு என்று நான் கூறவில்லை. நாங்கள் மலையகப் பிரச்சினையில் அக்கறை செலுத்தவே விரும்புறோம்.

**தீர்வுப் பொதி தொடர்பில் கட்சி எடுத்திருக்கின்ற முடிவு தான் என்ன?**

இது வரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

**ஒரு முக்கிய பிரச்சினை குறித்து இது வரை எந்த முடிவும் கட்சிக்கு இல்லையென்கிறீர்களா?**

பல தடவை தலைவரால் இது குறித்து ஜனாதிபதியிடம் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**மலையக் கைதுகளுக்கு காரணமாக இருக்கின்ற அவசரகால சட்டத்துக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவது பற்றி?**

நாங்கள் இனியும் ஆதரவளிப்பதா என்பது குறித்து கலந்துரையாடி வருகிறோம். விரைவில் முடிவெடுப்போம். ஆனாலும் பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் அதே காரியங்கள் தொடர வாய்ப்புண்டு.

**அரசு பற்றி உங்களுக்குள்ள அதிருப்திகள் எவை?**

நீங்கள் குறிப்பட்டது போலவே கைது, அடையாள அட்டை பிரச்சினை மற்றும் காணிப் பகிர்ந்தளிப்பு என்பவை முக்கியமானவை. இப்பிரச்சினைகள் காரணமாக அரசுடன் முறிவு ஏற்பட்டாலும் ஆச்சிரியப்பட முடியாது.

**கிராமசேவகர் நியமன விவகாரம் குறித்து இன்னமும் இ.தொ.க. மௌனமாகவே உள்ளதே?**

உதாரணத்துக்கு ஊவாவுக்கு 66 பேர் கேட்டிருந்தோம். அவர்கள் 38 பேரைத் தந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் பலர் பெரும்பான்மை இனத்தவர்கள். மலையகத்த தமிழர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை முன்வைக்கும்படி நான் கேட்டிருக்கிறேன்.

**மலையக மக்கள் முன்னணி போன்ற அமைப்புகள் முன்வைத்து வந்த மலையக நிர்வாக அலகு கோரிக்கை குறித்து உங்கள் கட்சியின் முடிவு என்ன?**

பசறை பகுதியில் சரிபாதியாக தமிழ் சிங்கள மக்கள் வாழ்கின்ற போதும் ஏன் தமிழ் கிராம சேவகர்கள் உதவி அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்படக்கூடாது. வவுனியாவில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருந்த போதும் அங்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர்கள் நியமிப்பட்டிருக்கிறார்களே.

**மலையக நிர்வாக அலகு குறித்து நான் கேட்டேன்?**

வடகிழக்கில் பிரபாகரன், மலையகத்தில் தொண்டமான் தனிநாடு என ஏற்கெனவே பிரச்சாரம் செய்து வருகின்றனர். அதற்குத் தகுந்த மாதிரித்தான் அவர்கள் இப்படியான யோசனைகளை முன்வைத்திருக்கிறார்கள். இவர்கள் முன்வைத்திருப்பதைப் பார்த்தும் அப்படி அவர்கள் இனவாதம் பேசலாம். தனியலகு கோரிக்கை அங்கு முன்வைப்பது கடினம். அங்கு தமிழ் சிங்கள மக்கள் கலந்து வாழ்கின்றனர். புவியியல் சாத்தியம் இல்லை. மலையக மக்கள் முன்னணி போன்ற அமைப்புகள் முன் வைத்தால் அவை வெறும் கோரிக்கைகள் மாத்திரம் தான். ஆனால் நாங்கள் கோரினால் அவற்றில் பெருமளவு பெற்றே தீருகிறோம். எனவே அரசாங்கத்துடன் இருந்துகொண்டு தான் இதனை சாதிக்க முடியும்.

**ரத்தினபுரி சம்பவம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அதனை வன்மையாக கண்டிக்கிறோம். சம்பந்தப்பட்டவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. 410 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனுடன் தொடர்பில்லாத தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?**

அது குறித்து எமது எம்.பி. ராஜன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

**இல்லையே. பாதிக்கப்பட்டவர்களுக்கு இது வரை நியாயம் கிடைக்கச் செய்யவில்லையே?**

அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நாங்கள் கருத்திற்கொள்கின்ற அதே நேரம், அடித்தால் திருப்பி அடிக்க எமது மக்களுக்கு நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். இந்த சம்பவத்தில் கூட எமது பெண்களை கையைப் பிடித்து இழுத்து காடைத்தனம் புரிய முயற்சித்ததிலிருந்து தான் ஆரம்பமாகியிருக்கிறது. எனவே அவர்களைக் கொலை செய்யுமளவுக்கு எமது மக்களுக்கு துணிச்சல் வந்திருக்கிறதே. அதே வேளை அவர்கள் தீ வைத்ததும் நாங்கள் ஓடியிருக்கக் கூடாது. எதிர்த்து அடித்திருக்க வேண்டும். அப்படிப் பாடம் புகட்டியிருந்தால் 410 வீடுகள் எரிந்திருக்காது.

**அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட நிலையில், அதனை எதிர்க்காமல் அரசாங்கத்துடன் உள்ள உங்களுக்கும் பங்குண்டு அல்லவா?**

அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் இதனை செய்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறதே ஒழிய இதனை நிரூபிக்க வாய்ப்பில்லை. மேலும் ஐ.தே.க.வைச் சேர்ந்தவர்களும் இதனுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

**இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள?**

சம்பந்தப்பட்டவர்கள் மீது எதுவித சாட்சியமும் இல்லை எனக் கூறி வருகின்றனர். இதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதை விட நாங்களும் சில பேரை சாய்த்திருந்தோமென்றால் இனி இப்படி நடக்காது.

**அந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அடையாள வேலை நிறுத்தத்தை செய்யக்கோரி இந்திய வம்சாவழிப் பேரணிக்குள்ளிருந்த அமைப்புகள் கேட்டும் இ.தொ.கா அதனை மறுத்ததாகக் கூறப்படுகிறதே?**

தொழிற்சங்க ரீதியில் நாங்கள் வேலை நிறுத்தம் செய்யுமளவுக்கு ஒன்றும் செய்திருக்கத் தேவையில்லை. ஏன் நடத்த வேண்டும். அதில் என்ன நன்மையுண்டு. போராட்டம் நடத்தத்தான் வேண்டுமென சகலரும் தீர்மானத்துக்கு வந்திருந்தால் இ.தொ.கா. பின்நின்றிருக்காது.

**வேலை நிறுத்தத்துக்கு அத்தனை பலம் இல்லை என்கிறீர்களா?**

இல்லை. அதனை கடைசி ஆயுதமாகப் பாவித்திருக்க வேண்டும்.

**அப்படியென்றால் நடந்துமுடிந்த சம்பவம் அவ்வளவு முக்கியத்துவமற்றது என்பதா கருத்து?**

410 வீடுகள் எரிக்கப்பட்டது தான். ஆனால் வேலை நிறுத்தம் செய்யாமல் அரசாங்கத்துடன் பேசி நடவடிக்கை எடுக்க முடியும் என்று தான் நாங்கள் எண்ணினோம்.

**என்ன பேசி முடிவெடுத்தீர்கள்?**

அதனை பாராளுமன்ற உறுப்பினர் ராஜன் செய்து வருகிறார். மற்றும்படி சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காட்ட வேண்டுமே.

**–நேர்காணல்: ஆனந்தன்**

# தென்னந்தோட்டச் சொந்தக்காரர் யார்?

தென்மராட்சியிலுள்ள தனியார் பலருக்குச் சொந்தமான தென்னந் தோட்டங்களில் குடியேறியுள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறித் தங்கள் சொந்த இடங்களான வலிகாமம் பகுதிக்கு சென்று குடியேற வேண்டும் என்றும், இதன் மூலமாக மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்தும் அதே வேளை, யாழ்ப்பாணத்தில் நிலவும் தேங்காய்ப் பற்றாக்குறையை இத்தோட்டங்களை இயங்கச் செய்வதன் மூலம் ஈடுகட்ட முடியும் என்றும், இதனால் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகவும், தேங்காய்த் தோட்டங்களை மீளவும் இயங்கச் செய்வது தொடர்பாகவும் கட்டளைத் தளபதி (Jaffna Security forces commander) உடன் பேசுவதென்றும் பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

தென்மராட்சியில் ஒவ்வொன்றும் ஐம்பது அறுபது ஏக்கர் விஸ்தீரணமுள்ள பல பெரும் தென்னந் தோட்டங்கள் தனியாருக்குச் சொந்தமாக உள்ளன என்பதும், இத்தோட்டங்கள் பெருமுதலாளிகள் சிலரால் பிரிட்டிஷ் ஆட்சிக் காலமான 1900ம் ஆம் ஆண்டுகளிலேயே உருவாக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

90இல் யுத்தம் உக்ரமடைந்ததைத் தொடர்ந்தும், 95இல் ஏற்பட்ட இடப் பெயர்ச்சியை அடுத்தும் இத் தென்னம் தோட்டச் சொந்தக்காரர்கள் பலர் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்று விட்டார்கள் என்பதும் இதனால் பல தென்னந்தோட்டங்கள் நிர்வகிக்கப்படாமலே இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

தற்போது இத்தோட்டங்களில் வலிகாமத்திலிருந்தும் மற்றும் பல பிரதேசங்களிலிருந்தும் இடம்பெயர்ந்தது வந்தவர்கள் குடியேறியுள்ளனர். எனினும் இத் தோட்டங்களை வெளிநாட்டிலுள்ள அதன் சொந்தக்காரர்களும் அவர்களது உறவினர்களும் தாம் தொடர்ந்து நிர்வகிக்க முயற்சி எடுத்து வருகின்றனர்.

இவ்வேளையிலேயே பருத்தித்துறை பிரதேச சபையில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து அவ்வாறான தென்னந்தோட்டம் ஒன்றில் வசித்து வரும் ஆசிரியர் ஒருவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், ஏற்கனவே தீவுப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறிய பின்னர் படையினருடன் அங்கு சென்ற ஈ.பி.டி.பியினர் தமது உறுப்பினர்கள் மூலம் தீவுப்பகுதி வளங்களான தேங்காயை கொப்பறா செய்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்ததன் மூலமும், கடலட்டை, மீன் மற்றும் பனம் பொருட்களைக் கொழும்புக்கு ஏற்றுமதி செய்ததன் மூலமும், தீவுப்பகுதி மக்கள் அனாதரவாக விட்டுச் சென்ற கால்நடைகளை இறைச்சிக்காக படையினருக்குப் பிடித்துக் கொடுத்ததன் மூலமும் கோடிக்கணக்கில் சம்பாதித்தனர். அந்த ஈ.பி.டி.பியினர் தான் இப்போது இதற்கும் திட்டமிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தேங்காய் ஒன்று 25 அல்லது 30 ரூபாவுக்கு விற்பனையாவதும் இத்தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்ற ஒரு காரணமாயிருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

தீவுப்பகுதியிலிருந்து கொழும்புக்கு ஈ.பி.டி.பியினரால் இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் இடம் பெற்ற ஊழல்கள் தொடர்பாக ஈ.பி.டி.பியிலிருந்து விலகிய இராமேஸ்வரன், இராமமூர்த்தி எம்.பிக்கள் பிரஸ்தாபித்திருந்ததையும் அவர் சுட்டிக் காட்டினார்.

# குழந்தைகள் எங்கே? தேடுகிறார் சிறையிலிருந்து!

தற்போது வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்மணி தன்னுடன் கைது செய்யப்பட்ட இரு சிறு குழந்தைகளையும் தேடித் தரும்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது வெலிக்கடைச் சிறையிலிருக்கும் நடராஜ சுந்தரம் மகேஸ்வரி என்ற பெண்மணி 1997ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ம் திகதி கல்கிசைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவருடன் இவரது மகனான நடராஜசுந்தரம் கேதீஸ்வரன் (11) என்பவரையும் இவர்களுடன் இருந்து வந்த உறவினர் ஒருவரின் மகளான 9 வயதான தர்ஷினி இராஜநாயகம் என்பவரும் கைது செய்யப்பட்டுக் கல்கிசை பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

98.02.02ம் திகதி இவர் கல்கிசைப் பொலிஸிருந்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். இதற்கிடையில் சிறுவர் நீதிமன்றில் விசாரணை இருப்பதாகக் கூறி பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட இரு சிறுவர்களும் இவரிடம் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

இவ்விரு குழந்தைகளையும் தேடித் தருமாறு அவர் மனித உரிமைகளுக்கான மன்றத்தின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்களிடம் முறையிட்டிருக்கிறார்.

இது தொடர்பான தன்னாலியன்ற முயற்சிகளைத் தான் மேற்கொண்டதாகவும் இவ்விரு குழந்தைகளும் எங்கு தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தன்னால்இதுவரை கண்டு பிடிக்க முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

# மற்றவர்க்கு அனுமதியில்லை!

யாழ் மாவட்டத்திலுள்ள தீவுப்பகுதிகளுக்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் தவிர ஏனைய தமிழ் அமைப்புக்களின், உள்ளூராட்சி உறுப்பினர்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் விதிக்கப்பட்டுள்ள இத்தடை குறித்து ஏனைய தமிழ் அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

நவ.30ம் திகதி ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் சுயேட்சைக் குழு உறுப்பினர் வன்னியசிங்கம் குணசீலன் ஊர்காவற்றுறைக்குச் சென்ற போது அவர் மீது கிரனைட் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து பாதுகாப்புக் கருதி மறு அறிவித்தல் வரை இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதத தடையுத்தரவையடுத்து பிரதேச சபையின் அலுவலர்கள் நிமித்தம் யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப்பகுதிக்கு (நவ.6) சென்ற புளொட் உறுப்பினர்களும், அதற்கு முதல் நாள் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ உறுப்பினர்களும் அல்லைப்பிட்டிக்கு அப்பால் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிய வருகிறது

# பத்துப் பேர் மட்டும்!

பளை, வடமராட்சிப் பகுதிகளில் நவ.2ம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட பத்துப் பேர் வடமராட்சி 524வது படைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு :

நடேசு இராசகுமார் - உடுப்பிட்டி
ஜோகலிங்கம் குகன் - உடுப்பிட்டி
சுந்தரம் சண்முகநாதன் - உடுப்பிட்டி
வேலாயுதம் கமலதாஸ் - தொண்டமனாறு
தளையசிங்கம் ஸ்ரீரஞ்சன் - தொண்டமனாறு
சின்னத்துரை விக்கினேஸ்வரன் - தொண்டமனாறு
செல்வராசா மணிசிவன் - அச்செழு, நீர்வேலி
கஜேந்திரன் கபிலதாஸ் - அச்செழு, நீர்வேலி
கறுப்பையா கருணாகரன் - தாழையடி
தனபாலசிங்கம் பிரபாகரன் - புலோப்பளை, பளை

**தவறு**

இதழ 159ன் பக்கம் 9ல் வெளியாகிளிருந்த 'சீன அச்சுறுத்தல் என்கிற பூச்சாண்டி' என்ற கட்டுரையை எழுதியவர் ஆர்.எம். இம்தியாஸ் அவர்களாவர். அவரது பெயர் அக் கட்டுரையில் தவறுதலாக விடுபட்டு விட்டது. (ஆ-ர்)

# கப்பம்: இலகு தவணைமுறையிலும் கட்டலாம்!

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த நாகமுத்துதேவி என்பவரின் மகன் பிரான்ஸில் இருக்கிறார். கடந்த மாதம் இவரது வீட்டிற்கு வானில் சென்ற ரெலோவினர் உங்களது மகன் பிரான்சிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டார். நாளை காலை 9 மணிக்கு எங்களுடைய அலுவலகத்திற்கு உங்களுடன் பேசுவதற்காக அவர் போன் பண்ணுவார். எனவே நாளை காலை அலுவலகத்திற்கு வாருங்கள் எனச் சொல்லி விட்டுச் சென்றனராம். மறுநாள் தேவியும், அவரது மகள் ரதியும் ரெலோ முகாமுக்குச் சென்றனர். அங்கு அவர்களுக்கு தொலைபேசி அழைப்பு வரவில்லை.

ரெலோவினர் இவர்களை விசாரித்து விட்டு, மகன் வெளிநாட்டில் இருப்பதால் உடனடியாக ஐந்து லட்சம் ரூபா கட்ட வேண்டும். என்று கேட்டுள்ளனர்.

இவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தத் தமக்கு வசதி இல்லையென்று வாதிட்டிருக்கின்றனர். ரெலோவினரோ ஆகக் குறைந்து முதலில் ஐம்பதினாயிரம் ரூபாவாவது கட்ட வேண்டும் என்றும் பின்னர் இன்னொரு மிகுதி ஐம்பதினாயிரம் ரூபாவை இன்னும் ஒரு வாரத்தினுள் கட்ட வேண்டும். மிகுதி 3 இலட்சத்தையும் ஜனவரி மாதத்திற்கிடையில் பகுதி பகுதியாகக் கட்ட வேண்டும் எனவும் உத்தரவிட்டாராம். அத்துடன் மேற்கூறிய தொகையைக் கட்டுவதற்கு ஒப்பமிட்டச்சொல்லி மிரட்டவே தேவியும் மகள் ரதியும் மறுக்க, கத்தியைக் காட்டி அறைக்குள் விட்டுப் பூட்டியுள்ளனர். பின்னர் உனது மகளின் பூவையும், பொட்டையும் பறிப்போம். நாங்கள் நினைத்தால் உனது மகனை பிரான்சில் லைத்தே கொலை செய்வோம் எனவும் மிரட்டியுள்ளனர். அதனால் பீதியடைந்த தேவியும் ரதியும் வேறு வழியின்றி அவர்கள் காட்டிய பத்திரத்தில் ஒப்பமிட்டு விட்டு வந்துள்ளனர்.

இவர்கள் இச்சம்பவத்தைப் பற்றித் தற்போது மனித உரிமை ஆணைக் குழுவிடமும் பொலிசிலும் முறைப்பாடு செய்துள்ளனர். ○

# ஓசி டீ.வி., டெக்-இல்லை ஓசி உதை!

வசந்தராஜா சுதாகரன் (18) என்ற இளைஞர் புளொட்டின் பருத்தித்துறை முகாமிலிருந்து ஆயுதத்துடன் தப்பியோடி அருகிலுள்ள படை முகாமில் சரணடைந்திருக்கிறார்.

படையினரிடம் சரணடைந்த இவர் தற்போது காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

பருத்தித்துறை கற்கோவளத்தில் சுதாகரன் வீடியோக் கடையொன்றை நடாத்தி வந்தார்.

நவ.24ம் திகதி அந்த வீடியோக் கடைக்குச் சென்ற புளொட் உறுப்பினர்கள் தமக்கு ரீவியும் டெக்கும் தருமாறு கேட்டிருக்கிறார்கள். இவர் தர மறுக்கவே இவரைத் தமது முகாமுக்கு அழைத்து இரண்டு நாட்கள் தடுத்து வைத்துத் தாக்கியுள்ளார்கள். மூன்றாவது நாள் இவ்விளைஞர் அங்கிருந்த ஆயுதம் ஒன்றுடன் தப்பியோடி படை முகாமில் சரணடைந்திருக்கிறார். அதன் பின்பே இவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் எனத் தெரிய வருகிறது. ○

# கேள்வி சரிதானே?

ஒக். 17 அன்று வட்டுக்கோட்டையில் சண்முகம் கமலினி என்ற 16 வயதுச் சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய குற்றச்சாட்டின் பேரிலும் அதற்கு முதல் நாள் இன்னொரு பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க முயற்சித்த குற்றச்சாட்டின் பேரிலும் 6 கடற்படைச் சிப்பாய்கள் சுன்னாகம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். ஆனால், நீதிவானுடைய கட்டளையின்றி நீதிமன்றம் இயங்காதபடியால் இவர்களைத் தடுத்து வைத்திருக்க முயாது எனக்கூறி சுன்னாகம் பொலிசார் அவர்கள் ஆறு பேரையும் விடுவித்தனர்.

கருவாகே ஜெயதிலக, பிலியந்த விஜய பண்டார, வி.எச்.எஸ். சதரநாயக்கா, ஏ.எம்.ஏ.புத்ததாச, கே.கே.டி.யு. கன்னங்கர ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

அப்பாவித் தமிழர்களைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து வருடக் கணக்கில் விசாரணையின்றித் தடுத்து வைப்பதற்கு எந்த நீதிபதி அதிகாரமளித்தார்?

# பெட்டிசன் சக்கரவர்த்திகள்!

அண்மையில் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். கிளை அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் உயர் இராணுவ அதிகாரி ஒருவரைச் சந்தித்து இராணுவத்தினரால் காரணமின்றிக் கைது செய்யப்பட்ட ஒருவரின் விடுதலை பற்றிப் பேசினார்.

அப்போது அந்த இராணுவ அதிகாரி சொன்னாராம். நான் சிங்களச் சமூகத்தைச் சேர்ந்தவன். கைது செய்யப்பட்டிருப்பவரோ தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர். இவருக்கும் எனக்கும் எந்த விதமான கோபதாபமும் கிடையாது. அதேபோல் இவருக்கும் எனக்கும் எந்தவிதமான உறவுமில்லை. ஆனால், இவ்வளவு பெட்டிசன்களும் உங்களுடைய ஆட்களால் வரையப்பட்டவை எனக்கூறி ஒரு கட்டுப் பெட்டிசன்களைக் காட்டினாராம். அத்துடன் வருகிற பெட்டிசத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதும் தனது கடமை அல்லவா என்றாராம்.

வாழ்க, பெட்டிசன் சக்கரவர்த்திகள்! ○

# சிவசேகரம் நிராகரிக்கிறார்!

விபவி நிறுவனத்தின் ஆறாவதுசுதந்திர இலக்கிய விழாவில் பரிசுக்கான தெரிவுகள் பற்றியும் அவை வழங்கப்பட்ட முறை பற்றியும் 'முடிவு செய்தோர் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனரென்றே எண்ணுகிறேன். இந்நிலையில், இனி எப்பொழுதும் எனது படைப்பு எதையும் பரிசுக்காகப் பரிசீலனைக்கு எடுக்காதிருப்பின் நன்றியுடையவனாவேன் என தனக்கு வழங்கப்பட்ட பரிசை நிராகரித்துத் திருப்பி அனுப்பி சி. சிவசேகரம் அவர்கள் கடிதம் ஒன்றை விபவி நிறுவனத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

அக்கடிதம் வருமாறு:

1996ம் ஆண்டுத் தமிழ்க் கவிதைக்கான பரிசு முடிவு செய்யப்பட்ட விதம் பற்றி எனது மனவெறுப்பைத் தெரிவிக்கவே எழுதுகிறேன். சு. வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுதியான 'காலத்துயர்' நியாயவீனமாகப் புறமொதுக்கப்பட்டதென்பது எனது கருத்து. கவிதைக்கான பரிசை வில்வரெத்தினத்துடன் பகிர்வதை ஒரு கௌரவமாகக் கொண்டிருப்பேன். எனது தொகுதியைப் புறக்கணித்து வேறொருவருடன் நான் பகிர்ந்த பரிசை வில்வரத்தினத்துக்கு மட்டுமே வழங்கியிருப்பினும் மிகவும் களிப்புற்றிருப்பேன்.

பரிசுக்கான தெரிவுகள் பற்றியும் அவை வழங்கப்பட்ட முறை பற்றியும் முடிவு செய்தோர் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனரென்றே எண்ணுகிறேன். இந்நிலையில், இனி எப்பொழுதும் எனது படைப்பு எதையும் பரிசுக்காகப் பரிசீலனைக்கு எடுக்காதிருப்பின் நன்றியுடையவனாவேன்

பரிசையும் அது தொடர்பான ஆவணங்களையும் இத்துடன் மீள அனுப்புகிறேன் என அவர் அக்கடிதத்தில்குறிப்பிட்டுள்ளார். ○

# மாவீரர் தினப் பேச்சு —
# பிரபாகரன் சொன்னதும் சொல்லாததும்!

"நாம் சமாதானத்திற்கு கதவடைக்கவில்லை. சமாதான வழியில் பேச்சுக்களை நடாத்தி பிரச்சினையைத் தீர்க்கும் நாகரீகமான நடைமுறையையும் நாம் கைவிடவில்லை. சிங்களத் தலைமையின் நேர்மையில் எமக்கு நம்பிக்கையில்லை என்பதால் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால், சமாதானப் பேச்சுக்கு அரசு விதிக்கும் முன் நிபந்தனைகள் எதனையும் ஏற்க நாம் தயாராக இல்லை.

அத்தோடு, போர் ஓய்ந்த நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதார நெருக்குவாரங்களும் நீங்கிய இயல்பான சூழ்நிலையில் அரசியல் பேச்சுக்கள் நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம். நாம் பேச்சுக்கு முன்நிபந்தனைகள் விதிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கள் அமைதியான சூழ்நிலையில், நல்லெண்ண சூழ்நிலையில் எமது மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் துன்பங்கள் அகன்ற நிலையில் நிகழ்வதையே விரும்புகிறோம். எமது மண்ணில் இராணுவ ஆக்கிரமிப்பும், எமது மக்களின் பொருளாதார வாழ்வின் மீது தடைகளும், அரசின் அழுத்தங்களாக பிரயோகிக்கப்படும் போது, சுதந்திரமாக, சமத்துவமாக பேச்சுக்களை நடாத்துவது சாத்தியமில்லை என்பது எமது நிலைப்பாடு. எனவே அழுத்தங்களை நீக்குவது பற்றியும் அரசியல் பேச்சுக்கான அடிப்படைகளை வகுப்பது பற்றியும் ஆராய்ந்து பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்."

உலகெங்கிலும் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களது மாவீரர் தினப்பேச்சில் தெரிவிக்கப்பட்ட, சமாதானப் பேச்சுக்கான அழைப்பு இது. இப்பேச்சு அரசாங்கத்தை நேரடியாகப் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைக்காவிட்டாலும், தாம் அதற்குரிய தயார் நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெளிவாகத் தெரிவிப்பதாய் அமைந்திருக்கிறது.

எந்தவிதமான நிபந்தனைகளையும், விதிக்காமல் நாம் பேச்சுவார்த்தைக்கு வரத் தயார் என்று இப்பேச்சில் பிரபாகரன் தெரிவித்துள்ள போதும், சில அடிப்படையான நிபந்தனைகளை அவர் தெரிவித்துத் தான் உள்ளார். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், அரசாங்க நிபந்தனைகைளை ஏற்பதில்லை என்ற இரண்டும் அவரது பேச்சில் தெரிவிக்கப்பட்டுள்ள மிக முக்கியமான நிபந்தனைகளாக கொள்ளப்பட வேண்டும். இரண்டு நிபந்தனைகளையும் தான் தெரிவிப்பதற்கான காரணங்களையும் அவர் தெரிவித்துள்ளார். அந்தக் காரணங்கள், தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றை தெரிந்து கொண்ட எவருக்கும் மறுக்கமுடியாத காரணங்கள் என்பதில் ஐயமில்லை.

அரசாங்கத்தின் முன் நிபந்தனைகளைப் பொறுத்தவரை, அது புலிகளை ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு தமிழீழத்தையும் கைவிடுவதாக அறிவித்து விட்டு பேச வரும்படி கோரியிருக்கிறது. அப்போது தான் தம்மால் பேச முடியும் என்று திரும்பத் திரும்ப அது கூறிவருகிறது. இவற்றில் ஆயுதங்களைக் கீழே போடு என்று நிபந்தனை விதிப்பது, பேச்சுவார்த்தைக்கான கதவுகளுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போடும் செயலே அன்றி வேறல்ல. அத்தகைய ஒரு கோரிக்கையை வைப்பதை யுத்தத்தைத் தொடரும் வெறியிலிருந்து எழும் ஒரு கோரிக்கை என்றே அர்த்தப்படுத்த முடியும். ஏற்கெனவே ஆயுதங்களைக் கீழே போட்ட முன்னாள் விடுதலை இயக்கங்கள் இன்று தமது அந்தச் செயலுக்காக கழிவிரக்கப் படுவது தெரியாததல்ல!

ஆனால், அரசாங்கத்தின் தமிழீழத்தை கைவிட்டு மாற்றுத் தீர்வொன்றுக்குப் புலிகள் முன்வர வேண்டும் என்ற நிபந்தனையை பிரபாகரன் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவரின் பேச்சிலிருந்து தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அவர் தமது பேச்சில், தமது கோரிக்கை தமிழீழமே தான் என்று அடித்துப்பேசவில்லை. அப்படிப் பேசுவது பேச்சுவார்த்தைக்கான வழியைத் திறந்து வைத்திருக்கிறோம் என்பதற்கு முரணானது என்பதை அவர் தெரிந்து வைத்திருக்கிறார். இதை அவரது பேச்சு தெளிவாகக் காட்டியிருக்கிறது.

அவர் தமது கோரிக்கையை உணர்வுபூர்வமான மொழியில் மிகவும் எளிமையான வடிவில் இப்படித் தெரியப்படுத்தியுள்ளார்:

"நாமும் மனிதர்கள். மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கொண்ட ஒரு மனித சமூகம். தனித்துவமான மொழியையும், பண்பாட்டு வாழ்வையும், வரலாற்றையும் கொண்ட ஒரு தனித்துவமான இனத்தைச் சார்ந்த மனிதர்கள். நாம் எம்மை ஒரு மனித சமூகமாக மனிதப் பண்புகளைக்



கொண்ட மக்களாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கிறோம்.... நாமே எம்மை ஆளும் வகையில் ஓர் ஆட்சி முறையை அமைத்து வாழவே நாம் விரும்புகிறோம்..."

ஆம், அந்தக் கோரிக்கை, தமிழீழமல்ல, ஆனால், எதற்காக நாம் தமிழீழத்தை கோருகிறோமோ அதை வழங்கக்கூடிய 'ஒரு ஆட்சி முறையை'யே குறிப்பிடுகிறது. ஆக, புலிகள் தமிழீழத்துக்கு உரிய ஒரு மாற்றை தாம் ஏற்கத் தயார் என்பதைத் தெரிவித்துள்ளார்கள் என்பது தெளிவு.

மொத்தத்தில், பிரபாகரன் தனது பேச்சில் தாம் சமாதானத்திற்கு தயாரென்றும், அதை எந்த அடிப்படையில் அணுகுவதை தாம் விரும்புகிறோம் என்பதையும் தெளிவாகவே கூறியிருக்கிறார். கூடவே அந்த அடிப்படைகளைப் பற்றி ஆராய்ந்து பார்க்க தாம் தயார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த மாவீரர் தினப் பேச்சு சமாதானத்தை கோருவதுடன் மட்டும் நிற்கவில்லை. தமது அரசியல் குறிக்கோள்கள் அடையப்படும் வரை தாம் தொடர்ந்து போராடத் தயாராகவே உள்ளனர் என்றும், தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைக்கு பரவலான ஆதரவு சர்வதேச சமூகத்தால் வழங்கப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது என்றும் தெரிவித்துள்ளது. குறிப்பாக, தெற்கிலே சமாதானத்திற்கான குரல் பலமாக இல்லை என்றும், யுத்தத்தை எதிர்ப்பவர்கள் இல்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

மிகவும் அவதானமாக தயாரிக்கப்பட்ட செட்டும் அழகும் நிறைந்த இந்தப் பேச்சு கவனத்திலெடுக்காத விடயங்கள் இங்கே தான் இருக்கின்றன. தமது இலட்சிய உறுதிப்பாட்டையும், அரசியலின் நியாயத் தன்மையையும், அரசாங்கத்தின் யுத்த முகத்தையும் அதன் விளைவுகளையும் மிகத்துல்லியமாக வெளிப்படுத்திய இந்தப்பேச்சு, சமாதானத்தை நோக்கிய ஒரு அறைகூவலாக கொள்ளப்படலாம்: கொள்ளப்பட வேண்டும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால், சர்வதேச சமூகம் பற்றியும், தென்னிலங்கையின் அபிப்பிராயம் பற்றியும் கூறும்போது பிரபாகரன் கவனத்தில் எடுக்கத் தவறிய முக்கியமான விடயம் ஒன்றும் உள்ளது.

பொதுவான ஜனநாயகவாதிகளாலும் சமாதானம், தமிழ் மக்களின் அரசியல் விடுதலை என்பவற்றில் அக்கறை உள்ள அனைவராலும் எதிர்பார்க்கப்படுகின்ற இந்தப் பேச்சின் போது தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட முக்கிய விடயம் அது.

சர்வதேச மற்றும் தென்னிலங்கை மக்களது ஆதரவை தமது போராட்டத்தை நோக்கி வென்றெடுக்கக்கூடிய ஒரு விடயமும் கூட அது.

ஆம், அதுதான் முழு இலங்கையிலும் வாழும் மக்களும் சமாதானத்தை விரும்புகிறார்கள்: ஜனநாயத்தை நேசிக்கிறார்கள்: தமது உரிமைகளை மதிக்கிறார்கள்: அவை பறிக்கப்படுவதை - அது யாரால் பறிக்கப்பட்டாலும், எதிர்க்கிறார்கள் என்ற விடயம். தென்னிலங்கை மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதை அண்மைய கருத்துக்கணிப்பொன்று தெளிவாகக் காட்டியுள்ளது. ஆனால், இந்த மக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாளர்களாக, அவர்களது அரசியல் கோரிக்கையின் நியாயத் தன்மையை ஏற்பவர்களாக முற்றுமுழுதாக மாறாதது ஏன்?

இந்த இடத்தில் தான் விடுதலைப் புலிகள் சற்று தமது வரலாற்றின் பலவீனமான பக்கத்தை ஒரு முறை மறுபரிசீலனை செய்வது அவசியம் என்பது புலனாகிறது.

ஆம், விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதிகளாக' தமிழ் 'இன வெறியர்களாக' இனங்காட்டும். சம்பவங்களைத் தவிர்ப்பது பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டும். அதற்கான அக்கறை தம்மிடையே உள்ளதென்பதை தெளிவாக அவர்கள் மக்கள் முன் முன்வைத்திருக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கிலிருந்து புலிகளால்வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீளத் தமது இடங்களில் வந்து குடியேறுவதைத் தாம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருக்க வேண்டும். அப்படியான ஒரு குடியேற்றத்தை நடைமுறைப் படுத்தக்கூடிய சமூக ஸ்தாபனங்களுக்கு தமது ஆதரவும் ஒத்துழைப்பும் உண்டு என்று தெரிவித்திருக்க வேண்டும்.

தென்னிலங்கையில் வாழும் சிங்கள மக்கள், எல்லைப்புற கிராமங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் யாரும் தமது யுத்த நடவடிக்கைகளின் இலக்குகளாகிவிடக்கூடிய ஒரு சாத்தியம் ஒருபோதும் நடவாது என்று தெரிவித்திருக்க வேண்டும்.

அரசியல் முரண்பாடுகளை - தனிநபர்களுடனான கருத்து முரண்பாடுகளை - அரசியல் ரீதியாகவே எதிர்கொள்வோம் என்று அறிவித்திருக்க வேண்டும்.

தவறான அல்லது முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்களை எதிரிகளாக தாம் கருதி நடக்கவில்லை: நடக்கப் போவதில்லை: அப்படி நடந்திருந்தால் அச்சம்பவங்களுக்கு தாம் மன்னிப்புக் கோருகிறோம் என்று தெரிவித்திருக்க வேண்டும். அப்படி அதை நடைமுறைப்படுத்த முயற்சிகளைத் தொடர்வதாகக் கூறியிருக்க வேண்டும்.

இவைகள் ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் பிரபாகரனிடமிருந்து முன்வைக்கப்பட்டிருந்தால், நிச்சயமாக தெற்கிலும் சர்வதேச ரீதியிலும் ஆதரவு பெருகி வரும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மாவீரர் தினப்பேச்சு இவற்றைக் கொண்டிருக்கவில்லை.

இது ஒரு துரதிருஷ்டம் தான்.

ஆயினும், இன்னமும் காலம் தாழ்ந்து விடவில்லை.

அரசாங்கமும், அதன் ஆதரவு புத்தி ஜீவிகளும், பிரசார சாதனங்களும் இனவாதிகளும் என்ன தான் கூறினாலும் இத்தகைய ஒரு அறிவிப்பை இனியாவது வெளியிடுவதன் மூலமாக புலிகள் தமது அரசியல் பலத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். அதாவது தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்டத்தில் நியாயத் தன்மைக்கான ஆதரவுப் பலத்தை வளர்த்துக்கொள்ள முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் பேச முன்வராவிட்டாலும் கூட, அதனை அதற்காக நிர்ப்பந்திக்கும் சக்திகளின் - இன்றும் கூட அதைப் பலர் செய்கிறார்கள்- தார்மீகப்பலம் இவ்வறிவிப்பால் மேலும் பலம் பெறும்.

இந்தப் பலம்; தமிழ் மக்களின் அரசியல் உரிமையின் பலமாக வளரும். தமிழீழ விடுதலைப் புலிகள் அவசியமாக சிந்திக்க வேண்டிய விடயம் இது!

ஆம்.

# யுத்த சூழலும், எல்லைக்கிராமப் பெண்களும்.

—ரத்னா



யுத்தத்தின் பிரதிபலனால் உருவானவை எல்லைக் கிராமங்கள். இவ் எல்லைக் கிராமங்களின் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டது. அதிலும் குறிப்பாக இவ் எல்லைக் கிராமங்களில் வாழும் பெண்களின் நிலைமை தொடர்பாக கவனம் செலுத்துவதும் அதிமுக்கியமான விடயமாகும். இப்பெண்களின் பிரச்சினைகளை எல்லைக் கிராமங்களில் நேரடியாகச் சென்று அறிவதன் மூலமே விளங்கிக் கொள்ள முடியும்.

இதன்படி யுத்தச் சூழல் இப்பெண்களை எவ்வாறு பாதித்துள்ளது என்பது குறித்து அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலர் ஒன்றிணைந்து, நவ.23,24,25ம் திகதிகளில் பொலனறுவை எல்லைக் கிராமங்களுக்கு விஜயம் செய்தோம்.

பொலனறுவை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாக விளங்கும் சிங்கபுர, கந்தக்கடுவ, திம்புலான, சூரியவெவ, பெரகும்பய என்பவற்றைச் சேர்ந்த பெண்களை சந்திக்கும் வாய்ப்பு இதனால் கிட்டியது. முற்றிலும் மாறுபட்ட இராணுவச் சூழல். ஒரு புறம் யுத்தம் நடைபெறும் எல்லை.

நீங்கள் ஒரு தமிழ் பெண் என்று உங்களால் பெருமையாகக் கூறிக் கொள்ள முடியாது. இருப்பினும் அங்கு வாழும் சிங்களப் பெண்கள் தொடர்பான, அவர்களின் பிரச்சினைகள் சிலவற்றை விளங்கிக் கொள்ள இப்பயணம் பெரும் பங்களிப்பு வழங்கியது.

**குடியேற்ற வரலாறும் பெண்களை அது பாதித்த விதமும்**

அவ் ஒவ்வொரு கிராமமும் சுமார் 50, 60 குடும்பங்களைக் கொண்டது. 92, 93 காலப்பகுதிகளில் பதுளை பிரதேசத்திலிருந்தும், இரத்தினபுரி பிரதேசத்திலிருந்தும் விவசாயம் செய்ய காணி தருவதாகக் கூறி அழைத்து வரப்பட்டு இவர்கள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். மின் வசதியோ, குடிநீர் வசதியோ, வீட்டு வசதியோ இன்றி இவர்கள் அல்லல்படுகின்றனர்.

குறிப்பாக, இங்கு வாழும் பெண்களின் கல்விநிலை மிக மோசமாகக் காணப்படுகின்றது. பெண்களின் கல்வி இடை நிறுத்தப்படுகின்றது. மிகச் சிறுவயதிலேயே திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர். 'எங்கள் அம்மாவுக்கு நான் சுமையாக விளங்கியதால் 17 வயதிலேயே நான் திருமணம் முடிக்க வேண்டியேற்பட்டது' என்கிறார் பிரேமா. தாம் இங்கு வாராதிருந்தால் கல்வியைத் தொடரும் சந்தர்ப்பம் தமக்கு நிச்சயம் கிடைத்திருக்கும் என்பது அப்பெண்கள் பலரது அபிப்பிராயமாகவிருந்தது.

சிங்கபுரவில் அமைந்திருக்கும் இராணுவ முகாம், இக்கிராமங்களின் பாதுகாவலனாக அமைந்திருக்கின்றது. (கிராமங்களுக்குப் பாதுகாப்பாக இராணுவ முகாமா, அல்லது இராணுவ முகாமுக்குப் பாதுகாப்பாக கிராமங்களா, என்பது உங்கள் ஊகத்துக்கு விடப்படுகின்றது) இதன்படி, இவர்களின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இராணுவத்தினரின் உதவி மிக முக்கியமானதாக உள்ளது.

**பொருளாதார பலவீனம்**

இம்மக்களுக்கு காணிகள் அடர்ந்த காட்டின் எல்லைகளிலேயே வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இவர்களுக்கு இக்காணிகளுக்கான உறுதி வழங்கப்படவில்லை. மகாவலி காணி அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான இப்பிரதேசத்தில் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதனால், விவசாயம் செய்வதற்கு உர வகைகள் என்பன கடன் வசதி அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. அறுவடையீட்டியவுடன் அவர்களுக்கு முன்னால் உள்ள கடனானது அவர்களுக்கு எந்தவிதமான இலாபத்தையும் ஈட்டித்தரும் வாய்ப்பையும் வழங்கவில்லை என்பது தெரிகின்றது.

பொதுவாக, விவசாயம் செய்வதில் இக்கிராமப் பெண்களின் பங்களிப்பு உயர்வாக உள்ளது. நம்முடன் உரையாடிய ஒவ்வொரு பெண்ணிடமும் வயலுக்குச் செல்லும் அவசரத்தைக் காணக் கூடியதாகவிருந்தது.

விடுதலைப் புலிகளின் பிரச்சினை ஒரு புறம், காட்டு யானைகளின் பிரச்சினை ஒருபுறமுமாக காணப்படும் இச்சூழ்நிலையில், பெரும்பாலும் வயலைப் பாதுகாப்பவர்களாகவும் இப்பெண்களே விளங்குகின்றனர். பெரும்பாலான பெண்களின் கணவன்மார்கள் ஊர்காவல் படையில் இணைந்துள்ளனர். இரவு விவசாயக் காணிக்கான காவல்களிலும் இவர்களே ஈடுபடுகின்றனர். யுத்தச் சூழலினால் அவர்களது விளைபொருட்களை வெளியிடங்களுக்கு விற்கக் கொண்டு செல்ல முடியாத நிலை உள்ளது. இது மாற்று வருவாய்க்குத் தடையாக உள்ளது.

விவசாயம் செய்யும் வேளையிலும், ஊர்காவல் தொழில்புரியும் வேளையிலும் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி கணவன்மார்களை இழந்த பெண்கள் இங்கு அனேகம். இவர்கள் மாற்று வருவாய்க்கு எந்தவித வழியுமின்றி உள்ளனர்.

சிங்கபுரம், சிங்கபுரத்தைச் சேர்ந்த ஏனைய கிராமங்களுக்கிடையில் எந்தவித வைத்தியசாலை வசதிகளோ, மருத்துவ வசதிகளோ கிடையாது. அவசர நோயாளர்கள், பிரசவ அவஸ்தைப்படும் கர்ப்பிணிகள் இராணுவ வண்டிகளில் எடுத்துச் செல்லப்படுகின்ற அதேவேளை, ஏனைய நோய்களுக்கான வைத்தியம் இராணுவத்தினராலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இவ் இராணுவ முகாமில் வைத்தியர் ஒருவர் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாம் அரசாங்கத்தினை நம்பி மோசம் போனோம் என்பதே இவர்கள் அனைவரதும் அபிப்பிராயம். தம்மை எந்த அரசாங்கமும் எண்ணிப் பார்ப்பதில்லை. குடியேற்றுவதில் அக்கறை காட்டிய போதும், தம்மை ஒழுங்காக வாழவைக்க எவருக்கும் எண்ணமில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

**இராணுவமய கலாசாரம்**

சிங்கபுர இராணுவ முகாமைச் சூழ்ந்ததாக இக்கிராமங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. இராணுவத்தினரில் தான் இக்கிராமங்கள் பெரிதும் தங்கியுள்ளன. இதனால் அங்கு ஒரு இராணுவமயப்பட்ட கலாசாரமொன்று நிலவுகின்றதெனலாம்.

இராணுவத்தினரின் ரோந்தும், வாகனங்களின் படையெடுப்பும் இங்கு சாதாரண வழமையாகும். நாம் அவர்களுடன் உரையாடிய வேளைகளில், பெரும்பாலான பெண்கள், இராணுவத்தினரால் தமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படவில்லை. அவர்கள் எமக்கு கடவுள் போன்றவர்கள் எனத் தெரிவித்திருந்தனர். மேலும், பெண்கள் ஒழுங்காக இருந்தால் படையினர் ஏன் வம்புக்கு வருகின்றார்கள் என்பது அப்பெண்களின் பொதுவான கருத்து.

இருப்பினும் சுமனாவதி எனும் பெண் இராணுவத்தினரால் தமக்கேற்பட்ட அவலத்தைச் சுட்டிக் காட்ட பின் நிற்கவில்லை. "இரவில் ரோந்து செல்லும் இராணுவத்தினரால் தனக்கு பலவித தொந்தரவுகள் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார். தண்ணீர் கேட்கும் வகையில் வீட்டைத் தட்டி கதவைத் திறக்கச் சொல்வார்கள். நான் மறுத்தனால், என் மீது உள்ள ஆத்திரத்தை, என் கணவன் மீது காட்டினர். சிறு தவறுகளை சுட்டிக்காட்டி அவரை அடித்து துன்புறுத்தினர். இறுதியில் எனது கணவர் ஊர்காவல் படையில் இருந்து விலக நேரிட்டது" என்றார் அவர். அவர் மேலும், அக்கிராமத்தில் எட்டு முறை படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளான ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி உள்ளார் என்றும் கூறினார்.

பொதுவாக, இராணுவத்தினரை அண்டி வாழும் இவ்வாறான சந்தர்ப்ப சூழ்நிலைகள், அங்கு வாழும் பெண்களை பல்வேறு நெருக்கடிகளுக்கு இட்டுச் சென்றுள்ளது. வேறு பொருளாதார மார்க்கங்கள் இன்றி, அனாதைகளாகும் பெண்கள், இராணு வத்தினரின் பாலியல் நுகர்வுப் பண்டங்களாக மாறும் நிலை பரவலாக காணப்படுகின்றது. இந்தத் தவிர்க்கவியலாத தன்மை அவர்களுக்கு இராணுவத்தில் அவர்களைத் தங்கியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளி விட்டுள்ளது.

**பெண்கள் ஒன்றுபடுதலின் தேவை**

சிங்கபுரவில் உள்ள அப்பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளுக்கு போதிய பண வசதியோ, தொழிநுட்ப வசதிகளோ அங்கு இல்லை. விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்ட, கொல்லப்பட்ட நபர்களின் துணைவிகளுக்கு அவ் இராணுவ முகாமில் சிறு சிறு ஊழியம் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அங்கு வாழும் ஆண்களுக்கு, பெண்கள் ஒன்றுபட வேண்டிய தேவையை அறிவுறுத்துவது, என்பது சவாலான விடயமாக விருந்தது. பெரும்பாலான பெண்கள், இவ்வாறான பெண்கள் சந்திப்புக்களுக்குச் சென்று விட்டு வீடு திரும்பினால் தமது கணவன்மார்களிடம் அடி உதை தான் கிடைக்கும் என்றனர்.

எவ்வாறாயினும், எம்மால் அவர்களை அறிவுறுத்தவே முடிந்தது. குறிப்பாக இராணுவமயமான ஒரு கலாசாரத்துள் ஊறித்திளைத்திருந்த இப் பெண்களை தைரியமூட்ட மட்டுமே முடிந்தது. ◻

---

# எங்கே சுதந்திரம்? யாருடைய கதை?

அண்மையில் கொழும்பு எல்பின்ஸ்டன் அரங்கில் அரச தமிழ் நாடகவிழா நடைபெற்றது அறிந்ததே. இந்நாடக விழாவில் அருணா செல்லத்துரை, ஜுனைதீன், மவுரன்பன் போன்ற முன்னோடிக் கலைஞர்களும் தங்களுடைய நாடகங்களை அரங்கேற்றியிருந்தார்கள்.

அவற்றில் சிறந்த காட்சியமைப்பு, சிறந்த இசை, ஒப்பனை போன்றவையுடன் உயிரோட்டமுள்ள நடிப்பும் காணப்பட்டது. அவர்கள் மேடையை சரிவர பயன்படுத்தி நடித்தார்கள். இருந்தும் கூட, அவர்களது நாடகங்கள் ஏனோ தெரிவு செய்யப்படவில்லை. உண்மையில் அகதிமுகாம் என்ற நாடகம் சமகாலத்தையொட்டிய இன்று நாட்டில் நிலவும் யுத்தம் அதனால் புலம்பெயர்ந்த மக்கள் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றை தத்ருபமாக படம் பிடித்துக் காட்டியது.

இன்று உலகெங்கும் நடக்கும் ஒரு கொடூரமான செயல் யுத்தம். அதனால் அகதிகளாக்கப்பட்டு அவர்கள் படும் துயர் வேதனை, துன்பங்கள் அனைத்தையும் தொட்டதோடு ஒரு சர்வதேசப் பிரச்சினையான அகதிகளின் உண்மை நிலையை பிரதிபலித்த நாடகம் ஏனோ நடுவர்கள் கண்களில் படவில்லை.

மாறாக, "எங்கே சுதந்திரம்" என்ற நாடகத்துக்கு விருது வழங்கப்பட்டது வியக்கத்தக்கது. குறிப்பாக மலையகத்தில் உள்ள ஒரு சில பிரச்சினைகளை திரிபுபடுத்தி முற்றிலும் சினிமாப்பாணியில் அமைக்கப்பட்ட ஒரு நாடகம் 'எங்கே சுதந்திரம்'.

நான் அங்கு வந்து அனைத்து நாடகங்களையும் அவதானித்தேன். உண்மைக்கு மாறான சில விடயங்கள் "எங்கே சுதந்திரம்" என்ற நாடகத்தில் பிரதிபலித்தன. எங்கள் பிரதேசமான மத்துகம பகுதியிலும் தோட்டங்கள் உள்ளன. எங்கள் உறவினர்கள் ஏனைய தோட்டப் புறங்களில் வாழுகின்றனர். நானும் மலையகப் பகுதியிலேயே கல்வி கற்றவன் என்ற வகையில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

## நாடகத்தில் ஒரு சில காட்சிகள்:

ஒரு தோட்ட சுப்பிரீன்டன் சாதாரண கிரச்எட்டேன்னுடன் காதல் கொள்கின்றார். அப்படி நடப்பது என்பது குதிரைக் கொம்பு. அதேபோல் தோட்டங்களில் பிரசவ வேதனையில் துடிக்கும் ஒருவருக்கு கேற்றை மூடிவைப்பது என்பது நிச்சயமாக நடக்காது. அப்படி இது வரைக்கும் முழு மலையகத்தை எடுத்துப் பார்த்தாலும் எங்குமே நிகழ்ந்திருக்க முடியாது. அத்தோடு மேடை நாடகம் என்பது நாடகமாகவே இருக்க வேண்டுமே தவிர, சினிமாவைப் போல் இருத்தல் கூடாது. இவை பெரும்பாலும் சினிமாத் தழுவல். எம்.ஜி.ஆர். போன்று பேசுதல், சிவாஜி பேசும் வசனங்களை புகுத்தல் போன்றவைகள் நாடகத்தைத் தாண்டி அப்பால் செல்லும் ஒரு போக்கு. அத்தோடு காட்சியமைப்பிலே தேயிலை மரங்களை அப்படியே மேடையில் நட்டுவைத்து நடித்தமை போன்றவை நாடகத்தின் உண்மையான தன்மையை குறைத்துவிட்டது. "எங்கே சுதந்திரம்" என்ற நாடகம் மொத்தத்தில் நடிகர்கள் யாருமே மேடையைப் பாவிக்கவில்லை.

இத்தனை குறைகளோடு நான் அண்மையில் சந்தனம் சத்தியநாதனின் வழி பிறக்குமா? சிறுகதைத்தொகுதியை வாசித்தேன். அந்த நூலின் 37ம் பக்கம் 7வது சிறுகதையான "உரிமை" என்ற சிறுகதையின் கருவும் "எங்கே சுதந்திரம்" என்ற நாடகத்தின் கருவும் ஒரே மாதிரியாக உள்ளதையுணர்ந்தேன்.

அன்று நாடகவிழாவின்போது கதை வசனம் இயக்கம் மலையக வாசுதேவன் என்று அறிவிக்கப்பட்டது. உண்மையிலே இந்த நூலை வாசித்தபின் எனக்குப் பெரும் அதிர்ச்சியாக உள்ளது.

எனவே இதன் உண்மை நிலை என்ன என்பது எனக்குப் புரியவில்லை. அரச நாடக விழாவில் இப்படி ஒரு பிசகு எப்படி நடந்தது? நாடகப் பிரதியை நடுவர்கள் வாசித்தார்களா என்பது சந்தேகத்துக்குரியது.

உண்மைக்குப் புறம்பான விடயங்களை புகுத்தி யாரோ எழுதிய கதையை தன்னுடைய கதை என கூறி அரங்கேற்றப்பட்ட நாடகம் எப்படி சிறந்த நாடகமாக தெரிவு செய்யப்பட்டது?

பாத்திமா பர்ஹானா,
மத்துகம



# இந்திய அரசியல்: காங்கிரஸ் ஆட்சியை நிறுவுமா?

பரந்தாமன்

**இந்தியாவில்** ராஜஸ்தான் மத்தியப் பிரதேசம், புதுடில்லி, மீசோர்ராம், மாநில சட்டசபைத் தேர்தல்கள் முடிவடைந்து விட்டன. எதிர்பார்த்ததைவிட டில்லியிலும், ராஜஸ்தானிலும் காங்கிரஸ் கட்சி 2/3பெரும்பான்மையுடன் அமோக வெற்றியினை ஈட்டியுள்ளது. காங்கிரஸ் பலத்த தோல்வியினைத் தழுவும் என எதிர்பார்த்திருந்த மத்தியப் பிரதேசத்திலும் கூட அது சுமாரான வெற்றியைப் பெற்று ஆட்சியினைத் தக்க வைத்துள்ளது. வடகிழக்கு மாநிலமான மீசோராமில் மீசோராம் தேசிய முன்னணி, மீசோராம் மக்கள் மாநாட்டுக் கட்சி என்பவற்றின் கூட்டணி அமோகமாக வெற்றிபெற்று மீண்டும் ஒரு தடவை வட கிழக்கு மாநிலங்கள் தேசிய அரசியலிலிருந்து விலகியுள்ளன என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளன.

இந்த நான்கு மாநிலங்களும் ஒரே வகையில் இந்திய அரசியலில் முக்கியத்துவம் பெற்றவையாகும். புதுடில்லி, தேசிய தலைநகர்ப் பகுதி என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. தேசியத் தலைநகரம் என்ற வகையில், இப்பகுதி தேசிய அரசியலிலும் சர்வதேச அரசியலிலும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இதைவிட தலைநகர் பகுதி சர்வதேச அரசியலிலும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. தலைநகர் பகுதி என்றபெயரில் இப்பிரதேசத்தின் பூர்வீகமாக வாழ்ந்தவர்களைவிட வந்தேறு குடிகளே அதிகம் பல்வேறு இனங்களையும், பல்வேறு மாநிலங்களையும் பூர்வீகமாகக் கொண்டவர்கள் இங்கு வாழ்கின்றார்கள். இதனால் நடைமுறை அரசியல் பற்றி பல்வேறு தரப்பட்டவர்களும் என்ன நினைக்கின்றார்கள் என்பதை அறியும், பரிசோதனைக் களமாகவும் அரசியல் நோக்கர்கள் புதுடில்லியைக் கருதுகிறார்கள்.



புதுடில்லியின் தற்போதைய முதலமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்தவர். மாநில அரசில் அமைச்சராகவும் இருந்தவர். இனி வரப்போகும் காங்கிரஸ் முதலமைச்சர் ஷீலா தீட்சித் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த பெண்மணியாவார்.

மத்தியப் பிரதேசமும், ராஜஸ்தானும் இந்தியாவில் அதி கூடிய நிலப்பரப்பினைக் கொண்ட மாநிலங்களாகும். நிலப்பரப்பினைப் பொறுத்த வரை இந்தியாவிலேயே முதலாவதாக, மத்தியப் பிரதேசமும், இரண்டாவதாக ராஜஸ்தானும் விளங்குகிறது. சனத்தொகையைப் பொறுத்தவரை மத்தியப் பிரதேசம் 6ம் இடத்திலும், ராஜஸ்தான் 9 ம் இடத்திலும் உள்ளது. இரண்டுமே ஹிந்தி மொழிபேசும் மக்களைக் கொண்ட மாநிலங்கள். ராஜஸ்தானில் ராஜஸ்தானி மொழியும், ஒரு மொழியாகப் பேசப்படுகின்ற போதும், ஹிந்தி மொழி பேசுபவர்களே அதிகமாக உள்ளனர். இந்திய மக்கள் தொகையில் சுமார் 13 வீதத்தினர் இவ் இரு மாநிலங்களிலும் வாழ்கின்றனர். இதைவிட பிரதான இருகட்சிகளான பா.ஜ.க.வினதும், காங்கிரசினதும் பலப்பரீட்சையை தீர்மானிக்கும் மாநிலங்களாக இவை உள்ளன. இந்தியாவில் பிரதான அணு-நிலையமான "பொக்காரா" ராஜஸ்தான் மாநிலத்திலேயே உள்ளது.

மீசோராம் மாநிலம், தேசிய அரசியலில் அதிகளவிலான பாதிப்பினைச் செலுத்தாத மாநிலமாக இருப்பதுடன் தேசிய அரசியலில் இருந்து விலகிச் செல்லும் மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. யூனியன் பிரதேசமாக இருந்து மீசோராம் தேசிய முன்னணியின் ஆயுதப் போராட்ட முயற்சியால் 1986ல் தனி மாநில அந்தஸ்தினைப் பெற்றது. மத்திய அரசுக்கு எதிராக, கிளர்ச்சியை நடாத்திய மக்கள் தேசிய அரசியல் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று அறியும் களமாகவும் இம்மாநிலம் உள்ளது. 84விகிதம் கிறிஸ்தவ மக்களைக் கொண்ட மாநிலமாகவும் இது உள்ளது. மீசோராம் உட்பட வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப் பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர், அஸாம், திரிபுரா என்கின்ற அனைத்தும் இன்று தேசிய அரசியலில் இருந்து விலகியே நிற்கின்றன.

இவ்வாறான முக்கியத்துவத்தின் அடிப்படையில் தான் தேர்தல் முறைகள், இந்திய அரசியலில் எதிர்காலத்தில் என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்பது இன்று பலரினதும் கேள்விகளாக உள்ளன. குறிப்பாக இம்முடிவுகள் தற்போதுள்ள பா.ஜ.கவை கவிழ்க்குமா என்ற கேள்வி பிரதானமாக எழுந்துள்ளது.

## தேர்தல் முழவுகள் பா-ஜ-க- வை கவிழ்க்குமா?

தற்போதுள்ள பா.ஜ.கவின் ஆட்சி கவிழ்தல் என்பது பிரதானமாக இருவிடயங்களில் தங்கியுள்ளது. ஒன்று, காங்கிரஸ் ஆட்சியமைக்கத் தயாராக இருக்க வேண்டும். மற்றையது, பா.ஜ.க. அரசியலிலிருந்து கூட்டணிக் கட்சிகள் விலகவேண்டும்.

முதலாவது விடயத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ் ஆட்சியமைக்கத் தயாரா என்பதற்கு இதுவரை காங்கிரசிலிருந்து இல்லையென்றே பதில் வந்துள்ளது. காங்கிரசின் வரலாற்றிலேயே பொதுவாக அது தொங்கு அரசாங்கத்தை விரும்புவதில்லை. அறுதிப் பெரும்பான்மை அரசாங்கத்தையே விரும்பி வந்துள்ளது. சில மாநில கட்சியுடன் மாநில நலன்களின் அடிப்படையில் கூட்டுச் சேர்ந்தாலும், தனித்து காங்கிரசிற்கு அறுதிப்பெரும்பான்மை மத்தியில் இருக்கும்போதே ஆட்சி அமைக்கத் தயாராகின்றது.

ஜெயலலிதா போன்றோருடன் கூட அவ்வாறான நிலையிலேயே அது உறவுகளை விரும்புகிறது. தற்போதுள்ள நிலையில் ஜெயலலிதாவை நம்பி உறவு வைக்க காங்கிரஸ் தயாராக இல்லை. மத்தியில் தான் பலமான நிலையில் நின்று கொண்டு உறவு வைக்க விரும்புகிறது. அவ்வுறவும் கூட மக்களவைக்கான கணிசமான தளங்களை தமிழ்நாட்டில் இருந்து காங்கிரஸ் நேரடியாகப் பெற்றுக்கொள்வதையே நோக்காகக் கொண்டது.

கூட்டணிக் கட்சிகளுடன் இணைவதைவிட கூட்டணியிலுள்ள நபர்களை விலைக்கு வாங்கி தன்னுடன் கரைத்துக் கொள்வதிலேயே அது அக்கறைக் கொண்டுள்ளது. நரசிம்மராவ் அரசாங்க காலத்தில் இவ்வாறு ஜனதா தளத்திலிருந்து சிலரை விலைக்கு வாங்கியே தனது ஐந்து வருட ஆட்சிக்காலத்தை அவர் பூரணமாக தக்கவைத்துக் கொண்டார்.

இன்றைய அரசியற் சூழ்நிலையில், தான் நேரடியாக ஆட்சிசெய்வதைவிட தனது பொம்மை ஆட்சியொன்றை நிறுவுவதற்கு காங்கிரஸ் முயலாம். 1990ல் வி.பி.சிங் அரசாங்கம் கவிழ்ந்தபோது சந்திரசேகரைக் கொண்டு ஒரு பொம்மை ஆட்சியைக் காங்கிரஸ் அமைத்திருந்தது. தற்போதும் அவ்வாறான முயற்சிகள் தொடர்வதாகவே செய்திகள் வருகின்றன. தனிப்பட்ட வகையில் சோனியாவின் நண்பரும், மார்க்ஸிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்தத் தலைவர்களில் ஒருவரும், மேற்கு வங்காள முதலமைச்சருமான ஜோதிபாசுவை பிரதமராக்கும் முயற்சியே திரைமறைவில் நடைபெறுகின்றதாக அச்செய்திகள் தெரிவிக்கின்றன.



இதனைச் சாத்தியமாக்க வேண்டுமாயின் ஜெயலலிதா அதனை ஆதரிக்க வேண்டும். ஜெயலலிதா ஆதரிப்பதாயின் கருணாநிதி ஆட்சியைக் கலைப்பதை நிபந்தனையாக முன்வைப்பார்.

கருணாநிதி இடதுசாரிக் கட்சிகளின் நீண்டகால நண்பராதலால் அவர்கள் அதற்கு முன்வருவார்கள் என எதிர்பார்க்க முடியாது. தற்செயலாக அவர்கள் அதற்கு இணங்கினால் கூட தமிழக மக்கள் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதனால் தமிழகத்தில் மட்டுமல்ல நாடுமுழுவதும் கூட கிளர்ச்சிகளை சந்திக்க வேண்டிநேரிடலாம். அண்மையில், பீகார் மாநில கலைப்பு முயற்சியில் அவ்வாறான நிகழ்வே ஏற்பட்டது. பொதுவாக நாட்டில் இரு கூட்டு கட்சிமுறை நிகழும்போது எதிர்காலத்தில் இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களுக்கான கலைப்புகள் கடினமானதாகவே இருக்கும்.

இதனைவிட மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை கூட அதன் உள்ளக நிலையில் காங்கிரசுடனான உறவு கடினமானதாகவே இருக்கும். அண்மையில் இக்கட்சியின் 16வது மாநாட்டிலும் இது எதிரொலித்தது. மதசார்பின்மை சக்திகளின் ஐக்கியத்தைக் காரணமாகக் காட்டி காங்கிரசுடனான உறவை நியாயப்படுத்த கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித் முயன்றபோதும், அதற்கு கட்சியின் இளையதலை முறையினர் காரசாரமான எதிர்ப்பைக் காட்டினர். இதைவிட இக்கட்சி ஆட்சி பீடத்தில் உள்ள மாநிலங்களான மேற்கு வங்காளம், கேரளம், திரிபுரா என்பவற்றில் உள்ளூர் பிரதான போட்டியாளர்களாக காங்கிரஸ் திகழ்வதும் கட்சிக்கு உள்ளூர் அளவில் பலத்த சிக்கல்களைக் கொடுத்துள்ளது. மேற்கு வங்காளத்தில் கடந்த மக்களவைத் தேர்தலில் மம்தா பனர்ஜியின் திரிணாமூல் காங்கிரசின் வருகையினால் இந்நிலை சற்றுமாறிய போதும், கேரளா, திரிபுராவைப் பொறுத்தவரை இந்நிலையே தொடர்கின்றது.

எனவே காங்கிரஸ் ஆட்சியமைப்பதற்கோ அல்லது தனது ஆரதவில் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவுவதற்கோ சாத்தியங்கள் மிகக்குறைவாக உள்ளது என்றே கூறவேண்டும்.

இரண்டாவது விடயத்தைப் பொறுத்தவரை பா.ஜ.கூட்டணியிலிருந்து கூட்டணிக் கட்சிகள் விலக வேண்டும். இதற்கும் நடைமுறையில் சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளது. கூட்டணிக் கட்சிகளில் பெரும்பாலானவை மாநிலக் கட்சிகள். அங்கு அவை முதலாம் இரண்டாம் நிலைகளில் உள்ளன. அ.தி.மு.க. திரிணாமூல் காங்கிரஸ் என்பவற்றைத் தவிர்த்தால் ஏனைய கட்சிகளுக்கு மாநில அளவில் காங்கிரசே பிரதான போட்டியாளராக உள்ளது. குறிப்பாக பஞ்சாப்பில் அகாலிதள், ஆந்திராவில் தெலுங்கு தேசம், ஒரிசாவில் பியூஜனதா தளம், ஹரியானாவில் ஹரியானா லோக்தளம் என்பவற்றிற்கு மாநில அளவில் காங்கிரசே பிரதான போட்டியாளராக உள்ளது. இதனால் காங்கிரஸ் அணியில் இவர்களுக்கு இயலுமானதல்ல. கூட்டணியில் அடுத்த முக்கியமான கட்சியான திரிணாமூல் காங்கிரசைப் பொறுத்தவரைகூட மேற்கு வங்காளத்தில் தனது பிரதான போட்டியாளரான மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் மோதுவதற்கு பாரதீய ஜனதாவின் ஆதரவு தேவை. எனவே உறவை முறிக்க முடியாது. இராமகிருஸ்ண ஹெக்டேயின் லோக் சக்தி, இராமதாசின் பா.ம.க., வை.கோவின் ம.தி.மு.க., ஜோர்ஜ் பெர்ணான்டசின் சமதாக் கட்சி என்பன மாநில அளவில் மூன்றாம் முடிவு எடுக்க கூடியவை என்ற வகையில் தற்போது அவசரப்படப் போவதில்லை. தற்போதைக்கு அவர்களுக்கு பா.ஜ.கவுடன் இணைந்திருப்பதே பாதுகாப்பானதாக இருக்கும்.

இங்கு ஜெயலலிதாவின் நிலைதான் அவரின் நலனைப்பொறுத்து மாறுபடலாம்.



ஆட்சிக் கவிழ்ப்பு அவரின் நலன்களை உத்தரவாதப் படுத்தாதவகையில் தற்போதைக்கு அவர் விலகுவதும் சாத்தியமற்றதாகவே இருக்கும்.

எனவே பா.ஜ.கட்சி ஆட்சி இன்னும் சிறிது காலத்திற்கு தப்பி பிழைக்கும் வாய்ப்பே அதிகம் உள்ளது.

எனினும் காங்கிரஸ் சும்மா இருக்கப் போவதில்லை. ஆட்சிக்கு தொடர்ச்சியாக தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கும். அதிலும் தானாக கொடுப்பதைவிட பா.ஜ.கவின் எதிர் அணியில் இருக்கும் கட்சிகளைக் கொண்டும் ஜெயலலிதாவின் கட்சிகளைக் கொண்டும் தொந்தரவு கொடுக்க முற்படலாம். அதற்கான முயற்சிகள் இப்போதே தொடங்கிவிட்டன.

அண்மையில் பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமானபோது இடதுசாரி உறுப்பினர்கள் சபாநாயகர் பாலயோகியைச் சுற்றி "ஆட்சியை இராஜினாமாச் செய்" என்ற கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் சபாநாயர் இரு தடவை கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்டது. இவ்வளவு நடந்தபோதும் காங்கிரஸ் உறுப்பினர்கள் அதில் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் சிரித்தபடியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இது விடயத்தில் சோனியாவின் எண்ணம் நாங்கள் எதுவும் முறிக்க வேண்டாம். பாரதீய ஜனதா ஆட்சி தானாகவே கலையும். அதுவரை பொறுத்திருப்போம்" என்பதே ஆகும். □

# மணிரத்தினத்தின் சினிமாவும், அதன் அரசியலும்

அ.இரவி

(இறுதிப்பகுதி)

மணிரத்தினத்தின் சினிமா சொன்ன அரசியல் எத்தகையது எனப் பார்ப்போம். ஒடுக்குகின்ற அரசக்குத் துணை போகின்ற அரசியல். இதுவே மணிரத்தினத்தின் அரசியல். ஒடுக்குகின்ற அரசு இந்தியாவாக இருந்தால், அது பார்ப்பனியத்தை வலியுறுத்துகின்ற இந்துத்துவத்தை உயர்த்திப் பிடிக்கின்ற அரசாக இருக்கும். இலங்கையாக இருந்தால் சிங்கள பௌத்த இனவாத அரசாக இருக்கும். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இருக்கக் கூடிய ஒரேயொரு வித்தியாசம் இந்தியாவில் பெரும்பான்மையானோர் பிராமணரல்லாதவர். ஆனால், இலங்கையில் பெரும்பான்மையானோர் சிங்கள பௌத்தர். எனினும், இந்தியாவில் சகல மட்டங்களிலும் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்களாகப் பிராமணர்களே அமர்ந்திருக்கிறார்கள். இந்த உண்மையையும் நாம் மறக்க முடியாது. ஒடுக்குகின்ற அரசு என்ற வகையில் அதிகாரம் செலுத்துகின்ற கருத்து எதுவோ, அது தன்னைத் தவிர்ந்த மற்றைய அனைத்துக் கருத்தையும் ஒடுக்கியே தீரும். ஒடுக்குகின்ற தன்மையில் மாறுபாடு இருக்கலாம். ஆனால், ஒடுக்குமுறை ஒன்றாகவே இருக்கும் மணிரத்தினத்தின் சினிமா ஒடுக்குகின்ற அரசை எப்படி நியாயப்படுத்துகின்றது?

ஒரு திரைப்படம் முடிவடைந்த பின்னர் அந்தத் திரைப்படம் எங்களிடம் பதிந்து விட்டுப்போன செய்தி என்ன? இதுவே ஒரு திரைப்படம் முழுமையாகச் சொல்லி முடித்துவிட்ட செய்தி. இடையிடையே வரும் காட்சிகள் தனித்துத்தந்த செய்திகளை நாம் முழுமையான செய்தியாகக் கூறி விட முடியாது. பகுதியிலிருந்து முழுமைக்குப் போகின்ற செய்தி.

மணிரத்தினத்தின் ஒவ்வொரு திரைப்படங்களும் கூறிமுடித்த செய்தி என்ன? முக்கியமாக ரோஜா, பம்பாய், இருவர், உயிரே. இந்தத் திரைப்படங்களை நாம் பார்ப்போம். இந்தத் திரைப்படங்கள் தனித்துத் தனித்துத் தந்த செய்தியும், எல்லாத் திரைப்படங்களையும் ஒரு சேரப் பார்த்து அவை முழுமையாக எமக்குக் கூறிய செய்தி தான் என்ன?

வசதி கருதி நாம் மௌனராகம், நாயகன், தளபதி திரைப் படங்களிலும் சில காட்சிகளைப் பார்ப்போம்.

மௌனராகம் திரைப்படத்தில் கார்த்திக் சூழலினால் தீவிரவாதியாகிறார் அவர் சுட்டுக்கொல்லப்படுகின்றார். நாயகன் திரைப்படத்தில் கமல்ஹாசன் அவர் மீது திணிக்கப்பட்ட அரச வன்முறையினால் வன்முறையாளராக மாறுகின்றார். பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்காக வன்முறையைக் கையிலேந்துகின்றார். "நாலுபேருக்கு நல்லதுக்காக எதுவும் செய்யலாம்" என்கின்ற மனநிலை. "வன்முறையை அவர்களை நிறுத்தச் சொல்லு நான் நிறுத்துகின்றேன்." என்கின்றார். ஆனால், வன்முறையை அரசோ, அரசைச் சார்ந்த ஏனைய நிறுவனங்களோ நிறுத்தவில்லை. ஆனால், கமல்ஹாசன் நிறுத்துகின்றார். அதாவது சுட்டுக் கொல்லப்படுகின்றார். கொன்றது யார்? மணிரத்தினத்தின் ஒரு பாத்திரம் வினை விதைத்தவன் வினை அறுப்பான் எனும் மதவாதத்தை நியாயப்படுத்தும் பாத்திரம். தளபதி திரைப்படத்தில் ரஜனிகாந்த் ஒரு வன்முறையாளராகச் சித்திரிக்கப்படுகின்றார். அவரை ஒரு பிராமணப் பெண் விரும்புகின்றார். காதலில் தோல்வி அடைய முடியாத, தான் விரும்புகின்ற பெண்ணை அடையக் கூடிய 'இமேஜ்' கொண்ட கதாநாயகனான ரஜனிகாந்த் இந்தத் திரைப்படத்தில் தான் விரும்பிய பெண்ணை அடையவில்லை. அடையாததற்கு இரண்டு காரணம். ஒன்று அவர் பிராமணப் பெண்ணாக இருக்கிறார். மற்றது அப்பெண் ரஜனிகாந்தை விரும்பினாலும் அவர் வன்முறையை விரும்பவில்லை. இன்னும் இரண்டு விசயம்: அந்தப் பெண் ரஜனிகாந்தை வேட்டையாட விரும்புகிற ஒரு அரச அதிகாரியை திருமணம் செய்கிறார். மற்றையது ரஜனிகாந்த் ஒரு விதவைப் பெண்ணை மறுமணம் செய்கின்றார். விதவைப் பெண்ணின் மறுமணம் என்ற நல்ல செயல் அல்ல இங்கு நோக்கம். அந்தப் பெண் விதவையானதற்கு ரஜனிகாந்தின் வன்முறையே காரணம்.

மேற்சொன்ன இவ்வளவு காட்சிகளும் மணிரத்தினத்தின் திறமையாலும், செய்நேர்த்தியாலும் அழகாகப் படம் பிடிக்கப்பட்டது மாத்திரமல்ல: அழகாக நியாயப்படுத்துகிறது. ஒடுக்குகின்ற அரசினது வன்முறைகள் காட்டப்பட்டாலும், அரசினது வன்முறைக்கு எதிரான போராட்டம் வெற்றி பெற்றதாகக் காட்டப்படவில்லை. மாறாக, வன்முறையைக் கையில் தூக்கியவர்கள் வன்முறையாலேயே அழிவார்கள் எனும் அரசின் வாசகங்களை மெய்ப்பிப்பதற்காகவே, நியாயப்படுத்துவதாகவே அமைகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் இதே கருத்துக்கொண்ட இன்னொரு திரைப்படமும் நினைவில் வருகின்றது. கமல்ஹாசனின் தயாரிப்பான குருதிப்புனல். தீவிரவாதத்தைக் கையில் எடுத்தவர்கள் தீவிரவாதத்தாலேயே அழிவார்கள் என்கின்ற அரசின் தாரக மந்திரத்தை அந்தத் திரைப்படமும் கூறினாலும், அந்தத் தீவிரவாதத்தைக் கையிலெடுப்பதற்குக் காரணமே அரசு தான் என்பதை அந்தத் திரைப்படம் கூறிவிடுகின்றது.

மணிரத்தினத்தின் சினிமா என்கின்ற புத்தகத்தில், ஓரிடத்தில் யமுனா ராஜேந்திரன் இப்படியாகக் கூறுகின்றார். "மணிரத்தினம் சினிமா இயக்குநராக இருந்து இதைச் செய்கிறார். அரசியல்வாதியாக அவர் இல்லை என்பதுவே இங்கு முக்கியம்." (பக்.55) யமுனா ராஜேந்திரன் கூறிய அர்த்தம் வேறு. ஆனால், இந்த வாக்கியத்தில் ஓர் உண்மை உண்டு. இந்தியாவின் அதிகாரத் தரப்பு அரசியல்வாதி அரசியலில் என்ன செய்கின்றாரோ அதனையே மணிரத்தினம் சினிமாவில் தன் சகல வல்லமைகளையும் பயன்படுத்திச் செய்கின்றார். அது என்ன?

காஷ்மீர் மக்களுக்குப் பிரச்சினை இல்லையா? சுதந்திர இந்தியாவில் அவர்களுக்கு சுதந்திரம் இருக்கின்றதா? ஒடுக்குமுறைக்கு உள்ளான அவர்கள் ஆயுதம் தாங்கியது எந்த வகையில் அநியாயம்? பாகிஸ்தானின் அரசியல் ஆயுத உதவி தான் அவர்களை ஆயுதம் தூக்க நிர்ப்பந்தித்தது? இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு கேள்வியும் கேட்கலாம். இந்தியா வழங்கிய ஆயுத உதவி தான் இலங்கைத் தமிழர்களிடையே ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்ததா? இதற்கான பதில் எங்களுக்குத் தெரிந்த ஒன்று தான். சரி காஷ்மீருக்கே போவோம். காஷ்மீர் போராட்டம் எந்த வகையில் நியாயமில்லை? இதற்கான பதில் மணிரத்தினத்திடம் இல்லை. ஆனால், காஷ்மீர் போராட்டத்திற்கு மக்களிடம் அனுதாபம் கிடைக்கக் கூடாது. அந்தப் போராட்டம் கொடூரமானது என்று காட்ட வேண்டும். இந்திய அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய வேலைகளின் ஒரு பகுதியை மணிரத்தினம் பொறுப்பேற்று இருக்கின்றார். 'ரோஜா' படம் உருவாகின்றது. இதனையே யமுனா ராஜேந்திரன் கூறுகின்றார். "மணிரத்தினத்திற்கென்று ஒரு அரசியல் இருந்தது. தேசபக்தி அரசியல் அவரது அரசியல். அந்த அரசியலே மணிரத்தினத்தினத்தை ஒடுக்கப்படுகின்ற மக்களின் நியாயப்பாட்டைப் புரியமுடியாது வைத்திருக்கின்றது. தேச பக்தி ஒன்றும் பாவமான காரியம் அல்ல. அது நல்ல விசயமே. ஆனால், மணிரத்தினத்தின் அரசியல் தேசபக்தியுடன் மாத்திரம் நின்று விடவில்லை. அரச விசுவாசியாகவும் அவர் தன்னை இனங்காட்டுகின்றார். வலுவான திரைக்கதையுடன் கூடிய பிரதியொன்றினை தன் (அல்லது அரசின்) கருத்துக்குச் சரியாகத் தயாரித்திருக்கிறார்.



வாழ்க்கையின் இன்ப துன்பங்களைத் துய்க்கும் கணத்துக்காகக் காத்திருக்கும் புதுமணத் தம்பதிகளைப் பிரித்து ஒருவரை அடைத்து வைத்து மற்றவரைத் துடிக்க வைக்கும் கொடுமை செய்தது எது? அரச வன்முறையா? போராளிகளின் தீவிரவாதமா? இந்தத் திரைப்படம் போராளிகளின் தீவிரவாதத்தையே பதிலாகத் தருகின்றது. இந்தத் திரைப்படம் சொல்கிற செய்தியில் யார் மீது கோபம் எழ வழிவகை செய்யப்பட்டிருக்கிறது? போராளிகள் மீதே.





சரி இன்னொரு காட்சியையும் மறந்து விடுவதற்கில்லை. கதையின் நாயகன் இந்தியத் தேசியக்கொடி எரிபடுகின்ற இடத்தில் உணர்ச்சி வசப்பட்டு தன்மீது நெருப்பு ஏந்தி அதை அணைக்கிறான். அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற சனங்களுக்கு எவ்வளவு உணர்ச்சிப்பெருக்கு ஏற்படுகிறது. காஷ்மீர் போராளிகள் இப்போது சனங்களுக்கு போராளிகளாகத் தெரியவில்லை. தீவிரவாதிகளாகத் தெரியவில்லை. பயங்கரவாதிகளாகத் தெரிகிறார்கள். இதனையே எந்த ஒரு அரசாங்கமும விரும்பிச் செய்யும். மணிரத்தினம் அதனைக் கச்சிதமாகச் செய்து முடித்தார்.

யமுனா ராஜேந்திரனுக்கு மணிரத்தினத்தின் இந்த அரசியல் புரியாமல் போனது ஏன்?

இன்னுமொன்றையும் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். தேசபக்தி என்பது வேறு: அரசு மீதான விசுவாசம் என்பது வேறு: இந்த வித்தியாசம் யமுனா ராஜேந்திரனின் எழுத்துத் தொனியில் தெரியவில்லை. இரண்டையும் ஒன்றாகப் பார்க்கின்ற தன்மையே தெரிகின்றது.

பம்பாய் திரைப்படத்தையே நோக்குவோம். வெளிக்கு மிக நேர்மையுடன் அணுகப்பட்ட திரைப்படமாகவே அது தோன்றும். யமுனா ராஜேந்திரனுக்கும் அப்படித்தான் தோன்றியிருக்கிறது. "மிகவும் கொந்தளிப்பான பிரச்சினையை சமநிலையுடன் சித்திரிக்க முயன்றிருக்கும் மணிரத்தினத்தின் நேர்மையில் நாம் சந்தேகப்பட முடியாது". (பக்.4) என்று தான் சொல்கின்றார். எதைவைத்து அப்படி முடிவெடுத்தார்? ஆனால், மணிரத்தினத்தின் சக கலைஞராக விளங்கிய நடிகர் கமல்ஹாசன் "பம்பாய் திரைப்படம் சமநிலை தவறி முஸ்லிம்கள் மீது குற்றம்சாட்டுவதாக எடுக்கப்பட்டிருக்கிறது. பம்பாயில் இந்து முஸ்லிம் கலவரத்தின்போது நான் அங்கு இருந்தேன். இந்துக்களே அங்கு கலவரத்தைத் தொடக்கினார்கள். தாக்க வந்தவர்களை முஸ்லிம்கள் தடுத்தார்கள். இந்து வெறியர்களுடன் பொலிசாரும் சேர்ந்து முஸ்லிம்களைத் தாக்கினார்கள். இதையொன்றையும் பம்பாய் திரைப்படம் சித்திரிக்கவில்லை" என்று கூறுகின்றார்.

மத நல்லிணக்கம், இந்திய ஒருமைப்பாடு இவற்றை மாத்திரம் வைத்தா மணிரத்தினம் திரைப்படம் எடுத்தார்? இவற்றுக்குமப்பால் மணிரத்தினம் இத்திரைப்படத்தில் சொல்லப் புகுந்த அரசியலை எம்மால் புரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டதா? உதாரணமாக இப்படிப் பார்ப்போம்.

ஒரு உதாரணம்.

1983 இனப்படுகொலை. சிங்களக் காடையர் தமிழ் மக்களைக் கொல்கிறார்கள். சிங்களக் காடையர்கள் துரத்துகிறார்கள். தமிழ் மக்கள் ஓடுகிறார்கள். மணிரத்தினம் இடையில் வந்து இருவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று உபதேசம் செய்கின்றார். ஒற்றுமையாக இருக்க யாருக்குத்தான் விருப்பமில்லை? இடையில் இருக்கின்ற அரசியலை மணிரத்தினம் புரிந்துகொள்ள மறுக்கின்றாரா? அல்லது மணிரத்தினத்தின் அரசியல் இதுதானா? ஆனால், "மணிரத்தினத்தின் நேர்மையில் சந்தேகப்பட முடியாது" என்கின்றார் யமுனா ராஜேந்திரன்.

மணிரத்தினத்தினது நேர்மை பற்றிய இன்னொரு சந்தேகம் இருக்கிறது 'இருவர்' திரைப்படத்தில். இருவர் திரைப்படம் திராவிட அரசியல் பாரம்பரியத்தின் ஒரு கூறை வெளிப்படுத்தியது. 'இது உண்மைக் கதையல்ல' என்று எழுத்தோட்டத்தில் காட்டுவதன் மூலமாகவே இது உண்மைக் கதையென்பதை புரியலாம். உண்மையில் அத்தனை கூறும் திரைப்படத்தில் உள்ளடங்கிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உண்மைகளில் எவற்றைத் தெரிவு செய்வது என்பதும் கலைஞரின் சுதந்திரம். அதேசமயம் அத்தெரிவில் நோக்கம் இருப்பதனையும் நாம் புரிந்து கொள்ளலாம். அப்பட்டமாக இத்திரைப்படம்

—19

# புரட்சியை மழுங்கடிக்கவென சிங்களத்தில் ஒரு 'இஸ்க்ரா'

அண்மையில் "இஸ்க்ரா" எனும் வாரப் பத்திரிகையொன்று சிங்களத்தில் வெளிவரத் தொடங்கியிருக்கிறது. மாதாந்தப் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கியிருக்கும் இப்பத்திரிகையை "நில்வள வெளியீட்டகம்" வெளியிட்டு வருகிறது. இந்த "நில்வள" வெளியீட்டகமானது தொலைத்தொடர்பு, தொடர்பு சாதனத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் அனுசரணையில் இயங்கி வருகிறது. இந் நிறுவனத்தின் பொறுப்பாளராக மங்களவின் சகோதரி ஒருவரே இருந்து வருகிறார்.

இந்நிறுவனத்தினால் ஏற்கெனவே "மாதொட்ட" மற்றும் "பாராதீச" எனும் சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இவ்வெளியீட்டகத்தில் வெளியிடப்பட்டு வரும் மேற்படி மூன்று சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் முன்னாள் ஜே.வி.பி. இளைஞர்களுக்கும், இடதுசாரி முற்போக்கு சிந்தனையுள்ள இளைஞர்களுக்கும், வேறு மாற்று பத்திரிகைகளில் இருந்து வெளியேறியோருக்கும் புகலிடமளித்திருக்கிறது.

அவ்வாறு இதில் இருப்போரில் சிலருக்கு இது விவாதத்துக்குரிய சிறந்த கருவி, சிலருக்கோ, நல்ல பிழைப்புக்கான இருப்பிடம். சிலருக்கு ஆத்ம திருப்தியைத் தேடித்தரும் ஒரு தளம்.

இதில் மார்க்சியப் பின்னணியைக் கொண்டிருந்த சில இளைஞர்கள், இலங்கையின் இடதுசாரித்துவத்தையும், நவீன மார்க்சிய சிந்தனைகளை விவாதத்துக்குள்ளாக்குகின்ற பணியினையும் செய்து வந்தனர். அதற்கென்று "மாதொட்ட" சஞ்சிகையைப் பயன்படுத்திக் கொண்டனர். இவர்கள் தங்களை எக்ஸ் அணி ("x" Group) எனும் பெயர் கொண்ட அணியினராக அடையாளம் காட்டி செயற்படுகின்றனர். பல்வேறு வரட்டு மார்க்சியவாதிகளையும், மார்க்சிய இயக்கங்களையும், விவாதத்துக்கும் அழைக்கின்றனர். அவ்வாறானவர்களை பகிரங்கமாகச் சவால் விடுகின்றனர். சில மார்க்சிய குழுக்கள் தங்களின் பத்திரிகைகளில் பதிலளித்தும், இதே "மாதொட்ட" பத்திரிகையில் எழுதியும் விவாதம் செய்கின்றன.

இன்று நவீன மாக்சிய சிந்தனைகளை விவாதித்து வருகின்ற-விவாதத்துக்கு இழுக்கின்ற சக்தியாக இந்த "எக்ஸ் அணி" செயற்பட்டு வருகிறது. ஆனால் இவ் அமைப்பின் பணியானது கோட்பாட்டுத் துறையைத் தாண்டி செயல் என்கின்ற மட்டத்துக்குப் போகவில்லை. இன்றைய பின்நவீனத்துவத்தின் ஆபத்தான பக்கங்களில் ஒன்றாக வெறுமனே "கேள்விக்குட்படுத்தல்" என்கின்றதோடு செயலின்மைக்கு இட்டுச் செல்கின்ற வேலையையா இந்தக் குழுவினரும் செய்து வருகின்றனர் என்கின்ற கேள்விகளும் பரவலாக இல்லாமலில்லை.

மங்கள சமரவீர தனது நெருங்கிய நண்பர்களான முன்னாள் ஜே.வி.பி. இளைஞர்களுக்கூடாக இதனை ஆரம்பித்து அவர்கள் அணியாக உருவாகி இயங்க விட்டதானது அவர்களை நிறுவன ரீதியாக ஒன்றிணையச் செய்து விட்டிருக்கிறது. ஆரம்பத்தில் எந்தத் தடையுமில்லாமல் சுதந்திரமாக எழுதி வந்த "எக்ஸ் அணி" யினர் இன்று மங்களவின் தலையீடுகளுக்கு முகம் கொடுத்து வருவதாக அந்த அணியைச் சேர்ந்தவர்களின் கருத்துக்களிலிருந்து அறியக் கிடைத்திருக்கிறது. அரசாங்கத்தை விமர்சித்தல், அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்களை விமர்சித்தல் என்பவற்றை முன்கூட்டியே போடவிடாமல் பண்ணுகிற வேலையை மங்கள சமரவீர செய்து வருகிறார். மோர்ஜ் இயக்கம் பற்றி பல பக்கங்களில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையொன்று அச்சுக்குப் போகும் தறுவாயில் மங்களவின் தலையீட்டின் பேரில் நிறுத்தப்பட்டது என்றும் இதற்கு எக்ஸ் அணியினர் ஒத்துப்போயுள்ளனர் என்றும் பரவலாக குற்றம் சாட்டப்படுகிறது. இதனால் ஒரு சிலர் இக்குழுவிலிருந்து வெளியேறி தனியாக ஒரு சஞ்சிகையை வெளியிடவேண்டும் என்கின்ற கருத்து நிலவிக் கொண்டிருந்தது.

அப்படிப்பட்ட ஒரு சஞ்சிகைக்கு "இஸ்க்ரா" எனும் பெயரை இடவும் திட்டமிட்டிருந்தனர்.

இப்படிப்பட்ட நிலையில் தான் அதே நில்வள வெளியீட்டகத்தினரால் "இஸ்க்ரா" பத்திரிகை வெளிவரத் தொடங்கியிருக்கிறது. முதல் "இஸ்க்ரா" வெளிவந்ததும் எதிர்பார்ப்போடு கையிலெடுத்த போது அதில் எதிர்பார்த்திருந்த வகையில் காத்திரமாக எதுவும் இருக்கவில்லை. அதுவும் அப்பத்திரிகை நில்வள வெளீட்டகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளதை அறிந்ததும் வெளியேறி வெளியிட இருந்தவர்கள் ஏன் அதற்குள்ளேயே இருந்து "இஸ்க்ராவை வெளியிடுகின்றனர் என்கின்ற கேள்வி எழுந்தது. பின்னர் தான் தெரிந்தது. இந்தப் பெயரில் அப்படியொரு பத்திரிகை வெளிவருவதற்கு முன்னமேயே வெறும் பத்திரிகை அனுபவம் மட்டுமேயுள்ள அரசாங்க சார்பு பத்திரிகையாளர்கள் சிலரைக் கொண்டு இப்பத்திரிகை வெளியிடப்பட்டிருப்பதும், அதற்கும் "எக்ஸ் அணி"யினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்பதும்.

இன்னமும் "எக்ஸ் அணி"யினர் மாதொட்டவை நடத்திக் கொண்டு தான் இருக்கின்றனர். அதாவது நில்வள வெளீயீட்டகத்திலிருந்து வெளியேறவில்லை. அது தவிர இஸ்க்ரா எனும் பெயரில் வேறொரு பத்திரிகை வெளிவந்திருப்பதை எதிர்க்காமல் ஏன் உள்ளனர் என்றும் தெரியவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆரம்பத்தில் புரட்சிகர சக்திகளை விழுங்கி ஏப்பமிட முன்னர் அவர்களது உத்வேகத்தையும், ஈடுபாட்டையும் பயன்படுத்தி உள்வாங்கிவிட்டுப் பின்னர் படிப்படியாக அவர்களை சோம்பேறிகளாக்கி புரட்சிகர குணாம்சங்கள் அனைத்தையும் கரைத்து விடுகின்ற போக்குக்கு ஒப்பான வேலை தான் இதுவும் என்று விமர்சிக்கிறார் எக்ஸ் அணி மீது அதிருப்தி கொண்ட ஒருவர். இன்னும் அவர்கள் வெளியேறாமைக்கான காரணம் வெறுமனே அவர்களின் இருப்புக்கான ஒரு வழி தானா என்கின்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

## 'இஸ்க்ரா' எனும் தீப்பொறி

"இஸ்க்ரா"வுக்கு நீண்ட-நீடிக்கின்ற ஒரு வரலாறு உண்டு. "இஸ்க்ரா" எனும் ரஸ்ய சொல்லுக்கு "தீப்பொறி" என்பது அர்த்தம். 1900 டிசம்பரில் சட்டவிரோத தலைமறைவுப் பத்திரிகையாக ஜெர்மனியின் தலைநகர் லைப்ஸிப் நகரில் இருந்து லெனினால் வெளியிடப்பட்டது. பின்னர் அது ஜெனிவா, மற்றும் மியூனிச் நகரங்களிலும் வெளியானது. பிற்காலங்களில் மாபெரும் ரஷ்யப் புரட்சியை நடத்திய ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியை உருவாக்குவதில் இதன் பாத்திரம் முக்கியமானது.

இஸ்க்ராவின் தலைமை ஆசிரியராகவும், அதன் நிர்வாகியாகவும் லெனின் இருந்தார். கட்சிச் சக்திகளை ஒன்றுபடுத்துவதிலும் கட்சி ஊழியர்களை அணிதிரட்டுவதிலும் இஸ்க்ரா மையமாக இருந்தது. 1903ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் இடம்பெற்ற கட்சியின் இரண்டாவது கொங்கிரசுக்குப் பின் மென்ஷிவிக்குகள் (சந்தர்ப்பவாத இடதுசாரி சிறுபான்மையினர்) இஸ்க்ராவை கைப்பற்றிக் கொண்டனர். எனவே "இஸ்க்ரா" 52 இதழ் வரை இருந்த புரட்சிகர மார்க்சிய நிலைப்பாட்டை பின்னர் வந்த இதழ்களில் இழந்து விட்டிருந்தது. பழைய புரட்சித் தன்மையுடைய இஸ்க்ராவிலிருந்து வேறுபடுத்துவதற்காக லெனின் அதனை புதிய சந்தர்ப்பவாத இஸ்க்ரா என அழைத்தார்.

இப்படி ஆரம்பத்தில் தீப்பொறி எனும் உத்வேகம் கொள்ளச் செய்யும் அர்த்தமிக்க இந்தச் சொல்லை உலகில் உள்ள பல்வேறு புரட்சிகர விடுதலை இயக்கங்களும் தங்கள் பத்திரிகையின் பெயராக இட்டு வந்துள்ளன. இதனை பல நாடுகளிலும் பார்க்கலாம். இந்தியாவில் நக்ஸல்பாரி மற்றும் மாக்சிய-லெனினிய இயக்கங்கள் பல கூட வெவ்வேறு மாநிலங்களில் "தீப்பொறி" எனும் பெயரில் பத்திரிகைளை நடாத்தியிருக்கின்றன.

இலங்கையிலும் ஜே.வி.பி. தீப்பொறி சிங்களத்தில் அர்த்தம் தரத்தக்க "கினிபுபுர" எனும் பெயரில் முன்னர் அரசியல் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. அது போல ஜே.வி.பி. 1989இன் பின்னர் தலைமறைவாக இருந்து செயற்பட்டவர்களும் சர்வதேச கிளையிலிருந்தவர்களும் ஆங்கிலத்தில் "கினிபுபுர" ("Ginipupura") எனும் பத்திரிகையை லண்டனிலிருந்து வெளியிட்டிருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் கூட புளொட்டிலிருந்து 1984இல் வெளியேறிய அணியொன்றும் "தீப்பொறி" எனும் சஞ்சிகையை வெளியிட்டு வந்திருக்கிறது. இதன் காரணமாக இவர்கள் தீப்பொறி அணியினர் என்றே அழைக்கவும் பட்டனர்.

இப்படி தீப்பொறி என்பது புரட்சிகரமான அர்த்தம் கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது "இஸ்க்ரா" எனும் பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் பத்திரிகை பல இடதுசாரிகளை ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கிறது. அப்பெயரை களங்கப்படுத்துகின்ற வகையில் திட்டமிட்டு பாவிக்கப்பட்டமை சகிக்க முடியாதபடி செய்து விட்டிருக்கிறது. இதனை "எக்ஸ் அணி"யினர் கண்டும் காணாதது போல் இருப்பது வெளியில், அவர்கள் குறித்திருந்த அபிப்பிராயங்களையும் சந்தேகிக்க வைத்துள்ளது.

தற்போது வெளியிடப்பட்டிருக்கும் "இஸ்க்ரா" பத்திரிகையின் முதலாவது இதழில் அதன் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள "இன்றைய சிங்கள இஸ்க்ரா லெனினின் அந்த 'இஸ்க்ரா'வுடன் தொடர்புறுவது பெயராலும், சமூக அநீதிக்கெதிராகவும் மட்டுமே. மற்றும்படி எந்த புரட்சிகர தொடர்பும் இதற்கில்லை" எனும் கூற்றிலிருந்து இதனைத் தெரிந்தே செய்கிறார்கள் என்பது தெளிவாகிறது. அது மாத்திரமன்றி சமூக அநீதிக்கெதிராகக் குரல்கொடுப்பதாகவும் கூறிக்கொள்கின்றனர். ஆனால் தற்போது வெளிவருகின்ற ஜனரஞ்சக பத்திரிகையிலிருந்து ஒன்றும் பெரிய வித்தியாசத்தைக் இதில் காண முடியவில்லை. ஜே.வி.பி. எதிர்ப்பு, புலியெதிர்ப்பு, தமிழ் மக்களின் போராட்டமெதிர்ப்பு, மற்றும் அரச சார்பு என்பவற்றையே காண முடிகிறது.

இந்தப் பத்திரிகைக்கு தற்போது ஆசிரியராக இருக்கும் குணசேன ஹெட்டி ஆராச்சி என்பவர் முன்னாள் ராவய ஆசிரியர் குழுவில் ஒருவர். அங்கு பத்தி ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

எனவே இதன்படி ஒன்று விளங்குகிறது. இந்த கட்டமைப்புக்கு எதிராக செயற்படக்கூடிய புரட்சிகர சக்திகள், செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் என்போரை சரியான தருணத்தில் கரம் கொடுப்பதாக காட்டிக் கொண்டு, அவர்களை தனக்குள் வளைத்துப் போட்டுக் கொண்டு, ஒன்றில் அவர்களை அரச ஆதரவு பிரச்சாரகர்களாக மாற்றுவது அல்லது அவர்களின் புரட்சிகர குணாம்சங்களை மழுங்கடிப்பது என்பவற்றை திட்டமிட்ட முறையில் அமைச்சர் மங்கள செய்து வருகிறார் என்பதை மட்டும் உணர முடிகிறது.

இது வெறுமனே சந்திரிகா அரசாங்கத்தின் தந்திரோபாயம் மட்டுமல்ல, உலகம் முழுவதும் புரட்சிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஒட்டுமொத்த முதலாளித்துவ தந்திரோபாயமே என்றால் அது மிகையாகாது.

**-ஜென்னி**



# வடமேல் மாகாண சபை: மு.கா.வின் முடிவில் மாற்றத்திற்கு காரணம் என்ன?

வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கான முஸ்தீபுகள் தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்றன. அனைத்துக் கட்சிகளும் இந்தத் தேர்தலில் யார் யாரையெல்லாம் நிறுத்துவது, யாரை நிறுத்தினால் தமது கட்சி வெற்றிபெறும் என்று தீவிரமாக ஆய்வு செய்து கொண்டிருக்கின்றன.

பாராளுமன்ற அங்கத்தவர்கள், பிரதியமைச்சர்கள் மட்டத்திலுள்ளவர்களையெல்லாம் நிறுத்தி இந்தத்தேர்தலில் தாம் எப்படியும் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற தீவிரத்துடன் இறங்கியுள்ளன பிரதான கட்சிகளான ஐ.தே.க., பொ.ஐ.மு. இரண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி, இம்மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக பிரதி அமைச்சர் எஸ்.பி. நாவின்னவைப் பிரேரித்துள்ளது. ஐ.தே.கவோ முன்னாள் வடமேல் மாகாண முதலமைச்சரும், மத்திய அரசில் அமைச்சர் பதவி வகித்தவருமான ஜயவிக்கிரம பெரேராவை முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக நியமிக்கலாம் என்று தெரிய வருகிறது.

ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இது மிகவும் முக்கியமான ஒரு தேர்தலாகும். இரு கட்சிகளும், தமது முழுச் சக்தியையும் பயன்படுத்தி இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றுவிட வேண்டுமென்பதில் தீவிரமாக உள்ளன. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகளை ஓரறவுக்கு ஊகிக்க வைக்கக் கூடிய (Acid test) அமிலப் பரீட்சையாக இந்தத் தேர்தலை இவ்விரு கட்சிகளும் எடுத்துக் கொண்டு மிகவும் தீவிரமான தேர்தலுக்கான பிரசாரங்களில் இறங்கத் திட்டமிட்டு வருகின்றன.

இந்த மாகாண சபைத் தேர்தலில் பொ.ஐ.மு. வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக் குறைவு அல்லது வெல்வது மிகவும் கஷ்டமானதாகவே இருக்கும் என்று அங்கிருந்து கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையை ஓரளவுக்கு பொ.ஐ.முவும் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பதனாலேயே அது தீவிரமான பிரச்சாரத் திட்டங்களில் இறங்கியிருக்கிறது.

இந்தத் தேர்தலில் பொ.ஐ.மு. தோல்வியுற்றால், அரசாங்கம் பதவி இறங்க வேண்டும் என்ற கோரிக்கையை உரத்து முன்வைக்க ஐ.தே.க. தயங்க மாட்டாது என்பதும், அது அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியாக ஒரு சவாலாக இருக்கும் என்பதும் வெளிப்படை. எனவே இந்தத் தேர்தலில் தாம் வெற்றிபெற வேண்டும் என்பதில் அரசாங்கம் தீவிரமாக இருப்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் தான் பொ.ஐ.முவுக்கு அதிர்ச்சியை அளிக்கக் கூடிய ஒரு அறிவிப்பு சற்றும் எதிர்பாராத விதத்தில் எதிர்பார்க்காத இடத்தில் இருந்து வந்தது. ஆம். முஸ்லிம் காங்கிரசிடமிருந்து அந்த அறிவிப்பு வந்தது. இந்தத் தேர்தலில் பொ.ஐ.முவுடன் தாம் சேர்ந்து நிற்பதற்குப் பதில் தனித்து நின்று போட்டியிடப் போவதாக அது அறிவித்தது. "அரசாங்கத்தால் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை காரணமாக, தாம் தனித்து நின்று போட்டியிடுவது என்ற முடிவுக்கு வந்துள்ளதாக அமைச்சர் அஷ்ரஃப் அவர்களே தெரிவித்திருந்தார்கள். இந்த அறிவிப்பு ஆளும் கட்சி மட்டத்தில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவே அவசர அவசரமாக அஷ்ரஃப் அவர்களை இந்த விடயம் தொடர்பாகப் பேசுவதற்காக சந்திக்கும் அளவுக்கு நிலைமை முற்றிப்போய் விட்டிருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் பலருக்கும், அஷ்ரஃப் மீதும், அவரது முஸ்லிம் காங்கிரஸ் மீதும் பலத்த எரிச்சல். தமக்கு இல்லாத விதமான வாய்ப்புகளும் வசதிகளும் முஸ்லிம் காங்கிரசிற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். தாம் தனித்து நின்றே போட்டியிடுவதான அமைச்சர் அஷ்ரஃப் அவர்களின் அறிவிப்பு, பொ.ஐ.முவுக்குள் முஸ்லிம் காங்கிரசுக்கு உள்ள முக்கியத்துவத்தை மேலும் அதிகரிப்பதாக செய்யப்படும் ஒரு அறிவிப்பே என்பது அவர்களது வாதமாக இருந்தது. இந்தக் கருத்துப் போக்கினை வெளிப்படுத்துபவர்களுள் முக்கியமானவராக அமைச்சர் பௌசி அவர்கள் கருதப்படுகின்றார்.

அமைச்சர் அஷ்ரஃப் மீதும், முஸ்லிம் காங்கிரஸ் மீதும் பலத்த எதிர்ப்புணர்வைக் காட்டிவரும் இந்த அணியினர், முஸ்லிம் காங்கிரசின் இந்த அறிவிப்புக்காக அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தீவிரமாக இருந்தனர்.

எவ்வாறெனினும், ஜனாதிபதி சந்திரிகாவுடன் அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் மேற்கொண்ட சந்திப்பு ஒன்றின்பின் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பெருமளவ்

—20

"புத்தளம் முதல் மொனராகலை வரை வவுனியா மட்டக்களப்பு முதல், திருமலை வரை நாம் பல எல்லைக் கிராமங்களுக்குச் சென்றோம். அங்குள்ள மக்களின் குரல்களைக் கேட்டோம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று வேறுபாடின்றி யுத்தத்தினால் எழும் பீதியுடன் தமது வாழ்நாளை ஓட்டிக் கொண்டிருக்கும் பலரைச் சந்தித்தோம். விதவைகள். இளைஞர்கள், வயதானவர்கள் என்று பலருடன் நாம் பேசினோம். இடம்பெயர்க்கப்பட்ட பல மக்களை நாம் கண்டோம்... இவர்கள் எல்லோரதும் ஒரே குரல் 'எமக்குச் சமாதானம் வேண்டும்' என்பதே. அரசாங்கம் உடனடியாக ஒரு அரசியல் தீர்வைக் காண வேண்டும். நாம் எல்லா அரசியல் கட்சிகளையும் நோக்கிக் கேட்பது இதைத்தான். அதிகாரப் பரவலாக்கல் மூலமாக இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள்! இதன் மூலம் இந்த யுத்தத்திற்கு முடிவு காணுங்கள்"




# யுத்தத்தை நிறுத்துங்கள்!

## கோருகிறார்கள் எல்லைப்புற கிராம மக்கள்

எல்லைக் கிராமங்களில் வாழும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றிய விசாரணையை மேற்கொண்டு வந்த ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையின் முடிவுரையில் இவ்வாறு தெரிவித்துள்ளது. மனித உரிமைகள் தினத்தன்று வைபவரீதியாக வெளியிட்டு வைக்கப்படவுள்ள ஆணைக் குழுவின் இந்த இடைக்கால அறிக்கை எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களுக்கு விஷேட கவனிப்பு அவசியம் என்றும், சிங்கள தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிலவிய நல்லுறவு சிதைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது. அவ்வாணைக்குழு கிராமம் கிராமமாக நடாத்திய விசாரணைகளின் அடிப்படையில் நாட்டிலுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் கதியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் செயற்படுத்தப்பட வேண்டியவை என முப்பது பரிந்துரைகளை முன்வைத்திருக்கிறது.

எஸ்.ஜி.புஞ்சிஹேவா (இணைத் தலைவர்), லீலா ஐசெக் (இணைத் தலைவர்), பேராசிரியர் கார்லோ பொன்சேகா, கலாநிதி அருச்சுனா பராக்கிரம, பேராசிரியர் ஜயசேகரா, கலாநிதி திபிகா சேகம, சித்திரலேகா மௌனகுரு, ஜோய் பெர்ணாந்து, மொகமட் சலீம், பத்மா சிவகுருநாதன், நீர்வை பொன்னையன், விமல் பெர்ணான்டோ, கின்சிலி றொட்றிகோ, நிமல்கா பெர்ணான்டோ, சுனிலா அபேசேகரா, மாலினி திசாநாயக்கா, சிறிநாத் பெரேரா, எச்.எம்.எஸ். பயஸ், ஜி.பி. வாசல ஆகிய இருபது பேரைக்கொண்ட ஆணைக்குழு கடந்த செப். மாத இறுதியில் தனது விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

நாடு பூராவும் எல்லைப்புறக் கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் அது தனது விசாரணைகளை நடாத்தியது. சாட்சிகட்கு மூன்று மொழிகளிலும், தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் வசதி செய்யப்பட்டிருந்தது.

ஆணைக்குழு மூன்று மாத காலம் இப்பிரச்சினையை விசாரிக்கப் போதுமான காலம் அல்லவென்பதால், பெருமளவான சாட்சிகளுடைய சாட்சியங்களைப் பெறமுடியவில்லை. இது தவிர இராணுவம் மற்றும் ஆயுதக்குழுக்களால் விசாரணையில் சாட்சியமளிக்க விரும்பியவர்கள் மிரட்டப்பட்ட சம்பவங்களும் உண்டு. ஒரு முஸ்லிம் கிராமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசாரணையை இராணுவம் ரத்துச் செய்துவிட்டிருந்தது. இப்படிப்பட்ட பலவீனங்கள் இருந்த போதிலும் இந்த ஆணைக்குழு மக்களிடமிருந்து திரட்டிய தகவல்கள் மிகவும் முக்கியமானவையும், நாட்டின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் அளவுக்கு காத்திரமானவையும் ஆகும்.

எல்லைக் கிராம மக்கள் இந்த நாட்டில் கடந்த 17 ஆண்டுகாலமாக நடந்து வரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மிகவும் மோசமான பிரிவினராவார். ஏற்கெனவே வறுமையும், பசிபட்டினியும் கொண்ட இம்மக்களது விடிவு யுத்தத்தினால் மேலும் சின்னாபின்னப்பட்டுள்ளது. அவர்கள் யுத்தத்தின் நேரடியான விளைவுகளை மட்டுமல்ல. அதன் மறைமுகமான விளைவுகளையும் எதிர்நோக்குகின்றனர். தவிரவும், எல்லைபுறக் கிராம மக்கள் பல வேளைகளில் போரிடும் அணிகளின் பாதுகாப்புச் கவசங்களாக, சந்தேகத்துக்குரிய ஒற்றர்களாக, தமது ஆத்திரத்தைத் தீர்க்கப் பாவிக்கப்படும் நபர்களாக எல்லாம் பல்வேறு விதங்களில் இம்சிக்கப்படுகிறார்கள். இந்த மக்களது துன்பதுயரங்கள் ஏனைய மக்கட் பகுதியினரதையும் விட ஆழமானது. போக்கிடமற்றுத் தவிக்கும் அப்பாவி மக்களான இவர்களது கதைகள் சோகம் ததும்பியவை.

ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கான காரணங்களில் இம் மக்கட் பிரிவினருடைய பிரச்சினைகளை யாரும் கண்டுகொள்வதில்லை என்பதும் ஒன்று என அதன் இடைக்கால அறிக்கை தெரிவிக்கிறது.

ஆணைக்குழுவின் அறிக்கை அங்குள்ள மக்களின் நிலைமைகளை இவ்வாறு சுருக்கமாகத் தெரிவிக்கிறது.

எல்லைப்புறக் கிராம மக்களின் பிரதான உணவுப் பிரச்சினையாக இருப்பது அவர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்காமையாகும். அவர்களுடைய அடிப்படையான பொருளாதார வாழ்வு யுத்தத்தால் பெரிதும் சீர்குலைவுக்குள்ளாகியிருக்கின்றது. பெண்களுக்கு அடிப்படையான சுகாதார வசதிகளை செய்யக்கூட வாய்ப்பு இல்லாத நிலை அங்கு நிலவுகிறது. வைத்திய சாலைகளில் வைத்திய உதவிகளை செய்யக்கூடிய ஊழியர்கள் இருப்பதில்லை: மருந்துகள் இருப்பதில்லை. பெண்களது தேவைக்கேற்ற மகப்பேற்று விடுதிகள் இல்லை.

பாடசாலை மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களோ, போதிய உணவோ இல்லாமையினால், அவர்கள் பாடசாலைப் படிப்பில் ஆர்வம் காட்டுவதில்லை. இருக்கும் பாடசாலைகளில் கூட போதிய கட்டிடங்களோ, ஆசிரியர்களோ போதியளவு இல்லாத நிலை. யுத்தத்தின் அச்சங்காரணமாக விழிப்புடன் கழியும் இரவுகள் காரணமாக பாடசாலைக் கல்வியில் மாணவர்கள் ஆர்வம் காட்டுவது குறைவு. ஆசிரியர்களிடமும் பெருமளவு ஆர்வம் இருப்பதில்லை.

சிறுவர்களின் நடத்தையில் பெருமளவு வித்தியசங்களை - மனோவியல் பாதிப்புக்களைக் - காணக் கூடியதாக உள்ளது. இவ்விடயத்தில் அரச உதவிகள் முழுமையாக ஸ்தம்பித்துப் போய் உள்ளன. அங்குள்ள மக்களின் மனோநிலையும் அவ்வாறே பாதிப்புற்றதாய் அச்சமும் பீதியும் கொண்டதாய் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

இக்கிராமங்களில் மக்கள் இராணுவத்திற்காக எந்தவித ஊதியமும் இன்றி கட்டாய வேலைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். காடுகளைத் துப்புரவு செய்தல், பதுங்கு குழிகளை அமைத்தல் என்பவற்றில் அவர்கள் இராணுவத்தினால் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இராணுவமயமாதல் இந்த அப்பாவி மக்களின் அடிப்படை உரிமைகளை பறித்து விட்டுள்ளது.

வேலையின்மையும், வறுமையும் பெருமளவுக்கு இராணுவத்தில் சேர்தலைத் தூண்டுகின்றன. தமது வருமானத்திற்கு உள்ள ஒரே வழி இதுவே என்பது அவர்கள் இராணுவத்தில் சேரக் காரணமாக அமைகின்றன. யுத்தப் பிரதேசங்களில் உள்ள பெண்கள் படையினரின் பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகிறார்கள். ஆயுதமேந்தியவர்கள் பெண்களை மிரட்டுகின்றனர். பெருமளவில் விதவைகள் உருவாதலும், பாலியல் நோக்கங்களுக்காக இவர்கள் ஏமாற்றப்படுதல்களும் நடக்கின்றன.

இந்த விசாரணைகளின் போது நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கிராமங்களிலிருந்து திரண்டு வந்து தமது நிலையை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் தம்மீதான புலிகளது தாக்குதல் பற்றிய பல விபரங்களைத் தந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் தமக்கு இலங்கை அரசாங்கத்தால் போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்கள். இந்த நாட்டின் இனப்பிர'ச்சினைக்கு அமைதியான தீர்வொன்று காணப்படும்போதே தாம் சுதந்திரமாகவும், அச்சமின்றியும் வாழ முடியும் என்று தெரிவித்தார்கள்.

தமிழர்கள் நேரிலும் எழுத்து மூலமான அறிக்கையாகவும் யுத்தத்தின் தாக்கங்கள் பற்றிய சாட்சியங்களை அளித்தனர். யுத்தம் தமது சமூகத்துக்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்களை அவர்கள் விபரமாக விளக்கினர். இராணுவத்தினால் தாம் எவ்வாறு இலக்காக்கப்படுகிறோம் அவமதிக்கப்படுகிறோம் என்று தெரிவித்தார்கள். சிலர் இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமே என்றும் தெரிவித்தனர். அவர்கள் புனர்நிர்மான, புனருத்தாரன நடவடிக்கைகளின் போது தமக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக தமது சாட்சியங்களின் போது தெரிவித்தனர். அவர்களுக்கு அவர்களது முடிவே இல்லாத துயரங்களுக்கு முடிவு கட்டக் கூடியதாக இருப்பது இனிய சமாதானக் கனவு மட்டுமே.

சிங்களக் கிராம மக்கள் தங்கள் கிராமங்கள் மீதான புலிகளின் தாக்குதல் பற்றி அச்சம் தெரிவித்தனர். பெரும்பாலானவர்கள் இத்தகைய தாக்குதல்களினால், நேரிடியாகப் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். அவர்கள் தமது அச்சம் நிறைந்த தூக்கமற்ற இரவுகள் பற்றி நினைவு கூர்ந்தார்கள். பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு தேவையெனும் தமது விருப்பைத் தெரியப்படுத்தினார்கள். புலிகளுக்கு அஞ்சுவதும் இராணுவத்தில் அல்லது ஊர்காவற் படையில் சேர்வது என்று முடிவு செய்வதும் அவர்களது வாழ்வில் ஏற்பட்டுள்ள இராணுவமயமாதலின் இரு பக்கங்களாக உள்ளன.

அனேகமாக எல்லா எல்லைப் புறக் கிராமங்களும் இலங்கையின் உலர் வலயப் பகுதிகளிலேயே உள்ளன. சுதந்திரத்துக்குப் பிறகு இன்று வரை எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இந்தக் கிராமங்கள் காணவில்லை. அவர்களது பிரதான உழைப்பு விவசாயம். அடுத்தடுத்து வந்த அரசாங்களிடம் அவர்கள் கேட்டதெல்லாம், நீரும், நிலமும் தான். ஆனால் இன்று வரை அவர்களது கோரிக்கைகள் மாறவில்லை. யுத்தம் தொடங்க முதல் அவர்கள் இயற்கையின் கருணையில் சீவித்து வந்தார்கள். இப்போது யுத்தம் அவர்களைப் பிடித்து ஆட்டுகிறது. அவர்களை சொல்லொணாத் துயரத்துள் தள்ளி விட்டுள்ளது.

இவ்வாறு அந்த இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நவம்பர் 25 பெண்களின் மீதான வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினம் நினைவு கூரப்படுகிறது.**

# கோணேஸ்வரி வழக்கு : கோணேஸ்வரிகளின் கதி ?

—கோமதி



கோணேஸ்வரி பாலியல் வல்லுறவு மற்றும் கொலை தொடர்பாக கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட படையினருக்கு எதிராக நடத்தப்பட்டு வந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஜனவரி ஐந்தாம் திகதியன்று வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் 23ஆம் திகதியன்று நடைபெற்ற விசாரணை முடிவின் பின் இவ்வழக்கிற்கான தீர்ப்பு வழங்கப்படும் திகதியாக இத்திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கினை தொடர்ச்சியாக அவதானித்து வந்தவர்களின் அப்பிராயங்களின்படி அதன் போக்கு, வழக்கு தொடரப்பட்ட காலத்தில் இருந்த சாட்சியங்கள் அனைத்தும் வலுவிழந்து போனதன் காரணமாக குற்றவாளிகளுக்கு சாதகமாகவே திரும்பியிருப்பதாக தெரியவருகிறது. நீதிமன்றங்களும் நீதிபதியும், வழக்காளியும் எதிரியும் நிரல்படுத்தும் சாட்சிகள் வாதங்கள் என்பவற்றை அடிப்படையாக வைத்தே நீதியை வழங்க முடியும் என்பதால் நீதமன்றையும் நீதிபதியையும் தவறாக வழிநடத்தக்கூடிய விதத்தில் சாட்சிகளை செல்வநாயகம்.. இதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

பாலியல் வல்லுறவு புரிந்ததன் பின் அதன் சாட்சிகள் அனைத்தையும் மூடிமறைக்க பொலிஸார்-படையினரால் உயர்ந்த பட்சம் முயற்சித்துள்ளார்கள் என்பதை அங்கிருந்து அப்போது கிடைத்துள்ள தகவல்கள் தெரிவித்தன. சம்பவம் நடந்தவுடன் கோணேஸ்வரியின் பிரேதத்தை உடனடியாக பிரேத பரிசோதனைக்குட்படுத்தாது தகனம் செய்யும்படி குடும்பத்தவர்கள் மிரட்டப்பட்டுள்ளனர். (ஆயினும் உடல் தகனம் செய்யப்படாமல் உறவினர்களால் புதைக்கப்பட்டது), அடுத்தது கணவர் அக்கிராமத்தை விட்டே ஓடி விட்டார். அவரை மிரட்டி படையினரே விரட்டியடித்ததாக பின்னர் தகவல்கள் வெளியானது. இது குறித்து சாட்சியங்கள் அளிக்கவிருந்த ஊரார் மற்றும் மகன் அனைவரும் மிரட்டப்பட்டுள்ளனர். எனவே தான் ஆரம்பத்தில் இச் சாட்சியங்களைக் கொண்டு வழக்கைத் தைரியமாக நடத்தலாம் என்று கருதினோரும் கூட கூறவில்லை..." என்றார்.

எனவே அந்தச் சாட்சியமும் சம்பவத்தை உறுதி செய்ய வாய்ப்பளிக்கவில்லை.

நீதிமன்றக் கட்டளைப்படி சம்பவம் நடந்து ஒரு மாதத்தின் பின்னர் அதாவது 97 யூன் 20 ஆம் திகதியன்று பிரேதம் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து இது குறித்த வைத்திய பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ள போதும் முழுமையான உத்தியோகபூர்வ அறிக்கையை நீதிமன்றம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவ்வறிக்கை கிடைத்திருந்தால் கடந்த 23ஆம் திகதியன்றே இவ்வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கக்கூடும். இவ்வறிக்கையை எதிர்பார்த்தே தீர்ப்பு ஜனவரி 5ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்தது.

எவ்வாறிருப்பினும் ஆரம்பத்தில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த அறிக்கையினை இன்னும் விரிவுபடுத்தி மட்டுமே இது இருக்குமேஒழிய புதிதாக எதனையும் சொல்லப் போவதில்லை. இவ்வைத்திய திகதியன்று பொது மக்கள் எனக்கு முறைப்பாடு செய்திருந்தனர். அத்தொகுதி பாராளுமன்ற பிரதிநிதி என்ற வகையில் இது குறித்து பூரண விசாரணை செய்யும்படி நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வது எனது கடமையாகும். இவ் வழியைத் தான் காலாகாலமாக ஏனைய உறுப்பினர்களும் செய்து வருகின்றனர். அந்த வகையில் இச்சம்பவம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இவை குறித்து எனக்குப் புகார் செய்யப்பட்டிருந்ததேயன்றி நான் நேரில் சம்பவத்தைப் பார்த்தவனல்ல. ஆனால் என்னையும் இச்சம்பவத்துக்கு சாட்சியாக ஆஜர் செய்யும்படி சென்றல் கேம்ப் பொலிஸ் அதிகாரி எனக்கு அனுப்பி வைத்துள்ள நீதிமன்ற அழைப்பாணை பாராளுமன்ற சிறப்புரிமை மீறலாகும் " எனக் குறிப்பிட்டிருந்தார்.

இப்படி சகல சாட்சியங்களும் பயனற்றதான நிலையில் சம்பவ தினத்தன்று புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் குண்டுவிழுந்து இச்சம்பவம் நடந்திருக்கலாம் என பொலிஸார் தரப்பில் சோடிக்கும் முயற்சிகள் ஆரம்பத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு நாங்கள் போதிய முயற்சிகள் செய்தோம்.. எங்களாலும் செய்யப்பட்ட முயற்சிகள் பூரணமானது எனக் கூற மாட்டோம்.

அதேவேளை கிருஷாந்தி சம்பவத்துக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை ஏன் இந்தச் சம்பவத்துக்கு பெண்கள் அமைப்புகளால் வழங்க முடியவில்லை? இவை குறித்த வித்தியாசங்களை நீங்கள் தான் வெளிக்கொணர வேண்டும், அச்சம்பவத்துக்கு இருந்த கால அவகாசம் கூட இதற்கு இல்லை. ஆரம்பத்தில் தயாராக இருந்த சாட்சியங்கள் படிப்படியாக இல்லாமல் போனது ஏன் என்பதற்கும் நீங்கள் தான் விடை கண்டு பிடிக்க வேண்டும்." என்றார்.

பல பெண்கள் அமைப்புகள் ஆரம்பத்தில் வெறுமனே தங்கள் சுய விலாசத்துக்கு விட்ட அறிக்கைகளோடு ஓய்ந்து விட்டன. அதன் பின் இச்சம்பவம் பற்றி எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

கிருஷாந்தி வழக்கில் படையினர் மட்டுமல்ல அரசும் கூட நல்ல 'பாடம் ' கற்றுக் கொண்டது. எனவே இனி பாலியல் வல்லுறவு, கொலை போன்ற விடயங்கள் நடைபெற்றாலும் கூட சாட்சியங்களை சோடிப்பது அல்லது சாட்சிகளை மிரட்டி அவர்களைப் பின் வாங்கவைத்து வலுவற்ற சாட்சியங்களாக மாற்றுவது போன்ற வழிமுறைகளை பலம்வாய்ந்த குற்றவாளிகள் செய்வது ஒன்றும் புதிய விடயமல்ல. இவை வெறுமனே திரைப்படங்களில் மட்டுமல்ல நிஜ வாழ்க்கையிலும் கூட நடந்து வரும் உண்மைகளாகும். அதுவும் கோணேஸ்வரி விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் படையினராகவும், சாட்சிகள் அனைத்தும் அவர்களின் பாதுகாப்பு கட்டுப்பட்டில் உள்ள பகுதிகளில் வாழ்பவர்களாகவும் இருக்கும் போது நிலமை வேறு விதமாக எப்படி அமைய முடியும்?

## பின்னணி

கடந்த வருடம் மே·மாதம் 17ஆம் திகதியன்று அம்பாறை சென்றல் கேம்ப் 1ஆம் கொலனியைச் சேர்ந்த திருமதி முருகேசுப்பிள்ளை புவனேஸ்வரி (கோணேஸ்வரி-வயது 35 , மூன்று ஆண் ஒரு பெண் பிள்ளையுண்டு) வீட்டுக்கு இரவு 9.30 மணியளவில் புகுந்த பொலிஸார் அவரைக் கூட்டாகப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய பின் அவரின் யோனியில் கிரனைட் வைத்து வெடிக்கச் செய்து சிதறடித்துக் கொன்ற சம்பவம் முழு உலகமறிந்த விடயம். இச்சம்பவத்தை முதன் முதலில் வெளிக் கொணர்ந்தவர் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம். சம்பவம் நடந்து நான்காவது நாள் இது குறித்து உடனடியாக விசாரணை மேற்கொள்ளும்படி ஜோசப் எம்.பி. ஜனாதிபதிக்கு அனுப்பிய அவசர பக்ஸ் கடிதத்தின் மூலம் தெரிவித்தார். இதே வேளை அந்த பக்ஸ் கடிதத்தை ஏனைய பத்திரிகைகள் சிலவற்றுக்கும் அவர் அனுப்பியிருந்தார்.

இதனை முதன் முதலில் வெளியிட்டவர் சண்டே டைம்ஸ் பத்திரிகையாளர் தற்போது நம்பிக்கை இழந்துள்ளனர். காரணம் தற்போது ஊராரில் இருவர் சாட்சியமளிக்கப் பின்வாங்கி விட்டனர். அது தவிர கோணேஸ்வரியின் மகன் செல்வகுமார் குகராஜ்ஜின் (வயது 18) சாட்சியம் கூட பயனற்ற ஒன்றாகச் செய்துள்ளனர். இறுதியாக நடந்த வழக்கு விசாரணையின் போது சாட்சியமளித்த மகன் "சம்பவ தினத்தன்று நான் வீட்டில் இல்லை. பக்கத்திலுள்ள கிருஷ்ணபிள்ளையின் வீட்டிலிருந்தேன். ரியூசனுக்கு சென்ற நானும் தம்பிமாரும் அங்கேயே தங்கி விட்டோம்.அன்றிரவு வெடிச்சத்தம் கேட்டது. எனினும் பயம் காரணமாக நான் வீட்டுப் பக்கம் போகவில்லை. மறுநாள் தான் வீட்டுக்குப் போனேன். வெடிபட்டுக் கிடந்தார் அம்மா. அம்மா எப்படி இறந்தார் என்பது எனக்குத் தெரியாது. யார் செய்தது என்பதை என் கண்ணால் பார்க்கவுமில்லை" எனக் கூறியுள்ளார்.

கோணேஸ்வரியின் உடலை வைத்திய பரிசோதனைக்குட்படுத்திய டொக்டர் குமுதினி துரைரட்ணம் சாட்சியமளிக்கையில் "நான் செய்த வைத்திய பரிசோதனையின் போது இடது கமக்கட்டிலிருந்து இடது தொடையின் நடுப்பகுதி வரை கிழிசல் நீண்டிருந்தது. கிழிசல் யோனிப் பகுதியையும் உள்ளடக்கியது. இடது பக்க கையெலும்பு, விலா எலும்பு, தொடை எலும்பிலும் உட்காயங்கள் இருந்தன. இடது பக்க மண்ணீரல், குடல், சுவாசப்பை சூலகம் என்பனவும் சேதமடைந்திருந்தன. சிறு நீரகத்திற்கும் மூத்திரப்பைக்கும் சேதம். இந்த மரணம் குண்டு வெடிப்பின் காரணமாக உண்டான அதிக இரத்தப் பெருக்கினாலும், அதிர்ச்சியினாலும் நிகழ்ந்திருக்கலாமென அபிப்பிராயப்படுகிறேன்... உடலை இனங்காட்டியவர்களோ வேறு உறவினரோ காலஞ்சென்றவர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதாக என்னிடம் பரிசோதனையின் ஆரம்ப அறிக்கையின்படி "மரணம் குண்டினால் சம்பவித்துள்ளது. அது யோனியில் தான் வைக்கப்பட்டது என்பதற்கு சரியான ஆதாரம் இல்லை. யோனியை அண்டிய பகுதிகள் அனைத்தும் சேதப்பட்டிருந்ததனால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதற்கான அறிகுறிகளையும் இனங்காண முடியவில்லை." என்பதே அதன் சாராம்சம். எனவே வைத்திய பரிசோதனையும் கோணேஸ்வரி வழக்கில் கைகொடுக்கவில்லை.

இப்படி நன்றாக திட்டமிட்ட முறையில் சாட்சியங்கள் நலிவடையும் விதத்தில் படையினர் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உயிருடன் விட்டால் பாலியல் வல்லுறவு விடயம் உண்மை வெளியில் தெரிந்து விடுமென கொலை செய்யத் துணிந்தவர்கள், சடலத்தைக் கொண்டும் பாலியல் வல்லுறவு வெளித்தெரியாதபடி செய்ய யோனியை கிரனைட் வைத்து சிதைத்துள்ளனர். அத்தோடு சகல சாட்சியங்களையும் மிரட்டி பலமிழக்கச் செய்துள்ளளனர்.

ஆரம்பத்தில் இந்த சம்பவத்தை வெளிக் கொணர்ந்த ஜோசப் எம்.பி. மற்றும் சண்டே டைம்ஸ் பத்திரிகையாளர் செல்வநாயகம் ஆகியோர் 97 நவம்பர் 12ஆம் திகதி நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க ஆஜரான போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜே.சத்யன் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காததினால் வழக்கு 98 ஜனவரி 6ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது என்ற போதும் இதற்கு முன்னர் ஜோசப் எம்.பி. தன் மீதான நீதிமன்ற அழைப்பாணை பாராளுமன்ற சிறப்புரிமை மீறலென சபாநாயகரிடம் 97 யூலை 10ஆம் திகதி நடந்த அவசரகால சட்டநீடிப்பு விவாதத்தின் போது புகார் செய்திருந்தார். அப்புகாரில்...

"...இச்சம்பவம் பற்றி 97 மே 20ஆம் வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், 11ஆம் கொலனியைச் சேர்ந்தவர்கள் மத்திய முகாமைச் சேர்ந்த படையினரால் தொடர்ந்து இம்சிக்கப்பட்டு வந்த விடயம் இரகசியமான ஒன்று அல்ல. 'கோணேஸ்வரி சம்பவம்' நடப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னர் கூட முகாமைச் சேர்ந்த பொலிஸார் கிராமத்தினுள் புகுந்து செய்த அடாவடித்தனங்கள் பற்றி கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் பொ.செல்வராசா தெரிவித்திருந்தார். கிராமத்தினுள் புகுந்த படையினர் பொது மக்களை அடித்து துன்புறுத்தியதன் காரணமாக பலத்த காயத்துக்குள்ளானவர்களில் எஸ்.கிருஸ்ணபிள்ளையும் (வயது 52) ஒருவர் அவர் மட்டக்களப்பு வைத்தியசாலையின் ஒன்பதாம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருக்கிறார்.

ஒட்டுமொத்தத்தில் இந்தச் சம்பவம் புதைக்கப்படப் போகிறது இதற்கு ஒரு வகையில் பெண்கள் அமைப்புகளும் பொறுப்பு சொல்லி ஆக வேண்டும். என்று மனித உரிமைகளுக்கான இல்லத்தைச்(HHR - Home for Human Rights) சேர்ந்த ஷெரின் சேவியர் குறிப்பிடுகிறார். கோணேஸ்வரி வழக்கில் ஆரம்பத்திலிருந்து அக்கறை செலுத்தி வந்த நிறுவனத்தின் இயக்குனரான இவர் சம்பவம் நடந்து 5ஆம் நாள் கோணேஸ்வரியின் வீட்டுக்குச் சென்று பார்வையிட்டு வந்ததுடன் சூழ உள்ளவர்களுடன் கலந்துரையாடிவிட்டு வந்தவர். இவரது அமைப்பினர் வழக்கின் சகல விசாரணை நாளின் போதும் கொழும்பிலிருந்து கல்முனைக்கு போய் வருவார்கள். கோணேஸ்வரியின் வீட்டில் சூழ சிதறியிருந்த தசைப்பிண்டங்களைக் கூட கண்ணால் கண்டு வெதும்பி வந்தவர்கள். இவர்கள் இது பற்றி குறிப்பிடுகையில்...

"ஆரம்பத்திலிருந்து பெண்கள் அமைப்புகள் முயற்சித்திருந்தால் இந்த நிலைமைக்கு இவ்வழக்கு வந்திருக்காது. எவ்வாறேனும் மூடி மறைத்தும், சம்பவத்தை வெளிக்கொணர முடியாத படியும் செய்து விடுவர். அரசும் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கவே செய்யும். ஏனெனில் வடக்கு கிழக்கில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான பாலியல் வல்லுறவு சம்பவங்களில் ஒன்றே கிருஷாந்தி சம்பவம். ஏனைய சம்பவங்கள் அனைத்துக்கும் எதிராக நடவடிக்கை எடுத்து விடுவதன் மூலம் சர்வதேச அளவில் தான் அம்பலப்ப்டுவதையும், யுத்தத்தை நடத்துகின்ற படையினருக்கெதிராக நடவடிக்கை எடுத்து அவர்களை புண்படுத்தவும் அரசு தயாரில்லை. அப்படித் தயாராயிருந்தால் இந்த சம்பவங்களுக்கு மாத்திரமல்ல, காணாமல் போனோர் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் மூலம் குற்றவாளிகளாக காணப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான படையினருக்கு எதிராக எப்போதோ நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். மாறாக குற்றத்திலிருந்து விடுவிப்பும் அவர்கள் அனைவருக்கும் பதவியுயர்வு வழங்கப்பட்டிருப்பதும் இரகசியமானதல்ல.

எப்படியோ கோணேஸ்வரி சம்பவம் புதையுண்டு போவதுஅரச படை அரக்கர்களுக்கு பாரிய உற்சாகத்தையும், தைரியத்தையும் வழங்கவே செய்யும் என்றால் அது மிகையாது.

பெண்களின் மீதான வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினம் நினைவு கூரப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பாதிக்கப்பட்ட பெண்கள் இடும் சாபம் வெறுமனே இந்த அரசுக்கும், அரச படைகளுக்கும், சமூக அமைப்புகளுக்கும் எதிராக மட்டுமிராது பெண்கள் அமைப்புகளுக்குமெதிராகவும் தான் என்பதை மனதில் இருத்துவோம். ■






## "சமாதானம் தொடர்பான உணர்வை ஏற்படுத்தல் வேண்டும்"

திருகோணமலை நகரபிதா எஸ்.சூரியமூர்த்தி

அந்நிய இராணுவமொன்றை அழைத்து வந்து யுத்தத்துக்கு வழிசமைத்ததும் இந்நாட்டின் தலைவர்களே. அவ் இராணுவத்தை வெறியேற்றும் தேவை ஏற்பட்டதும் புலிகளுக்குத் தேவையான ஆயுதங்களை வழங்கியதும் அவர்களே. இன்று மேலும் யுத்தம் செய்யும் தேவை அவ் அரசுக்கும் உள்ளது.

இவ்வாறான தலைவர்களின் யுத்தத் தேவைகள் காரணமாகத் திருகோணமலை மக்கள் அகதிகளாயினர். சமாதானத்துக்கு எனத் தென்பகுதி மக்கள் வட பகுதிக்கு வரும் போது மலர் மாலைகள் போடப்பட்டன. இப்போது அம்மலர் மாலைகள் போட்டவர்களும் கொல்லப்படும் நிலைக்குள்ளாகியுள்ளனர். ஜனாதிபதி, புலிகள் இயக்கத்துடன் நாற்பத்தி சொச்ச கடிதங்களைப் பரிமாற்றம் செய்ததாகக் கூறுகிறார். ஆனாலும் என்ன எழுதினார்கள்? பதில் எவ்வாறு கிடைத்தது என்பது எமக்கு இன்னும் தெரியாது. முல்லைத்தீவில் தாக்குதல் நடத்தியதன் விளைவாக புலிகளுக்கு இரண்டு வருடங்களுக்குத் தேவையான ஆயுதங்கள் கிடைத்தன. இப்போது கிளிநொச்சித் தாக்குதல் காரணமாக மேலும் ஒரு வருடத்துக்கான ஆயுதங்கள் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. இதனைக் கவனத்தில் எடுத்துப் பார்க்கும் போது திட்டமிட்டே யுத்தத்தை நடத்திச் செல்லச் செய்யப்படும் திட்டமிடப்பட்ட தந்திரோபாயமாகவே இது எமக்குத் தெரிகிறது. தமிழ், முஸ்லிம்கள், சிங்களவர் என்றில்லாது இலங்கையர் என்ற அடிப்படையில் நாட்டு மக்கள் அனைவருமே பழகும் அன்று தான் சமாதானம் ஏற்படும்."

வடகிழக்கு யுத்தத்தில் சிக்குண்டுள்ள எல்லைக் கிராமங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டும் பிரஜைகள் ஆணைக்குழு ஒக்டோபர் 25ம்திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் சாட்சியங்களைப் பதிவு செய்தது.

பெருமளவான மக்கள் பங்களிப்புடன் இங்கு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம, பேராசியர் ஜெயசேகர, சட்டத்தரணி எஸ்.ஜி. புஞ்சிஹேவா, விரிவுரையாளர் லீலா ஐசக், சட்டத்தரணி பாயிஸ், பத்திரிகையாளர் நீர்வைபொன்னையா, விமல் பர்ணாந்து ஆகியோர் சாட்சிகளை விசாரித்தனர்.

# திருமலை: அகதிகளின் தேசம்!



## "திருகோணமலையில் அறுபதாயிரம் குடும்பங்கள் அகதிகளாகியுள்ளன"

-சொக்கநாதன்,
சர்வதேச ஒத்துழைப்பு மாநாடு திருகோணமலைக்கிளை



"இப்போது எம்மிடமுள்ள குடிசன மதிப்பீட்டு அறிக்கை 1981 ஆண்டுக்குரியதேயாகும். அதன்படி திருகோணமலையின் சனத் தொகை, சிங்களவர்கள் 86,341, தமிழர்கள் 86,743, இந்திய வம்சாவளித் தமிழர்கள் 6,367 ஆகும்.

குடிசன மதிப்பீட்டின்படி முஸ்லிம் மக்கள் 30,000 பேரளவில் உள்ளனர். இம்மூன்று இனங்களுமே இதுவரை ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றன. அரசு அரசியல் சமாதானத்துக்காக விரைவான செயற்பாடு ஒன்றுக்குச் செல்லுமானால் அதற்கான நிலைமை நல்லதே. இப்பிரதேசத்தில் ஏற்பட்ட மோதல் மற்றும் பதற்ற நிலை காரணமாக எமக்கு துரதிஷ்டவசமான விடயங்களே எஞ்சியுள்ளன. 1990இற்கு முன்பு மூன்று இனங்களையும் சேர்ந்த ஏறத்தாழ 60,000 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்தன.

1990இன் பின்பு ஏற்பட்ட துரதிஷ்டவசமான மோதல்களில் 1779 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குமாரபுரம், சகாரபுர ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட மோதல்களில் கொல்லப்பட்டவர்களின் விபரங்கள் இதில் உள்ளக்கப்படவில்லை. அம்மோதல்களினால் உடல் ஊனமுற்றோர் தொகை 487 ஆகும்.

திருகோணமலை மாவட்டத்தில் வீடுகளை இழந்தோர் தொகை 1990வரை 50,902 பேர். அச்சம்பவங்களில் அகதிகளானோர் 3,384 பேர் அகதிமுகாம்களில் உள்ளர். 4,958 பேர் உறவினர்களின் வீடுகளில் வாழ்கின்றனர். இன்னும் ஆயிரக்கணக்கானோர் மாவட்டத்துக்கு வெளியே வாழ்கின்றனர். இப்பிரதேச மோதல்களினால் 57 இஸ்லாமியப் பள்ளிவாசல்களும், 47 பௌத்த மடாலயங்களும், 27 சைவக் கோயில்களும் அழிக்கப்பட்டுள்ளன. புதிதாக எமக்குக் கிடைத்துள்ளவற்றுள் இவ்வாறான அழிவுகளும், அகதி முகாம்களும் மட்டுமே உள்ளன. 26 அகதி முகாம்கள் உருவாகியுள்ளதுடன் மூன்று இனங்களும் அகதிகளாக இங்கு வாழ்கின்றன. 627க்கும் அதிகமான கிராமங்கள் சன நடமாட்டமில்லாத சூனியப் பிரதேசங்களாக மாறியுள்ளன. இவற்றில் 102 கிராமங்கள் மீனவக் கிராமங்களாகும். யுத்தத்தால் எமக்கு மிஞ்சுவது இவ்வாறான அழிவு மட்டுமே. இந்த நிலைமைக்கு உள்ளாவது எமது மாகாணமாகவோ அன்றி வேறோர் மாகாணமாகவே இருக்கலாம். சமாதான வழிமுறையொன்றினூடாக இவ்வாறான நிலைமையொன்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென நான் உறுதியாக அடித்துக் கூறுகிறேன்.

## "அகதிகளான எமக்கு எதிராக அரசாங்கம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது"

எஸ்.எம்.காம். இரோஸ் - லிங்கநகர்

"எனது கணவர் 1997 தமிழ் - முஸ்லிம் கலவரத்தில் கொல்லப்பட்டார். எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். திருமணச் சடங்குகளில் சமையல் செய்தும், வீடுகளில் கூலி வேலை செய்தும் வாழ்க்கையை ஓட்டுகிறேன். 1993இல் நாம் லிங்கநகர் அம்மன் கோவில் அருகிலுள்ள பகுதியிலேயே தங்கியிருந்தோம். அதற்கு முன்பு மட்டக்களப்பிலுள்ள ஏறாவூரிலேயே வாழ்ந்து வந்தோம். இங்கு எம்முடன் முன்னூறு பேர் மட்டிலானவர்கள் தங்கியிருந்தனர். அப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு 1994இல் இராணுவம் உத்தரவிட்டது.

ஆனாலும், போவதற்கு இடமேதும் இல்லாததால் மக்கள் வெளியேவில்லை. நாம் அரச காணியொன்றிலேயே தங்கியிருந்தோம். 1997 ஒக்டோபர் 2ம் திகதி அப்பகுதிக்கு வந்த இராணுவம் அப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு எம்மைப் பணித்தனர். வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். எமக்கு ஆபத்து ஏற்படவில்லை. ஆனாலும், மக்கள் அவ்விடத்தை விட்டுச் செல்லவில்லை.

பின்பு பிரதேச செயலாளர் வேலும்மயிலும் எமக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார். எமது வீடுகளுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு செல்வது கூட இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டது. கூரைக்குப் போடுவதற்குத் தகரம் கொண்டு செல்லக்கூட எமக்கு இப்போது அனுமதிக்கப் படுவதில்லை.

கடந்த செப்டெம்பர் 10ம் திகதி பிளான்ரன் பொயின்ட் இராணுவ முகாமுக்கு எங்களை வருமாறு கூறப்பட்டது. அங்கு சென்ற எங்களை இவ் இடங்களிலிருந்து வெளியேறுமாறு இராணுவமும் அரச அதிகாரிகளும் பணித்தனர். நஷ்டாடு தருமாறு நாம் கோரினோம். அதற்கு அவர்கள் இணங்கினார்கள். அதன் பின்பு நாம் அதனை எழுத்து மூலமாகத் தருமாறு கூறினோம். அது தொடர்பாக இதுவரை பதில் ஏதும் இல்லை. நாம் இங்கு இவ்வாறு அமைத்துக் கொண்ட வீடு, துறவுகளைப் போட்டு விட்டு எங்கு தான் செல்வது"



## "சிறுவர் விடுதிகளைப் பதிவு செய்யாதது ஏன்?"

-சுந்தரலிங்கம்

"மைத்திரி சிறுவர் இல்லம், தபோவனம், மெதடிஸ்த சிறுவர் இல்லம் போன்ற சிறுவர் இல்லங்கள் நான்கு எனது பொறுப்பில் நிர்வகிக்கப்படுகின்றன. இந்நிலையங்கள் நான்கிலும் 90 சிறுவர்கள் உள்ளனர் இங்குள்ள எல்லாச் சிறுவர்களுக்குமே வேறு எதுவித போக்கிடமும், பாதுகாப்பும் இல்லை. ஒன்றில் தாய், தகப்பன் இருவருமே உயிருடன் இல்லை. ஒரு சில காலத்துக்கு முன்பு திருகோணமலையில் இருந்த மோசமான சூழ்நிலைகள் காரணமாகவே இச் சிறுவர்கள் தமது பெற்றோரை இழந்தனர். இராணுவத்தினது அல்லது வேறு ஆயுத பாணித் தமிழ் இயக்கங்களின் வன்முறை காரணமாக அச் சிறுவர்களது பெற்றோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் அநேகரது தந்தைமார் உயிருடன் இல்லை. தாய்மாரால் பிள்ளைகளை வளர்த்துக் கொள்ள முடியாது எம்மிடம் ஒப்படைத்துள்ளார்கள். நாம் இச் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவிக் கரம் நீட்டுகிறோம். வேறு திறமையுள்ள சிறுவர்ளை அத்துறைகளில் ஈடுபடுத்துகிறோம். நாம் இந் நிறுவனத்தைப் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளிகள் ஆகியோரிடமிருந்து சேர்த்த பணத்திலேயே நடத்துகிறோம்.

இச் சிறுவர் இல்லம் அரசில் பதியப்படாத காரணத்தால் நாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறோம். ஆனபடியால் அதனை நடத்திச் செல்ல அது பெரும் தடங்கலாக உள்ளது. நாம் நான்கு தடவைகள் இந் நிறுவனங்களை அரசில் பதிவு செய்யக் கோரியிருந்தாலும், இதுவரை அது சாத்தியமாகவில்லை. அதற்கான உரிய காரணமேதும் எமக்குத் தெரிவிக்கப்படவுமில்லை. எமக்கு இதன் பதிவைத் தந்து அரசு ஒத்துழைப்பு வழங்குமானால் இதனைவிட மிகுந்த சேவையொன்றை அனாதைகளான பிள்ளைகள், சிறுவர்களுக்குச் செய்யக் கூடியதாயிருக்கும்.

தமிழில்: சி.செ.ராஜா

நன்றி : யுக்திய - 19981129

## ஓடிப்போனவன்...

ஃபிரெஞ்சுக் கவிஞர் போரிஸ் வியான்
தமிழில்: வெ. ஸ்ரீராம்

குடியரசுத் தலைவர் அவர்களே
இதோ உங்களுக்கு ஒரு கடிதம்
நீங்கள் ஒருவேளை அதைப் படிக்கலாம்
உங்களுக்கு நேரம் இருந்தால்.

இப்போதுதான் கிடைத்தன எனக்கு
இராணுவத்திலிருந்து உத்தரவுக் காகிதங்கள்
புதன் பொழுது சாய்வதற்குள்
போருக்குப் புறப்படச் சொல்லி.

குடியரசுத் தலைவர் அவர்களே
நான் அப்படிச் செய்யப் போவதில்லை
இந்த பூமியில் நான் பிறந்தது
ஒன்றுமறியா மக்களைக் கொல்வதற்கல்ல.

உங்களுக்குக் கோபமூட்ட வேண்டுமென்றல்ல
ஆனாலும் நான் சொல்லத்தான் வேண்டும்
என் முடிவு எடுக்கப்பட்டு விட்டது
நான் ஓடிப் போகப் போகிறேன்.

பிறந்தது முதல் இன்றுவரை
பார்த்து விட்டேன் எல்லாம்
தந்தையின் சாவு சகோதரர்களின் பிரிவு
என் குழந்தைகளின் அழுகை.

இன்று கல்லறைக்குள்ளிருக்கும் என் அன்னை
எவ்வளவு துன்புற்றிருக்கிறாள்
இன்று அவளுக்குத் துச்சமாகி விட்டன
குண்டுகளும் கவிதை வரிகளும்.

நான் கைதியாக இருந்தபோது
என்னிடமிருந்து பறிக்கப்பட்டன
என் மனைவி என் ஆத்மா
இனிய என் கடந்த காலம் முழுவதும்.

நாளை அதிகாலையில்
இறந்த ஆண்டுகளின் முகத்தில்
அறைந்து சாற்றுவேன் என் கதவை
புறப்பட்டுச் செல்வேன் என் பாதையில்.

பிச்சையெடுத்து வாழ்வேன்
பிரான்ஸ் நாட்டு வீதிகளில்
வடமேற்கிலிருந்து தென்திசைவரை
மக்களிடம் எடுத்துச் சொல்வேன்.

மறுங்கள் அடிபணிய
மறுங்கள் போர்புரிய
போகாதீர்கள் போருக்கு
புறப்பட மறுங்கள்.

நாட்டுக்கு இரத்தம் தேவையென்றால்
நீங்கள் போய்த் தாருங்கள்
தெய்வ தூதராயிற்றே நீங்கள்
குடியரசுத் தலைவர் அவர்களே.

என்னைப் பின்தொடர்வதானால்
சேவகர்களிடம் சொல்லிவிடுங்கள்
ஆயுதமிருக்காது என்னிடம்
தைரியமாகச் சுடலாம்.

நன்றி: இனி
ஜனவரி 1987

யுத்தத்தை முடிக்க இன்னும் இருபதினாயிரம் படைகள் தேவை என்கின்றது அரசு. அதற்காக டிசம்பர் ஏழாம் திகதி ஐயாயிரம் பேரை புதிதாகப் படையில் இணைத்துக் கொள்வதற்கான ஆட்சேர்ப்பும் ஆரம்பமாகியிருக்கிறது. மீதி பதினையாயிரம் பேரையும் இராணுவத்தை விட்டு ஓடிப்போனவர்களைத் தேடிப் பிடிப்பதனூடாகச் சேர்க்க முயல்கிறது. போரிஸ் வியான் என்ற பிரெஞ்சுக் கவிஞர் இராணுவத்திலிருந்து ஓடிப்போனவர்கள்பற்றி "ஓடிப்போனவன்" என்று ஒரு கவிதையை எழுதினார். இது பாடலாக பிரெஞ் வானொலியில் ஒலிபரப்பாகியது. இதனைத் தடைசெய்யுமாறு உத்தரவு பிறப்பித்ததார் போல் ஃபாபெர் என்ற நகராட்சித் தலைவர். அவருக்கு போரிஸ் வியான் எழுதிய பகிரங்கக் கடிதமே இங்கு பிரசுரமாகிறது. இதனைத் தமிழில் மொழி பெயர்த்தவர் வெ.ஸ்ரீராம். ' இனி 'யில் வெளியான ஓடிப்போனவன் கவிதையையும், பிரசுரமாகமல் இருந்த இக் கடிதத்தையும் அனுப்பி வைத்திருப்பவர் எஸ்.வி.ராஜதுரை.

*நான் எழுதிய ஒரு எளிய பாசாங்கற்ற, 'ஓடிப்போனவன்' என்ற பாடலை வானொலியில் கேட்டபின்பு, ஒரு தீப்பந்தத்தின் ஒளியை அதன் மேல் பாய்ச்சி-யிருக்கிறீர்கள். உங்கள் கருத்துப்படி இது இழிவு சரியான வழிகாட்டிகள் இல்லாமல், சரியான தகவல்கள் இல்லாமல் இருந்த அவர்களுக்குத் தற்காப்பாக இருந்த துப்பாக்கிகளில் அவர்களுக்குக் காலங்கள் முடிந்து விட்டனவே என்று வருந்துகிறவனா"? "சண்டையிடுவதில் தன்னை நிரூபித்துவிட்டவன் அவன்" என்று சொன்னால், அதில் சற்று*

*படுத்துகிறது முன்னாள் இராணுவத்தினரை: பழைய தற்போதைய, வரப்போகின்ற போர்களின் வீரர்களை. சேன் மாவட்டத்தின் பிரதான ஆணையாளரிடம் "இந்தப் பாடலை வானொலியில் ஒலிபரப்பக் கூடாது" என்று. கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். வானொலியில் தணிக்கை இருக்கிறது என்பதை இது ஊர்ஜிதப்படுத்துகிறது. உரியவர்கள் தெரிந்து கொள்ளட்டும். தெரிந்து கொள்ளப்பட வேண்டிய விஷயம் இது.*

*ஆனாலும், ஒலம்பியா அரங்கில் மூன்று வாரங்களும், பாபினோ அரங்கில் 15 நாட்களும் இந்தப் பாடல், மூலூட்ஜி* (*Moulodji*) *என்ற பாடகரால் பாடப்பெற்று, ஆயிரக்கணக்கானவர்களால் கைதட்டி வரவேற்கப்பட்டது. இது உங்களுக்கு சொல்லித்தான் தெரியவேண்டுமென்பது எனக்கு வருத்தத்தை*

*கொடுக்கப்பட்ட தோட்டாக்கள் நுழையக்கூட இல்லை. (1940 - மே மாதம் என் அண்ணனுக்கு இப்படி நேர்ந்தது.) 1940இல் போரிட மறுத்த போர்வீரர்கள், உலகுக்கு புத்திசாலித்த-னத்தால் ஒரு பாடம் கற்பித்தார்கள். போரிட முனைந்தவர்கள் நன்றாக உதை வாங்கினார்கள்...*

*முரட்டுத்தனம் தொனிக்கிறது. ஒரு போரில் வென்றவன் அவன்" என்று சொன்னால் அதுவும் ஒரு வித ஜம்பம்-தான்.*

*உண்மையாகச் சொல்கிறேன்.. "முன்னாள் போர்வீரன்" என்பது ஒரு ஆபத்தான சொல்: போரில் ஈடுபட்டது குறித்து ஒருவர் ஜம்பம் அடித்துக் கொள்ளக் கூடாது. மற்ற எல்லாரையும் விட் ஒரு முன்னாள் போர்வீரன் உண்மையிலேயே போரை வெறுக்க முடியும். உண்மையான "ஓடிப்போனவர்கள்" பெரும்பாலும் முன்னாள் போர்வீரர்கள் தாம். சண்டையின் இறுதிவரை செல்ல சக்தியற்றுப் போய் விட்டவர்கள். அவர்கள் மீது கல்லெறிய யார் முன்வரப்போகிறார்கள்....? இல்லை, ஃபாபர் அவர்களே, என் பாடல் யாருக்-*



# சமாதானத்திற்காகப் போரிட்டீர்களா? சந்தோஷத்திற்காகப் போரிட்டீர்களா?

## இராணுவத்திலிருந்து ஓடிப் போனவர்களிடம் ஒரு கேள்வி!

*அளிக்கிறது. இதைக் கேட்டவர்களில் சிலர் அதிர்ச்-சியுற்றார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அவர்கள் மிகச்சிலரே. அவர்கள் இப்பாடலைப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அவர்க-ளுக்காகவும் சில விளக்கங்கள் தர விழைகிறேன்.*

*முதலாவதாக, இந்த இரண்டில் ஒன்று தெரிந்தாக வேண்டும். முன்னாள் போர்வீரர்களே, நீங்கள் போரிட்டது சமாதானத்துக்காகவா அல்லது உங்கள் சந்தோசத்துக்காகவா? சமாதானத்துக்காகத் தான் நீங்கள் போரிட்டீர்கள் என்றால், - நானும் அப்படியே நம்பத் தயாராக இருக்கிறேன். - உங்களைப் போன்ற ஒருவன் மீது அனாவசியமாகப் பாயாதீர்கள். மாறாக, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்: 'போர் புரிதல்' என்பதை சமாதான காலத்தில் தாக்காமல் வேறு எப்போது தான் தாக்க ஒருவருக்கு உரிமை இருக்கிறது? அல்லது ஒரு வேளை, நீங்கள் போரை விரும்பினீர்களா? உங்கள் சந்தோசத்துக்காகத் தான் போரிட்டீர்களா? அப்படியிருக்குமென்று நான் நினைத்துக் கூடப் பார்க்க மாட்டேன். ஏனெனில், நான் அதுபோன்ற முரட்டு சுபாவம் உடையவன் அல்ல. ஆகவே, நீங்கள் எதற்காகப் போராடினீர்களோ அதற்காகவே போராடும் இந்தப் பாடலை, இல்லாததும் பொல்லாததுமாகச் சொல்லித் திரிக்கப் பார்க்காதீர்கள்: அது நியாயமான யுத்தம் இல்லை.*

*ஏனெனில், நியாயமான போர், அநியாயமான போர் என்று இரண்டு வகை உண்டு - என் கருத்துப்படி, என்னைப் போன்ற பலரின் கருத்துப்படி, "நியாயம்", "போர்" என்ற இரண்டு வார்த்தைகளையும் சேர்த்துப் படிப்பதே அதிர்ச்சியூட்டுவதாக இருந்தாலும், 1940 - இல், பிரெஞ்சுப் போர் வீரர்களை நடத்தும்படி கட்டளையிடப்பட்ட போரை 'நியாயமான போர்' என்று நீங்கள் சொல்வீர்களா? முறையான ஆயுதங்கள் இன்றி,*

*இன்னுமொரு விஷயம் தன் தாய்நாட்டுக்காக இறப்பது சிறந்தது தான்: இருந்தாலும் எல்லோருமே இறந்துவிடக் கூடாது அல்லவா? அப்புறம், தாய்நாடு ஏது? ஏனெனில், தாய்நாடு என்பது வெறும் மண்ணல்ல - அதில் வாழும் மக்கள் தான் . (என்னுடைய இந்தக் கருத்தை ஜெனரல் தெ கோல்* (*De Gaulle*) *மறுக்க மாட்டார் என்று நினைக்கிறேன்.) இந்தப் பாடல் வக்காலத்து வாங்குவது போர் வீரர்களுக்காக அல்ல: சாதாரண குடிமக்களுக்காக. சிப்பாய்களுக்கும், மீண்டும் குடிமக்களாவதைத் தவிர வேறு அவசரமான காரியம் எதுவும் இருக்க முடியாது. ஏனெனில், அதுதான் போர் முடிந்து விட்டது என்பதை நினைவுறுத்தும்.*

*மற்றப்படி, இந்தப் பாடல் மறை-முகமாக ஒரு குறிப்பிட்ட சாராரைத் தாக்குகிறது என்று தோன்றினால், அப்படித் தாக்கப்படுபவர்கள் நிச்சயமாக சாதாரண குடிமக்களாக (சிவிலியன்களாக) இருக்க முடியாது: முன்னாள் போர்வீரர்கள், இராணுவத்தினர் ஆவார்களா? முன்னாள் போர்வீரர்களுக்கு உங்கள் அகராதியில் என்ன பொருள் என்பதை எனக்கு விளக்குவீர்களா? அவன் "தன் நாட்டைக் காப்பதற்கு ஆயுதம் ஏந்த வேண்டியதாகி விட்டதே என்பதற்காக வருத்தப்படும் மனிதனா" அல்லது "போர்புரிந்த அந்தக்*

*காவது கசப்பாக இருந்திருக்கு-மேயானால், அது நிச்சயம் முன்னாள் போர்வீரனாக இருக்க முடியாது. தொழில் ரீதியான இராணுவத்தினர் சிலருக்கு வேண்டுமென்றால் அப்படி இருந்திருக்கலாம். வேறு ஒருவிதமான அரசியல் சூழ்நிலை ஏற்படும்வரை, என் கருத்து இதுதான்: ஒரு சாதாரணக் குடிமகனாக இருப்பதில் மகிழ்ச்சி அடைபவனே முன்னாள் போர்வீரன்.*

*தொழில்ரீதியான இராணுவத்தினர் சிலர் போர் என்பது தவிர்க்க முடியாத ஒரு தொற்று நோய் என்று கருதுகின்றனர். ஆகவே, அதை கூடிய சீக்கிரமே முடித்து ஒழித்துவிட வேண்டுமென்கின்றனர். அவர்கள் இராணுவத்தினராக இருப்பதே தவறு: ஏனெனில், அந்தத் தொற்று நோயை எதிர் கொள்வதில் ஏற்கெனவே நம்பிக்கையை இழந்துவிட்டவர்கள் அவர்கள். இப்படிப்பட்ட இராணுவத்தினர் நாணயமான மனிதர்கள்.*

*மடையர்கள், ஆனால், நாணயமா-னவர்கள். ஆனால், அவர்கள் கூட இந்தப் பாடலினால் தாக்கப்பட்டவர்களாகத் தங்களைக் கருதவில்லை. அவர்களில் சிலர் இந்தப் பாடலுக்காக என்னைப் பாராட்டியும் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். துரதிருஷ்டவசமாக, இது போலல்லாத தொழில்ரீதியான இராணுவத்தினரும்*

—1



## பொ. கருணாகரமூர்த்தி

(1)

சற்றேனும் நான் எதிர்பாராமல் ஒரு கனவில் கிடைத்துவிட்ட புதையலைப்போல வேலைக்கான நியமனக் கடித்தைப் கையில் பெற்றுக்கொண்டு அந்த கட்டிட ஒப்பந்தக்கம்பனியின் படிகளை விட்டு இறங்குகையில் பூமியில் அன்று பல சூரியன்கள் உதித்திருந்தன. புவனமெங்கும் இசையும் இன்பமும் நிறைந்து என்னைப்போலவே உலகத்து மாந்தர் அனைவருமே ஆசீர்வதிக்கப்பட்டும் ஆனந்தித்தும் இருப்பதாகப் பட்டது.

வேலை தேடி அவ்வளவுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்கள், பாக்டரிகள், ஹொட்டல்கள், பண்ணைகளென கால்கள் விட்டுப்போகும்படி அலைந்தாயிற்று. எவ்வளவு நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புகளுடனும் காத்திருக்கும் என் குடும்பத்திற்கு இன்னும் எத்தனை வருஷத்திற்குத் தான் -வேலை இன்னும் தேடிக்கொண்டிருக்கிறேன்... சீக்கிரம் கிடைத்துவிடும்- பல்லவியை எழுதிக்கொண்டிருப்பது?

அன்றைய காலைப்பொழுது நிச்சயமாக வாழ்வின் மறக்க முடியாத ஒரு காலைப்-பொழுதாகவே விடிந்து விட்டிருந்தது...

என்னை நேர்முகம் செய்த அந்தக் கம்பனியின் உரிமையாளனும் இயக்குனனுமாகிய ஜேர்மன்காரனுக்கு என்னை விடச்சில அகவைகள் குறைவாகக்கூட இருக்கலாம். மழுங்க ஷேவ் பண்ணிய முகத்தில் ஒரு சீதேவிக்களை. "கொழும்பில் கட்டிடக் கலைத்துறையில் படவரைஞனாக பத்து ஆண்டுகள் பணிசெய்த அனுபவம் உண்டு" என்றேன்.

"உனக்கு வசதிப்படுமென்றால் அடுத்த திங்களே வேலையை ஆரம்பிக்கலாம்." என்றான்.

மூன்றே மாதத்தில் என்கடின உழைப்பு, திறமை, விசுவாசம், மற்றும் பல்துறைகளிலும் எனக்கிருந்த ஆர்வம் என்பன அவனுக்குப் பிடித்துப்போக அஸெஸர் அல்லது எஸ்ரிமேட்டர் என்று சொல்லக்கூடிய ஒரு பதவியில் போட்டான். அந்த ஆண்டில் கம்பனி பத்தரை மில்லியன் ஜெ. மார்க்குகள் தேவையென மதிப்பிட்டிருந்த தொடர்மாடிக் கட்டிடம் ஒன்றை ஏழு மில்லியனுள் முடித்துக் காட்டினேன்.

"படு கில்லாடிப் பயலாய் இருக்கிறியே நீ !" என்று பாராட்டியவன் அன்றே ஆர்க்கிரெக்ட் இஞ்ஜினியர்களுக்கு நிகராய் என் சம்ப-ளத்தையும் உயர்த்தியது காரியாலயத்தில் பலரது புருவங்களையும் மேலே உயர்த்தியது.

விருப்புக்குரிய பொஸ்- சமர்த்-துப்பிள்ளையென்று இருந்த எமது உறவு ஹொலிடேபாரடைஸ் என்று என்றைக்கு ஸ்ரீலங்காவுக்குப் போய் வந்தானோ அன்றிலிருந்து விரிசல் கண்டது.

- எங்கெங்கெல்லாம் சுழியோடலாம்- என்று என்னிடம் விபரம் கேட்டுப்போன பிரான் ஒக்ஸிஸன் சிலின்டரை எங்கேயோ ஓரமாக வைத்து விட்டு தூண்டில் போடுவதில்தான் முழுநேரமும் வினைக்கெட்டிருக்கிறார்.

விடுமுறையால் திரும்பியதும் காரியாலயத்தில் எல்லோருக்கும் கைகொடுத்துக்கொண்டுவரும்போது (இவர்கள் வழக்கம்) "எப்படியிருந்தது பாரடைஸ்?" என்றேன்.

கட்டைவிரலையும், சுட்டுவிரலையும் குவித்து "ஸூப்பர்!" என்றவன்

அத்துடன் நிறுத்தாமல்

"ஒரு ஐந்நூறுமார்க் போதும் ... ஒரு வாரத்திற்கே காலடியில் கிடப்பாளவை ... ... " என்று அனைவர் முன்னிலையிலும் கொழும்புச் சாக்கடையைக் கலக்கினான். அதைக் கேட்டவர்கள் எல்லோரும் பல்வேறு தினிசுகளில் சிரித்தார்கள்.

உள்ளூரக்கோபம் வந்துதகிக்க மனது வருத்தத்தில் தோய்ந்தது.

மறுநாள் -கா:ப்பி இடைவேளையின் போது கேட்டேன்:

"ஸ்ரீ லங்காவில் போர் நிலைமைகள் எப்பிடியிருக்கு... ஏதாவது அறிந்தாயா...?" (இங்கே கூட்டாக வேலை செய்பவர்களை தோழமையுடன் du என்று ஒருமையில்தான் அழைப்பதுதான் வழக்கம்.)

"என்ன போரா... " லங்காவிலா... யார் சொன்னது? அப்படி ஒரு சத்தமும் என்காதில் விழவில்லையே... நான் கேட்டதெல்லாம் அம்மே..."ம் மே... அம்மே..." ம்மே தான்."

கண்களை ஒருமாதிரி மேலே சொருகிக்கொண்டு திரும்பத்திரும்ப முனகிக்காட்டியதோடு "I like their moanings" என்றான் இங்கிலிஷில்.

சாக்கடையில் தோய்த்த விளக்குமாற்றை என் முகத்திற்கு முன்னே பிடித்து ஆட்டுவதை அறியாமல் பேசிக்கொண்டே போனவன் இடையில் "நல்ல நாடு வீணே சீரழியுது" என்றான்.

என்ன அர்த்தத்தில சொல்கிறானென்று புரியவில்லை. கேட்டேன்:

"எப்படி? "

"உலகத்தில ஒவ்வொருத்தரும் தன்னுடைய மொழியால, மதத்தால, இல்லை வேறொரு அடையாளத்தால தனிநாடு கேட்கத்தலைப்பட்டால் அரசுகளின் எண்ணிக்கை தான் அதிகரித்துக் கொண்டு போகுமே தவிர பிரச்சினைகள் எதுவும் தீர்ந்தபாடாக இருக்காது... உங்களின் தனிநாட்டுக்கான போராட்டம் அர்த்தமற்றது... குழந்தைத்தனமானது."

பிரானுக்கு அங்கே யாரோ மூளைச்சலவை செய்து விட்டிருக்கிறார்கள். தான் பிரச்சனையை தெரிந்து கொண்ட கோணத்தில் விவாதத்தை வளர்த்தினான்.

"நீயும் ஒரு மாதமென்றாலும் ஒரு தமிழனாய் வாழ்ந்து பார்த்தால் தான் உன்னால் எங்கள் பிரச்சனையின் முழுப்பிரிமாணத்தையும் உணர முடியும், எங்கள் கோரிக்கைகளின் போராட்டத்தில் உள்ள நியாயத்தை புரியமுடியும்."

"போராட்டந்தான் நியாயமென்றால் அங்கேயே நின்று போராடவேண்டியதுதானே... இங்கே ஏன் வாறியள்?"

"உனது வீடு திடீரென தீப்பற்றிக்கொண்டால் முதல்ல என்ன செய்வாய்? "

மௌனமாயிருந்தான்.

"எங்கள் தீவு தீப்பற்றிக் கொண்டு விட்டது. இன்றைக்கு மூன்று இலட்சம் மக்கள் தங்கள் குழந்தைகளுடன் கூரைகளை இழந்து காட்டிலும் மரத்தின் கீழும் நிற்கிறார்கள் ஐயனே!"

"பிரச்சினை எப்படித்தானிருந்தாலும் அங்கு நின்று முகங்கொடுத்திருக்க வேண்டுமே தவிர இங்கு வருவது தப்பு. பிரச்சனையால்தான் வந்தோமென்று விவாதிப்பது அதைவிடவுந்தப்பு."

"நாளை ஒருநாள் ஜெர்மனியில ஒரு அணுக்குண்டொன்று வெடிக்குதென்று வைப்போமே... நீங்கள் அங்கே வருகிறீர்கள்... நீங்கள் ஏன் வருகிறீர்கள் இங்கே என்று அப்போது நாங்கள் கேட்கப்போவதில்லை."

"நிறையவே கனவு காண்கிறாய்!"

"வரலாற்றில் நிகழ்வுகள் சொல்லிக்கொண்டு இடம்பெறுவதில்லை... இரண்டாம் உலகப் போரின் உக்கிரம் தாங்காது எத்தனை பேர் நாட்டை விட்டு ஓடினீர்களென்று தெரியுமா...?"

"நான் போருக்குப்பின்னால் பிறந்தவன்... போரின்போது நடந்த சம்பவங்கள் எதையும் நான் பார்த்ததில்லை... நான் ஜெர்மன்காரன் எனக்கே போரைப்பற்றிச் சொல்லுறியா?"

"இருக்கட்டும் ... நீ விவாதிப்பது ஒரு Historian னுடனாக்கும்."

"நான் ஜெர்மன்காரன்." ( எனக்கு அதிகம் தெரியும் என்ற அர்த்தத்தில்) "இப்படி நான் ஜெர்மன்காரன் நீ வெளி நாட்டவன், நான் வெள்ளையன் நீ நிறங்கொண்டவன், நான் வேறு வர்க்கம் நீ வேறு வர்க்கம் என்று பேசும் பார்வைக்குறுக்கம் கொண்டவர்களுக்கு எனது மொழியில் வேறுபெயர்... இவர்களுடன் விவாதிப்பதில் எனக்கு இஷ்டமில்லை."

விவாதம் இப்படிச் சூடாகுமென்று எண்ணியிருக்க மாட்டான். திடுமென முகம் இருண்டு கன்றிப் போனது.

எங்கள் ஜாதி அபிமானம் மாதிரி இவர்களுக்கும் பொதுவாக - நான் ஜெர்மானியன்- எனக்குத் தெரியாதது ஒன்றில்லை என்ற மிதப்பான எண்ணம் தவிர்க்க-முடியாதபடியுண்டு. இருப்பினும் அது வெளிப்படையாகத் தெரிவதை மறைத்துக் கொள்ளவும் தெரியாததால் சமயங்களில் அவ்வப்போது வெளிப்படச் செய்யும்.

தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள அவ்வப்போ என்னதான் முதுகில் தடவியே கொடுத்தாலும் இவர்கள் மெலிதான ஒரு இடைவெளிவிட்டே பழகுவதை ஒரு வெளி-நாட்டுக்காரனால் உணருவதில் சிரமமிருக்காது.

அந்த விவாதத்தின் பின்னால் அவ்விடைவெளி இன்னும் அதிகமாகியதை உணர முடிந்தது.

வேலை அதிகம் இருக்கும் நாட்களாயின் முன்பெல்லாம் வாசல்வரை வந்து அழைத்துப்-போவான். இப்போது நான் வருவதையே கண்டு-கொள்ளாதிருந்தான்.

"Guten Morgen" சொன்னாலும் வேறுயாருக்கோ சொல்வது போலவே சொன்னான்.

முந்திய அரட்டைகள், கிண்டல்கள், எல்லாம் நின்று போனது.

இரண்டு நாட்கள் கழித்து காரியாலயக் காரைப்பாவனைக்கு எடுக்கும்போதும் திரும்பக் கொண்டுவந்து விடும்போதும் நேரம் பதிவுசெய்ய வேண்டுமென்று எனக்கு மட்டும் தனிச்சுற்று வந்தது.

அதுவரை பொறியியலாளர் தரத்திலுள்ள வேறு எவரும் அப்படி நேரப்பதிவுசெய்தல் வழக்கமில்லை. நான் காரியாலயக் காரைப்பாவிப்பதையே தவிர்த்தேன்.

என்னதான் பணத்தைக் கொட்டிக் கொடுத்தாலும் ஒரு பகலெல்லாம்

பொழுதைச் செலவிடும் காரியாலயத்தில் பாகுபாடும் பழக்கத்தில் சுமுகமும் இல்லையென்றால்... போகப் போக வேண்டாப் பொண்டாட்டி கதையாகி விடும்.

ஒரு நாள் "நான் நின்று கொள்கிறேன்." என்றேன்.

அவனுக்குச் சற்றே உள்ளூர அதிர்ச்சி. அதைக் காட்டிக் கொள்ளாதபடி சொன்னான்:

"நான் உன்னை நிற்கும்படி சொல்லவில்லையே..."

"இல்லை... நின்று விடுவதே நல்லது."

"நீ விரும்பினால் தொடர்ந்தும் வேலை செய்யலாம்...

"The choice is your... ஆனால் நீ போய்விடுவதால் நான் கம்பனியை இழுத்து மூடிவிடுவேன் என்று மட்டிலும் எண்ணிவிடாதே!"

மூளையில் யாரோ துருப்பிடித்த ஊசியைச் சொருகுவது போலிருந்தது.

"Auf wiedersehen."

"Auf wiedersehen." ( Good bye).

அதுவும் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு நாளாகவே ஆகிப்போனது.

(2)

மீண்டும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. பூரணமாக ஒரு வருஷம் பணியில் நிலைத்திருந்தாலாவது கடைசியாகப் பெற்றசம்பளத்தின் மூன்றிலிரண்டு அளவிலான தொகையை இரண்டு வருஷங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் தரும். இதுதான் நடு உழவில் நந்தக்கயிறு அறுந்த கதையாயிற்றே !

வேலையற்ற நாட்கள் முன்னரைப் போலவே சோம்பேறித்தனமாக கழிய ஆரம்பித்தன. உடல் நிறை மாத்திரம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கிலோவால் கூடிக்கொண்டு போனது. இருந்தும் - இனி எவனுக்கும் மாடாய் அடித்துக்கொடுப்பதில்லை- என்பதில் தீவிரமாயிருந்தேன்.

மீண்டும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் விறாந்தையை தேய்க்கத்தொடங்க வேண்டியதாயிற்று. இடையிடையே பாண் பேக்கரிகள், மரவேலைப்பட்டறைகள், கார் மோட்டோர்சைக்கிள் றிப்பேர் கராஜுகள், நாய் பூனைத்தீவன விற்பனை நிலையங்கள் என்று நீக்கல் தெரிந்த கதவுகள் அனைத்தினூடாகவும் புகுந்துவெளியேறினேன். சிலர் அனுதாபமாகப்பார்த்தார்கள், சிலருக்கு வேலைதேடும் வெளிநாட்டவனுடன் பேசவே பிடிக்கவில்லை.

ஒரு பிஸ்ஸா கடையின் கண்ணாடிச்சுவரில் வெளி ஓடர்களுக்கு பிஸ்ஸா விநியோகம் செய்ய ஆள்தேவை என்று நோட்டிஸ் எழுதி ஒட்டிருந்தது. உடனே உள்ளே நுழைந்தேன். அந்த இத்தாலியனுக்கும் என் நிறம் பிடிக்க-வில்லைப்போலும். "ஆள் எடுத்துவிட்டோம்." என்று பச்சைப்பொய் சொன்னான்.

மாதாந்த சோஷல் உதவிப்பணம் பெறுவதாயினும் ஒவ்வொரு மாதமும் வேலைவாய்ப்பு அலுவலகம் போய் வேலை இன்னும் கிடைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஸ்டாம்ப் குத்திக்கொள்ள வேண்டும்.

அதற்காக ஒரு முறை வே.வா.அலுவலகம் போய் காத்துக்கிடக்கையில் யாருமில்லாமல் காலியாயிருந்த ஒரு கணினியில் ஏதாவது வேலை வாய்ப்பு இருக்கிறதா என்று நோண்டிப்பார்த்தேன்.

-கிளீனிங்- என்ற நிரையில் ஒரு -பப்பில்- வேலை காலியாக இருப்பதாக கணினி தெரிவித்தது. அவ்விளம்பரம் வே.வா. அலுவலகத்திறகு மூன்று மாதத்திற்கும் முன்னே வந்திருந்தும் இன்னும் அவ்வெற்றிடம் நிரப்பப்படாது காலியாகவிருந்ததுவும் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. காலியாக இருக்கிறதென்றால் ஏதாலும் கோல்மால் பிடித்த இடமாகவிருக்கும்: மேலும் ச்சீ.... படவரைஞன் பஞ்சத்திற்காக துடைதுண்டைப் பிடிப்பதா? மனசில் அவ்வளவாய் ஆர்வம் பிறக்கவில்லை.

நான் அடுத்த மாதம் போனபோதும் கணினியைப்பார்க்கிறேன். அந்த வேலை இன்னும் காலியாகவே கிடக்கிறது! சுங்கஇலாகா அதிகாரியாயிருந்த ஆனந்தராஜா "தம்பி தொழில்ல கௌரவம் பார்த்தன் என்டால் என்ரை குமர் நாலும் கரையேறாது." என்றுவிட்டு டெனிஸ் கோர்ட்டில் பந்து எடுத்துக்கொடுக்கவில்லையா?

எந்த றிஸ்க் என்றாலும் எதிர்கொள்வதென்று மனம் வேறு குறுகுறுக்கிறது. -எதற்கும் என்னதான் நடக்குதென்று பார்ப்பமே... அப்பிடித்-திரும்பிவரவிடாமல் என்ன கட்டியா போட்டு விடப் போகிறார்கள்... - என்றுவிட்டு அதில் தரப்பட்டிருந்த விலாசத்தை குறித்து எடுத்துக்கொண்டு இரைந்துகொண்டுபோனேன்.

சிலந்திவலைச் சிக்கலாய் பேர்லினுக்குக் குறுக்காகவும், நெடுக்காகவும் ஓடும் சுரங்க- வேக ரயில்ப்பாதைகளின் சந்திப்பொன்றில் அமைந்த **Gesundbrunnen** எனும் ரயில் நிலையத்தின் எதிரில் அமைந்திருந்தது அந்த -பப்-.

வேலைக்காக வந்திருக்கிறேன் என்று தெரிவித்தபோது அதன் சொந்தக்காரன் (ஜெர்மானியன்) -தற்போது தனியார் கம்பனி ஒன்றைக்கொண்டு அந்த வேலையைச் செய்விப்பதாகவும் தினமும் இருநூறு மார்க்குகள்

பறப்பதாகவும்- ஓலமிட்டான். இரவுப்படி நீங்கலாக தினம் நூற்றியிருபது மார்க்குகள் தந்தால் வேலையை ஒப்புக்கொள்வதாக - டிமான்ட்- பண்ணினேன்.

சவுக்குக்காடு மாதிரியிருந்த தலைமுடிக்குள் பென்சிலைச் சொருகி சொறிந்தபடி யோசித்தவன் என்ன நினைத்தானோ சட்டென "ஓகே" என்றான்.

எனது பணி இவ்வளவுதான். இரவு -பப்பின்- வியாபாரம் முடிய எல்லாம் போட்டது போட்டபடி போய்விடுவார்கள். நான் -பப்பை- ஒழுங்காக்கி மறு நாள் வியாபாரத்திற்கேற்றபடி தயார் பண்ணிவைத்துவிட்டு காலை அவர்கள் யாராவது வந்து பப்பைத் திறக்கும்வரை காவலிருக்கவேண்டும்.

அந்தப் பணியில் எனக்கு வாசிக்க நிறையவே நேரங்கிடைக்குமாதலால் எந்தன் மகிழ்ச்சி இரட்டிப்பானதாகவிருந்தது.

(3)

இந்த பப்பில் வேலை ஆரம்பித்த நாளிலிருந்து பார்க்கிறேன். மழையோ உறை பனியோ... டாணென்று 3 மணிக்கு ரயில் நிலைய முன்விதானத்தை ஒட்டியுள்ள

-கியோஸ்க்- பக்கமாக நீளக்கோட்டுப்போட்ட ஒரு கிழவன் ஆஜராகிவிடுவான்.

வந்ததும் பூட்டியிருக்கும் கியோஸ்க்கின் வெளிநீட்டமான விற்பனைத்தட்டில் ஒரு முழங்கையை ஊன்றிக்கொண்டும், கால்களை -எக்ஸ்- மாதிரி வைத்துக்கொண்டும் நின்று புகைபிடிப்பான். கோட்டுப்பையிலிருந்து பியர் கானை எடுத்து ஒருதரம் உறிஞ்சுவது.... பின் சிகரெட்டை இழுப்பது- மாயிருப்பான். தீவிரமான புகைப்பிரியன் போலும்... சிகரெட் தவிர.... சாண் நீளத்தில் பிறேசில் சுருட்டு, சில வேளைகளில் சுங்கான் என்று மாறிமாறிப் புகைப்பான்.

அவன் வயசு காரணமாய் வற்றலான கன்னங்களோடு சற்றே குள்ளமாகவிருப்பான். அதை விடுத்துப்பார்த்தால் படியாததலை, பாதி நரைத்துவிட்டதாடி, அடர்ந்த புருவங்கள் என்று எல்லா அம்சங்களிலும் எனக்கு அவன் எப்போதுமே ஒரு வாழும் கார்ள்-மார்க்ஸையே நினைவு படுத்திக்கொண்டிருந்தான்.

சதா எதைப்பற்றியோ ஆழ்ந்து யோசிப்பவனைப்போலிருப்பான். கண்களிலும் வெகு தீட்சண்யம். ஆனால் அவை எதிலுமே நிலை கொள்ளா. பார்வையை மறுபக்கம் திருப்புவதென்றாற்கூட அணிலைப்போல -சட்-டென்று தலையை வெட்டித்தான் திருப்புவான். அவன் அசைவியக்கங்களிலும் சுறுசுறுப்பிலுங்கூட ஒரு அணில்தான்.

ஏதோ காலஅட்டவணை போட்டு வைத்திருப்பனைப்போல இந்தக்குளிரிலும் அதிகாலை துாக்கசுகத்தையும் துறந்துவிட்டு மூன்றுமணிக்கே வந்துவிடுகிறானே... துாக்கம் பிடிக்காத கேஸென்றால் பைத்தியமாக இருப்பானோ என்றெல்லாம் முதலில் எண்ணினேன்.

அவனது முதலாவது பியர்கான் காலியாக அந்த கியோஸுக்கு தினசரிப்பத்திரிகைகள், மாதாந்திகள், வாராந்திகள் விநியோகிக்கும் சிற்றுந்து வரும்.

பொலிதீனில் பாக்- செய்யப்பட்ட பத்திரிகைக்கட்டுக்களை அவர்கள் இறக்க, கிழவனும் ஏதோ இறக்கை கட்டிக்கொண்டவன் மாதிரி பறந்து பறந்து தானும் கட்டுக்களை இறக்கிவைப்பான்.

சற்று நேரத்தில் சாக்கலேட்டுக்கள், பிஸ்கட், மதுக்குப்பிகள், பியர், சிகரெட் போன்றவற்றை விநியோகிக்கும் மற்றொரு சிற்றுந்தும் வரும். கிழவன் மறுபடி சுறுசுறுப்பாவான். கியோஸ்க் வாசலில் இறக்கி பரப்பி வைக்கப்பட்டிருக்கும் பொருட்களையெல்லாம் ஒரு ஓரமாகச் சீராக அடுக்கிவைப்பான்.

சொல்லி வைத்தாற்போல 03. 35 க்கு கிழவன் சன்னமான குரலில் -குட்டன் மோர்கன்- சொல்லிக்கேட்கும். கியோஸ்க்கின் சொந்தக்காரர்கள் ( ஒரு நடு வயதுத் தம்பதியர்) வந்துவிட்டார்கள் என்பதே அதன் அர்த்தம்.

அவர்கள் கியோஸ்க்கைத் திறந்ததும் பேனைக்கத்தியால் பத்திரிகைக்கட்டுக்களின் பிளாஸ்ரிக் நாடாக்களை -சடக்- -சடக்- கென வெட்டவும், கிழவன் கட்டுக்களைப் பிரித்து உள்ளே எடுத்துப்போய் தினசரிப் பத்திரிகைகளில் ஸ்டான்டுகளில் கொழுவ வேண்டியதைக்கொழுவியும் தட்டில் அடுக்கவேண்டியதை அடுக்கியும் வைப்பான்.

பின் கியோஸ்க்கை உள்ளே பெருக்கி -மொப்- செய்துவிட்டு, அகன்ற துடைப்பத்தை எடுத்து வந்து ஏதோ தன்வீட்டு வதியும் அறைபோன்ற சிரத்தையுடன் அந்த ரயில்நிலையத்தின் முன்விதானம் முழுவதையும் பெருக்குவான்.

பெருக்கிமுடியவும் கியோஸ்க்காரன் ஒரு ஷுல்தைஸ் பியர்கானைக் கொடுப்பான்.

அதைத்துளிவழி அவன் ரசித்துரசித்துக் குடித்துக்கொண்டிருக்கவும் 04. 01க்கு வரும் முதலாவது சுரங்க ரயிலைப்பிடிக்கும் பயணிகள் மெல்ல மெல்ல வந்து சேருவர்.

அதைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஆறு நிமிஷத்திற்கொரு தடவை சுரங்கத்தினூடாக குளிரைத் தள்ளிக்கொண்டு -உபிக்-உபிக்- கென்று வழுக்கிக்கொண்டு வரும் விரைவு ரயில்களின் சேவை இருதிசைகளிலும் ஆரம்பிக்க ஆளரவமற்றிருந்த ரயில் நிலையம் திடீரென உயிர்பெற்று -ஜே-ஜே- என்றா-கிவிடும்.

கியோஸ்க்கின் எதிர்ப்புறத்தில் ஃபாஸ்ட்ஃபுட் ஸ்டோலிலும் வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்க கிழவன் மாறிவிடுவான். அவன் எங்கே போகிறான், அல்லது எங்கிருந்துதான் வருகிறான் என்பது கியோஸ்க் தம்பதியுட்பட எவருக்கும் தெரியாது. அக்கறையுமில்லை.

நான் முதலில் -பப்பின் பார்- இலுள்ள கண்ணாடி விறாக்கைகளில் காலியாகிவிட்ட விஸ்க்கி, பிராண்டி, றம், வொட்கா, பக்காடியா, கோனியாக், சம்பூக்கா போத்தல்களைக் கவனித்து களஞ்சிய அறையிலிருந்து கொண்டுவந்து அடுக்குவேன். பின் பியர்களுக்கான குளிர்அறையில் காலியான பீப்பாய்களை அப்புறப்படுத்திவிட்டு புதிய பீப்பாய்களுடன் -கொக்-குகளுக்கான குழாய் இணைப்புகளைக் கொடுப்பேன்.

-பார்- இல் துலக்கம் குன்றியிருக்கக்கூடிய வெள்ளிப்பகுதிகளையும், -கொக்-குகளையும் - பொலிஷ்- பண்ணிவிட்டு, -ஆஷ்டிறே-களைப்பொறுக்கி அலம்பிவைத்துவிட்டு, தரையைப்பெருக்கி ஈரத்துணியால் லேசாக -மொப்- பண்ணிய பின்னால் எஸ்பிரஸ்ஸோ அல்ல நெஸ்கஃபேயோ ஒன்று சூடாகத் தயாரித்து குடித்துக்கொண்டு ஏதேனும் வாசித்துக்கொண்டோ... இல்லை தெருவை வேடிக்கை பார்த்துக்கொண்டோ உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்.

நேரத்துடன் பாட்டுக்குச் சம்பளம் ஏறும்.

இலையுதிர் காலமானால் -பப்-பிற்கு முன்னாலுள்ள சிறிய -ரெறாச-வில் மரங்கள் இலையுதிர்த்திருக்குமாதலால் அவற்றைச் சுத்தப்படுத்த வேண்டியிருக்கும்.

அப்படித்தான் ஒரு முறை பெருக்கிக் கொண்டிருந்தேன். "குட்டன் மோர்கன்" என்று சொல்லிக்கொண்டு வந்த கார்ள் மார்க்ஸ் -லபக்- கென என்னிடம் துடைப்பத்தைப் பறித்துக்கொண்டு பெருக்கத்தொடங்கினான்.

பெருக்கி முடிந்ததும் ஒரு பியர்க்கானை அவனிடம் நீட்டினேன். -வேண்டாம்- என்று சைகை காட்டிவிட்டு போய்க் கொண்டேயிருந்தான்.

சில நாட்கழித்து நான் காப்பி குடித்துக்கொண்டு தினசரியுள் புதையுண்டிருக்கிறேன். வாசலில் எவரதோ நிழலாடுவது போலிருக்கவும் எட்டிப்பார்தேன் கார்ள் மார்க்ஸ்தான் "குட்டன் மோர்கன்" என்றபடி நின்றிருந்தான். உள்ளே வரச்சொன்னேன். வந்தான்.

"ஏதாவது குடிக்கறியா...?"

"நன்றி."

"காப்ஃபி, டீ, பியர், ஸ்நப்ஸ்......?"

"சரி... நான் காப்ஃபியே குடிக்கிறேன். மன்னிக்கவேணும்..... அன்று நான் உன்னிடம் பியரை வாங்கிக்கொள்ளவில்லையென்று கோபமா?"

"கோபமில்லை... ஆனால் ஏன் வாங்கிக்கொள்ளவில்லையென்று..."

"வேறொன்றுமில்லை...... அந்த பியரை அன்றைக்கு நான் வாங்கியிருந்தால் அந்த பியரிற்காகத்தான் உனக்கு உதவிசெய்தேன் என்றாகியிருக்கும்."

கிழவனது ஜெர்மன் உச்சரிப்பில் "சு"ல் அழுத்தம் அதிகமாகவிருந்தது. பயேர்ண் மாநிலத்தவர்களும், கிழக்கு ஐரோப்பியர்களுந்தான் அப்படிப்பேசுவார்கள்.

"நீ பயேர்ண் மாநிலத்தவனா?" என்றேன்.

"..ச்சே... நானும் உன்னைப்போல் ஒரு வெளிநாட்டவன்தான்... பல்கேரியன். ஜெர்மனிக்கு வந்து முப்பத்தாறு வருஷங்களாச்சு... எழுபதுகளில் நடந்துகொண்டிருக்கிற இளைஞன் நான்..." என்றுவிட்டு முன் நெற்றியைச் சுருக்கினான்.

ஒரு பாட்டம் ரில்லரால் உழுத வயல்போல அங்கே குறுக்காக ஏகப்பட்ட சால்கள்.

இந்த வயதிலும் இவ்வளவு சுறுசுறுப்பா என நான் வியக்கவும் அவன் தொடர்ந்தான்.

"ஐந்து வருஷமுன்னே பென்ஷனைத்தந்து வீட்டிலே போய்த்துாங்கடா என்று அனுப்பி விட்டார்கள்... ஐம்பது வருஷம் உழைச்ச உடம்பு உழைக்காமல் எப்பிடித் துாங்கும் சொல்லு...?"

"துாங்காதுதான்..."

"உழைச்சுக்கொண்டேயிருந்தால் நான் இன்னும் எழுபது வருஷங்கள் சீவிப்பேன்... உழைப்பை என்றைக்கு நிறுத்தினேனோ அன்றைக்கு மரணம் வந்து கதவைத் தட்டும்... உட்கார்ந்திருக்கவே மாட்டேன். உழைத்துக்கொண்டே செஞ்சுறி அடித்துக்காட்டிறேனா இல்லையா பார்..."

"உட்கார்ந்திருப்பது யாருக்கும் கஷ்டமான காரியந்தான்..." அப்பிடி என்னதான் வேலை பார்த்தாய்...காம்றேட்?"

"Steinsetzer"

இதனை நடைபாதை , பேவ்மென்ட் அமைத்தல் என்று இலகுவாகச் சொல்லிவிடலாந்தான். ஆனால் வளர்ந்த நாடுகளில் நகர நிர்மாணிப்பு, அழகுபடுத்தல் துறையில் இதற்கெனத் தனிப்பிரிவும் விஷேடபடிப்புக்களும் உண்டு.

"அப்போ ஊரைப் பார்த்துப் போறது."

"அங்கே எனக்கு யாரிருக்கா... எனக்கு யாரைத்தெரியும்...?"

வெடுக்கென கோபம் கலந்து வந்த பதிலில் -கௌரவம்- சிவாஜி தெரிந்தார்.

"பிரமச்சாரியாகவே இருந்திட்டாயா காம்றேட்?"

"இல்லையில்லை... சம்சாரிதான், மனைவி பன்னிரண்டு வருஷத்துக்கு முன்பே புறப்பட்டிட்டா"

"அப்போ பிள்ளைகளென்று...?"

"ஒரேயொரு மகள்... இங்கதான் -நர்ஸ்- வேலை பார்க்கிறா... கிளாடோவில ஒரு ஜெர்மன்காரனைக் கட்டிக்கொண்டு புருஷன்கூட தனியா...."

காஃப்பி குடித்தானதும் நான் எவ்வளவோ தடுத்தும் தானே கோப்பையை அலம்பிக் கவிழ்த்தும் வைத்தான்.

"இன்னும் ஏராளம் சக்தியுள்ள மனிதன் நான் என்னாலே ஓய்ந்திருக்க முடியாது பேபி" என்றபடி தரையை -மொப்- செய்வதற்காக நான்

மேசை மேல்கவிழ்த்திருந்த கதிரைகளை எல்லாம் திரும்ப இறக்கி வைத்தான்.

பின் "ஷுயிஸ்" என்றுவிட்டுப் போய்விட்டான்.

(4)

ஜெர்மனிக்கு வந்த புதிதில் எண்பதுகளின் ஆரம்பத்தில் வேலையேதுமில்லாது அறைக்குள் குமைந்துகுமைந்து கிடக்க நேரிட்ட போது எங்களுக்கும் இதேமாதிரி அனுபவம் ஏற்பட்டதுதான். நாங்களிருந்த ஹொட்டல்களின் சுற்றுப்புறங்களில் தென்பட்ட கட்டிட நிர்மாணவேலைத்தலங்களிலும், கேற்றுகள் கிறில்கள் கதவுகள் செய்யும் தொழிற்சாலைகளிலும் போய் "மூன்று நாலு மணித்தியாலங்கள் சும்மா வாலண்டியராகவே பண்றோம் வேலை தாருங்கள்" என்றுகூடக் கேட்டுப்-பார்த்தோம்.

அவர்கள் எம்மைக் கண்டே பயப்பட்டார்கள்.

"இங்கத்தைய சட்டத்தில் அதற்கெல்லாம் இடமேயில்லை... இங்கு மருத்துவக்காப்புறுதி, விபத்துக்காப்புறுதி, பொதுக்காப்புறுதி என்று பல காப்புறுதிகள் செய்த பின்னாலேதான் ஒரு தொழிலாளி ஒரு வேலைத்தலத்துள்ளேயே நுழையவே முடியும்...." நீங்கள் இங்கு வந்ததே சட்டப்படி தப்பு." என்று சொல்லி வாசல்வரை கூட்டி வந்து பக்குவமாக வெளியனுப்பிவிட்டார்கள்.

நான் வேலை முடிந்து காரில் வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது பார்த்தேன் இந்த நொடுநொடுத்த கிழவன் -அல்டி மார்க்கெட்டின்- சிறிய தள்ளுவண்டியொன்றை சீனி, மா, பியர்க்குலைகள், கிழங்கு, வெங்காயம், அப்பிள்ரசம், பட்டர் இத்யாதி பாரமான சாமான்களுடன் தள்ளிக்கொண்டு எதிர்திசையில் வேகமாக வந்துகொண்டிருந்தான். நான் காரை மெல்ல ஓரங்கட்டி நிறுத்தவும் கண்டுகொண்டான்.

"ஏதேது இவ்வளவு சாமான்கள்...ஏதோ பெரீய்ய பார்ட்டிக்கு ஏற்பாடு போல?"

"இல்லை அப்பிடியில்லை... என்னுடைய கட்டிடத்தொடரில ஒரு குடும்பத்திற்காக வாங்கிப்போறன் ... பாவம் அவர்களுக்கு நேரமில்லை. தினமும் இருவருமே வேலைக்குப்போகிறார்கள்."

"எப்போதும் நீதான் சாமான் வாங்கிக்கொடுப்பாயோ?"

"இவர்களைப்போன்று தெரிந்தவர்களுக்குத் தான் என்றில்லை. உடம்புக்கு முடியாதவர்கள், நோயாளிகள், வயசானவர்கள்(இதைச்சொல்லும்-போது கண்ணைச் சிமிட்டினான்) இப்படி யார் தான் என்னை நாடினாலும்."

"விசித்திரமான மனிதன்தான்.... போ."

கிழக்கு-மேற்கு ஜெர்மனிகளின் இணைப்பிற்குப் பிறகு, மதில் ஓடிப்பிரித்துக்கொண்டிருந்த - பொட்ஸ்டாமர் பிளாட்ஸ் என்ற இடத்தில் நூறு ஏக்கர் நிலப்பரப்பொன்றை ஒரு அழகான பூங்காவாகப் பண்ணி அருகே வழிந்துகொண்டிருக்கும் ஒரு சிறு கால்வாயைத்திருப்பி அங்கமையும் தடாகத்தினூடாக வழியவிட்டு அழகான ஒரு சதுக்கமாக்கிச் சூழவும் தங்கள் காட்சியறைகளை அமைப்பதற்கு மெர்ஸிடஸ் பென்ஸ், ஸொனி, கஜிமா, டிஸ்மன் போன்ற பத்து அசுரக்கொம்பனிகள் இரவுபகலாக வேலை செய்துகொண்டிருக்கின்றன. அச்சதுக்கத்தின் அருகாக அமைந்த லேட்டர் பாண்ஹோஃப் எனப்படும் ரயில் நிலையத்திலிருந்து Transrapid எனப்படும் மின்காந்தப்புலத்தில் மிதந்து தம் பாதையில் தொட்டுந்தொடாமலும் பறந்து 300கி.மீட்டர் தொலைவிலுள்ள ஹம்பேர்க்கை 50 மணித்துளிகளில் அடையப்போகும் வேக் ரயில்கள் 2003ம் ஆண்டு புறப்படவுள்ளன.

பொட்ஸ்டாமர் பிளாட்ஸில் அமையும் இச்சதுக்கத்தையும் லேட்டர் பாண்ஹோஃபையும் இணைப்பதற்கான சுரங்கப்பாதையை அமைப்பதற்காக இராட்சதப்புழு உருவிலான நாலு றொபொட்கள் நிலத்தை அறுத்துக் குடைந்துகொண்டிருக்கின்றன.

இச்சுரங்கத் தோண்டுதலால் அங்கமைந்திருக்கும் -எஸ்பிளனாட- என்னும் புராதன இசையரங்குக்கு ஏதேனும் சேதாரம் வந்துவிடுமோ என்ற ஜாக்கிரதை உணர்வில் உருக்கிகாலான வெட்டுக்கிளியொன்று அதை நிலமட்டத்திலிருந்து ஐந்து மீட்டர் உயரத்தில் பிள்ளையைப்போல் துாக்கிவைத்திருக்கிறது.



அந்த இராட்சத அறக்கொட்டியான்கள் நான்கும் எப்படி மில்லிமீட்டர் வழுவாமல் பிசகாமல் துளைக்க கொம்பியூட்டர்கள் எவ்வாறு உத்தரவுகள் வழங்குகின்றன எப்படிக்கட்டுப்படுத்துகின்றன, அகழுகையில் வரும் மண், ஊற்றெடுக்கும் நீர் என்பனவற்றை அறக்கொட்டியான் றொபோட்களுள் சென்று வெளியேறும் பாரஉந்துகள் எப்படி வெளியேற்றுகின்றன என்பதை வெளியே நிர்மாணிக்கப்பட்டுள்ள பாரிய மொனிட்டர்களில் யாரும் பார்க்கலாம். தமிழ்நாட்டிலிருந்து ஒரு இலக்கியக்கூட்டத்திற்காக வந்திருந்த ஒரு எழுத்தாள நண்பரை ஐரோப்பாவிலேயே பிரமாண்டமானதென வியக்கப்பட்ட அந்நிர்மாணத்தைக் காட்டுவதற்காகக் கூட்டிப் போனேன்.

அவ்விடத்தில்தான் வரலாற்றிலிடம் பெற்றுவிட்ட பெர்லின் மதிலின் சிறிய பகுதியை எதிர்காலச்சந்ததியினர் பார்ப்பதற்காக இன்னும் விட்டு-வைத்திருக்கிறார்கள் என்பதுவும் இன்னொரு விஷேடம்.

அப்பூங்காவைச் சுற்றி அமைக்கப்பட்ட நடைபாதைகளை ஸ்பெயினிலிருந்து வருவிக்கப்பட் வெண்கற்களாலும், இத்தாலியிலிருந்து வருவிக்கப்பட்ட கருங்கல்லாலும், வேறேதோ நாடொன்றிலிருந்து வருவிக்கப்பட்ட Bordeaux நிறத்தில் கரும்புள்ளிகள் செறிந்து படிகம்போல மின்னுகின்ற ஒருவகைக்கல்லாலும் வேய்ந்து

-மொசைக்- தரைபோலும் முகம் பார்க்கும்படி -பொலிஷ்- பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உங்களில் சிலருக்கு "சந்தனம் மிஞ்சிப் போச்சாம்... எதிலேயோ தடவினானாம்" என்கிறது ஞாபகத்துக்கு வரலாம்.

நாம் அத்தொழிலாளரைக் கடந்து போகையில் எதேச்சையாகப் பார்க்கிறேன். நம்ம கார்ள் மார்க்ஸ் அவர்களிடையே பம்பரமாகச் சுழன்றுகொண்டு அவர்களுக்குத் தேவையான கற்களையெல்லாம் எடுத்துக்கொடுத்து உதவிக்கொண்டிருக்கிறான். நெற்றியில் வியர்வை துளிர்த்திருந்தது. எம்மைக் கண்டதும் "என்ன நண்பனா?" என்று கேட்டபடி அவருக்கு ஒரு சலூட் வைத்தான். எமக்கு "சூயிஸ்" சொல்லிவிட்டு கோட் பையிலிருந்து ஸ்டைலாக பியர்கானை எடுத்து ஒரு மிடறு குடித்தான். மீண்டும் -பிஸி-யானான்.

(5)

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பெர்லின் உட்பட ஜெர்மனியின் அநேக நகரங்கள் தரை மட்டமாகிப்போனபோது இவர்களுக்கு என்னதான் அமெரிக்காவின் பொருளாதார உதவிகள் இருந்தபோதிலும், மீண்டும் நகரங்களையும், வீதிகளையும், பாலங்களையும் நிர்மாணிப்பதற்கு ஏராளம் மனிதசக்தியும் தேவைப்பட்டது.

-கெஸ்ட் வேக்கர்ஸ்- என்ற பெயரில் ஏராளம் தொழிலாளர்களை துருக்கியிலிருந்தும், போலந்து, யூகோஸிலாவியா, புல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வருவித்தார்கள். இந்தியாவிலிருந்து கூட முயற்சித்தார்களாம். இந்தியர்கள் தொழிலாளர்களை ஏற்கெனவே வருவித்திருந்த இலங்கை, தென்னாபிரிக்கா, மலேஷியா போன்ற நாடுகளில் அவர்களின் நிலையைக் மேற்கோள்காட்டி காந்தி மறுத்துவிட்டாராம்.

எல்லா நகரங்களும் மீண்டெழுந்து, உற்பத்தி ஏற்றுமதிகளால் பொருளாதாரமும் ஸ்திரமாகி விட்டதா? இந்தத் தொழிலாளர்கள் வேண்டாதவர்கள் ஆகிவிட்டனர். ஐம்பது ஆண்டுகளின் பின்னால் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிப்பதற்கும்,

15ம் பக்கத் தொடர்...

வீட்டுவசதிகளில் நெருக்கடி ஏற்படவும் வெளிநாட்டவர்களும், துரிதகதியில் பெருகிய அவர்களின் சந்தானமுமே காரணமென இன்று பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கூச்சல் போடுகின்றார்கள்.

ஒரு நாள் -பப்பிற்கு- வந்த கார்ள் மார்க்ஸைக்கேட்டேன்: "தாமாகவே வலிய நாடு திரும்பும் துருக்கிக்காரர்களுக்கு தலைக்குப் பத்தாயிரம் ஜெ. மார்க்குகள் உபகாரப் பணமாகத் தரப்போகிறார்களாமே, இது சரியா?"

அவன் சரியென்றோ, தப்பென்றோ அபிப்பிராயம் எதுவும் கூறவில்லை. இயல்பில் யாரையும் குறைகூற மாட்டான். எனினும் இவன் - நாம் இங்கிருக்காவிட்டால் சந்தோஷப்படக்கூடிய பேர்வழிகளுக்காக- இன்னும் மாய்ந்து மாய்ந்து தேய்ந்துகொண்டிருப்பது பைத்தியக்காரத்தனமாகவே எனக்குப் பட்டது.

இனத்துவேஷம் எங்குதான் இல்லை?.

அரசியலமைப்புச் சாஸனத்திலேயே புத்தமதத்தை முதன்மைப்படுத்தும் ஸ்ரீலங்காவின் தார்மீக அரசுகள்



150 ஆண்டுகள் மாடாய் உழைத்த இந்தியத் தோட்டத்தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்து அவர்களை வெளியேற்ற இந்திய அரசுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்யவில்லையா? அகம்பாவமும் துவேஷமும் ஐரோப்பியனிடம் இருப்பதில் என்னதான் வியப்பு?

கார்ள்ஸ் மார்க்ஸ் வெறுமனே புன்னகைத்துப் போய் விட்டான்.

பின்னொரு நாள் சனி-ஞாயிறுகளில் மட்டும் கூடும் பழம்பொருள் அங்காடி ஒன்றில் விற்பனைக்கு உதவி பண்ணிக் கொண்டிருந்தான். வியாபாரம் முடிந்தபோது பொருட்களையெல்லாம் மூடைகட்டிக் கொண்டுபோய் காரின் டிரெயிலருக்குள் வைக்க கடைக்காரருக்கு உதவினான். மறுநாள் காலையில் கண்டபோது கேட்டேன்: "பழம்பொருள் அங்காடிவரைக்கும் -சேவை- விஸ்த்தரிக்கப்பட்டிருக்கிறாப்போல....?"

ஆமோதிப்பதாய் ஒரு புன்னகையை மாத்திரம் உதிர்த்தான். அவன் சேவைக்கு நேரங்காலமிருக்கவில்லை. ஒரு இரவு விரைவு ரயிலில் பார்க்கிறேன். ஒரு பெரிய பிளாஸ்டிக் கூடை நிறைய பழைய உடுப்புக்கள் வைத்திருக்கிறான். விசாரித்தபோது யாருக்காகவோ லோன்டிறிக்கு எடுத்துப்போவதாகச் சொன்னான்.

-உடம்பு உளைஞ்ச கழுதைதான்- ஞாபகத்திற்கு வந்தது.

பின்பொரு நாள் வீதியில் நான் சிக்னலுக்காக காத்து நின்ற போது-விசுக்- -விசுக்-கென்று வீதியைக் கடந்து போனான். விசாரித்தபோது முதியோர் இல்லமொன்றுக்கு சும்மா பேச்சுத்துணைக்குப் போவதாகச் சொன்னான்.

சமூகஓட்டத்தினின்றும் விலக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட மது, போதைவஸ்த்து அடிமைகள், மனநோயாளர்கள் இவர்களைப்போன்று வாழ்வில் தனித்துப் போனவன் அதைவிரட்ட உதவியோ ஏதோ ஒரு சாக்கை வைத்து சமூகத்தினின்றும் விடுபட்டுப்போகாமல் மக்களுள் மக்களாய் கலந்தும் சேர்ந்தும் வாழ விரும்புகிறான். மக்கள் கூட்டம் கூடும் இடங்களில் எல்லாம் தானும் கலந்திருக்க விரும்புகிறான். பல தடவைகள் மாலை வேளைகளில் வீல்சேரில் வைத்தொருபெண்ணை உலாத்த தள்ளிக் கொண்டு போவதையும் கண்டிருக்கிறேன்.

இவை மனிதநேயம் கலந்த சேவைகள். ஒரு பகை நாட்டில்கூடச் செய்யலாம். மறு நாள் இதற்காக அவனைப் பாராட்டவேணும் போலிருந்தது. காலை 3. 30 ஆகிவிட்டிருந்தும் அவனைக்காணவில்லை. என் பணிகளை முடித்துவிட்டு காஃப்பி சாப்பிடும்போது மறுபடியும் பார்த்தேன். ஆளைக்காணவில்லை. இரண்டு நாள், மூன்று நாள், நாலாம் நாளுமாகியது. கார்ள் மார்க்ஸைக்காணவில்லை. யாரைக்கேட்பது? கியோஸ்க்காரருக்கும் தெரிந்திருக்கப்போவதில்லைத் தான். இருந்தும் விசாரித்தேன்.

"யாரைக்கேட்கிறாய்... சுண்டெலியையா?" என்றுவிட்டு உதட்டைப் பிதுக்கினான்.

"ஓ... அப்படியும் ஒரு பெயரிருக்கா உனக்கு...?" அந்தப்பெயரும் கிழவனின் துருதுருப்புக்குப் பொருத்தமாகவே பட்டது.

இரண்டாந் நாள் கேட்டபோது தோள்களைக் குலுக்கினான். நானும் விடாமல் மூன்றாம் நாளும் கேட்டடேன்.

வெகு சாதாரணமாக "காணவில்லைத் தான்... செத்திருப்பான்." என்றான்.

கிழவனை அப்போது மனதார வைதேன். "அட... இந்த அற்பனின் கடையையா தினமும் -மொப்-பண்ணிச்சலித்தாய்...?"

இவன் கோணத்தில் -சுண்டெலி- என்ற பெயருக்கு இப்படியும் அர்த்தம் இருந்திருக்கலாம். நீ இறந்துவிட்டால்கூட ஒரு சுண்டெலியின் மரணத்தைப் போல

"is nothing". அதற்கு எந்தப் பெறுமானமும் கிடையாது. அது எதுவிதத்திலும் எம்மை இம்மியும் பாதிக்காது.

கார்ள் மார்க்ஸ்... உனக்கும் இந்தச்சமூகத்திற்கும் இருந்த உறவுதான் என்ன? நீ இறந்துகிடந்தால் உன்னைத்-திரும்பி ஒருகண் பார்க்கவோ இல்லை உன் இழப்பைத்தான் அறிவிக்க வேண்டிய அவசியமோ இச்சமூகத்திற்கு ஏன் இல்லாது போனது?

கியோஸ்க்காரன் சொன்ன பின்னால் -கார்ள் மார்க்ஸுக்கு அப்படி ஏதும் அவலம் நேர்ந்திருக்குமோ- என்று மனதில் சிறு பயம் உண்டானது. "நான் 100 வயதுவரை சீவித்திருப்பேன்" என்றானே என்னிடம்.

என்னூரிலும் ஒரு பெரியவரும் இப்படித்தான். தன் எண்பத்தொன்பதாவது வயதுவரை மரவேலை செய்துகொண்டேயிருந்தார். "எதற்கு இனிமேலும் வேலை செய்கிறீர்கள்.... நன்கு ஓய்வெடுக்கலாந்தானே?" என்றால்..." இனி இலை உதிர்காலந்தான் எனக்கும் தெரியும். சின்ன ஒரு தனியன் இலை இருக்கும் வரையில் இந்த மரம் உறங்காது" என்றுவிட்டு மடியில் வண்டிக்குடத்தை வைத்துப் பொளி அடித்துக்கொண்டிருப்பார். உடம்புக்கு இயலவில்லை என்று ஒரு நாள்தானும் அவர் ஆயுளில் படுத்திருந்ததை யாருமே கண்டதில்லையாம். தன் பட்டறைக்கு வராமலிருந்த ஒரு நாளில் அவர் இறந்து போனார்.

"அப்பராவது திருத்தலங்களில்தான் உழவாரத்தொண்டு செய்தார். கார்ள் மார்க்ஸ் நீயே பெர்லின் வீதிகள் அனைத்தையும் வாங்கிவிட்டதைப்போல் உறை குளிர்காலத்திலும் வெப்பநிலை பூஜ்ஜியத்திற்கும் கீழே 10 டிகிரி இருந்த நாட்களிலுங்கூட பனி தள்ளிக் கொண்டிருப்பாயே... கிழவா என்னவாயிற்று உனக்கு...? எங்கு ஐயனே போய் விட்டாய்?

கார்ள் மார்க்ஸ் இல்லாத கியோஸ்க் மூலை எனக்கு சூனியமாகப்பட்டது. மனதில் ஒரு வகை அந்தகாரம். அந்தத்திசையை நோக்குவதையே தவிர்த்தேன் எனினும் கார்ள் மார்க்ஸ் நினைவிலிருந்து அகல மறுத்தான்.

(6)

ஒரு மாதம் போயிருக்கும். ஒரு காலை கியோஸ்க்காரன் வந்து வெளிச்சம் ஏற்றிய போது எதேச்சையாகப் பார்க்கிறேன்... அட என்ன ஆச்சர்யம். அங்கு கார்ள் மார்க்ஸ் கால்களைப் பின்னிக்கொள்ளாமல் தலையில் முண்டாஸ் கட்டிவிட்ட மாதிரி பெரிய பாண்டேஜ் கட்டுடன் பரம சாதுவாக ஒடுங்கிப்போய் ஒரு மூலையில் நிற்கிறான். ஓடிப்போய் கட்டி அணைத்தேன்.

"ஹா...ஹா... வலதுகையை அழுத்தாதே வலிக்கறது...." என்றான்.

முகத்திலும் பல சிராய்ப்புக்கள்.

"என்னப்பா நடந்தது? ஏதாவது விபத்தா...?"

"ஜா... ஜா... விபத்துத்தான்... சில மனிதர்களால..."

"எப்படி?"

"பிறென்ஸ்லவர்பேர்க் பக்கமாய் நியோ நாஜிப்படை ஒன்றிடம் தனியாக மாட்டிவிட்டேன். துவைத்துவிட்டார்கள்."

"அட இந்தப்பாவி மனிதனையா...?"

"கன்ன மண்டையில் ஏழு இழைப்பிடிக்க வேண்டியதாயிருந்தது. வலது தோட்பட்டை எலும்பு உடைந்து ஸ்குறூ ஆணியால் பொருத்தியிருக்கு."

"எப்போ பொருந்துமாம்...?"

"இளைஞன்தானே விரைவில் பொருந்திவிடும் என்றிருக்கிறார் டாக்டர்."

கண்ணடித்துவிட்டுச் சிரித்தான்.

"அன்று .அரைமணிநேரம் அம்புலன்ஸ் வரத்தாமதமாகியிருந்தால் இப்போது என்னுடன் நீ பேசிக்கொண்டிருக்கவே முடியாது."

மீண்டும் பலமாகச் சிரித்தான்.

வேலைக்குப் போக ரயிலேற நின்ற அப்பாவித் தமிழ் இளைஞனை ஓடும் ரயில் முன்னால் தள்ளிவிட்டுவிட்டு அவன் அறுபட்டு அரைபட்டதை வேடிக்கை பார்க்க முடிந்தவர்களாதல் இந்தக் கிழவனை அடித்துப்போடுவது ஒன்றும் முடியாத காரியமில்லை. பப்பினுள்ளே அழைத்து வந்து ஸ்டீமில் எஸ்பிரஸ்ஸோ காஃப்பி வடித்துச் சூடாகப்பால் கலந்து கொடுத்தேன். அவன் அதை இடது கையால் ஏந்தி ஊதி ஊதிக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுவதைப் பார்க்கப் பாவமாக இருந்தது. மனம் நெகிழ்ந்து போனது.

"பட்டது போதும்... இந்தக் கிராதஹர்கள் வாழும் சமூகத்திற்கு இனிமேல் சோஷியல் சர்வீஸ் செய்யவெல்லாம் போகாதே கெட்ட மிருகங்கள்." என்றேன்.

"பாவம் அவர்கள்... மானிடர்களாகப் பிறந்தும் மனிதப்பண்பின் நல்ல கூறுகளை அறியாமலிருக்க சபிக்கப்பட்டவர்கள்....." என்றான் ஒரு தத்துவஞானியைப்போல.

"நீ நல்லாய் ஓய்வெடுக்க வேண்டும்.... அப்போதுதான் விரைவில் உடம்பு குணமாகும்" என்றேன்.

"ஆகட்டும்....." என்றான்.

ஜெர்மனிகளின் இணைப்புக்குப்பின் இங்கு நோக்கும் திசை எங்கிலும் கட்டிடங்களின் கட்டுமாணப்பணிகளும் சாலை விஸ்தரிப்புப்-பணிகளுந் தான்.

பப்பிலிருந்து என் வீட்டிற்குப் போகும் வழியிலும் -நாலு பருவகாலங்கள் - என்ற பெயரில் பாரிய ஹொட்டல் ஒன்று எழுப்பிக்கொண்டிருக்கிறது. இதனால் அவ்விடத்தில் அவர்களின் கிறேன்கள், டிறெட்ஜெர் மிஷின்கள் என்பன நின்று வேலை செய்வதற்காகவும், தற்காலிக கொன்டயினர் ஆபீஸ்களை வைத்திருப்பதற்காகவும் சாலையை சற்றே ஒடுங்கலாகப் பண்ணியிருந்தார்கள். இதனால் அவ்விடத்தில் அடிக்கடி போக்குவரத்து நெரிசலாகும். அன்றும் அப்படித்தான் ஊர்ந்து ஊர்ந்துகொண்டிருந்த வாகனங்கள் நின்று போயின. ஹொட்டல் கட்டிடத்துக்கான பாரிய லின்டர்களையும், கட்டிமுடிக்கப்பட்ட சுவர்களையும் கொண்டுவரும் 24 சக்கரங்களைக் கொண்ட நீளமான கொன்வேயர் டிரக் ஒன்று அந்த வளவுக்குள் திரும்புவதற்குச் சிரமப்பட்டுக்கொண்டிருந்தது.

வளவுக்குள் சீமெந்து கலக்கும் இயந்திரங்கள் , பைப்லைன்கள் என்று இறைந்து வேறுகிடந்ததால் டிரைவர் மிகவும் பிரயத்தனப்பட்டுகொண்டிருந்தான்.

திடீரென ஒரு சன்னமான குரல் "இன்னும் கொஞ்சம் இடதுபுறம் மடித்துத் திருப்பிக்கொண்டு பின்னுக்கு வா" என்று ஆணையிட்டது.

"நிறுத்து... இனி நிமிர்த்திக்கொண்டு சுவர் ஓரமாய்ப்போ....

போதும் போதும்.... நிறுத்து! இன்னுமொருமுறை கொஞ்சம் முன்னுக்குப்போய் இன்னும் கொஞ்சம் மடித்துக்கொண்டு பின்னுக்கு வா!...

ஆங்... ரைட்... ரைட்.... ரைட்.... ஆங்.... ரைட்.... ரைட்... ரைட்.... ரைட்.... அப்பிடித்தான்.... ஜோராய்....!"

குரலில் சந்தேகம் வர காருக்கு வெளியே எட்டிப்பார்த்தேன்.

டிரக் ஓரமாக டிரைவரின் கண்ணாடியில் தெரியும்படியாக நின்றுகொண்டு கைகளால் பலவித முத்திரைகளும் , சமிக்கைகளும் காட்டி "ரைட்.... ரைட்.... ரைட்..." என்று கொண்டு நிற்கிறான் கார்ள் மார்க்ஸ்.

08.05.1997.
பெர்லின்

■

## சமாதானத்திற்காக....

உள்ளனர். அவர்களை நான் அதிர்ச்சி அடையச் செய்திருக்கிறேன். எனக்கு அதில் மிக்க மகிழ்ச்சி. அதிர்ச்சி அடைவதில் இப்போது அவர்கள் முறை. ஆம், ஃபாபர் அவர்களே, இதுமாதிரியான தொழில்ரீதியான இராணுவத்தினர் மக்களைக் கொல்வது தான் போரின் முக்கியக் குறிக்கோள் என்று கருதுகின்றனர். உதாரணமாக, ஜெனரல் ப்ராட்லி - அவரது போர்க்கால நினைவுக் குறிப்புக்களை நான் மொழிபெயர்த்திருக்கிறேன். - இது பற்றி நன்றாகவே சொல்லியிருக்கிறார். இதுபோன்ற தொழில் ரீதியான இராணுவத்தினர் குறித்து நமக்கு, நம்மில் பத்தில் ஒன்பது பேர்களுக்கு, தவறான கருத்துக்களே இருந்து வந்திருக்கின்றன. அவர்களுடைய காட்டுமிராண்டித்தனமான நாசவேலைகளும் பயனற்ற சாகசச் செயல்களும் நிரம்பிய சரித்திரம் தான் நமக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. சீசரின் வாழ்க்கை அல்லது செங்கிஸ்கானின் வீரசாகசங்கள் - . இவற்றைக் கல்விக் கூடங்களில் கற்றுக்கொடுப்பதற்குப் பதிலாக, நாட்ர்-டாம் சர்ச் (North Tom Church) எப்படிக் கட்டப்பட்டது போன்ற தகவல்களைச் சொல்லிக் கொடுத்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

சுவாரஸ்யமற்ற தங்களைப்பற்றி, மற்றவர்கள் அக்கறை கொள்ள வேண்டும் என்று நாகரிகமான மனிதர்களை வலுக்கட்டாயப் படுத்துவதில் தற்பெருமைக்காரர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அக்கறை தானாகவே ஏற்படாத் போது, அதைக் கட்டாயப் படுத்த வேண்டியதாகிறது. ஆயுதங்கள் கையில் இருக்கும் போது, அது சுலபம்தானே. இந்த விவகாரம் பற்றி நான்கு வரிகளில் சொல்லிவிட-முடியாது. இருந்தாலும் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். உலகத்திலேயே மிகவும் நாகரிக-மான நாடுகளில் ஒன்றான சுவிட்சர்லாந்தில், இந்தப் பிரச்சினையை நன்றாகவே தீர்த்து விட்டிருக்கின்றனர் - குடிமக்களின் இராணுவம் ஒன்றை அமைப்பதன் மூலம். அவர்களைப் பொறுத்தவரை "போர்" என்பதற்கு ஒரே ஒரு பொருள் தான்: தன்னைப் பாதுகாத்துக் கொள்வது. இதுபோன்ற யுத்தம் நியாயமான யுத்தம். குறைந்த பட்சம். தவிர்க்க யுத்தம் முடியாத இது ஒன்று தான், புற நிலை உண்மைகள் நிர்ப்பந்தப்படுத்தும் யுத்தம்.

இல்லை, ஃபாபர் அவர்களே, என் பாடலில் இல்லாத அவமரியாதையை சிரமப்பட்டுத் தேடாதீர்கள். நான் சொல்ல விரும்பியதை தெளிவாகவே சொல்லி விடுகிறேன். இரண்டு உலகப் போர்களின் முன்னாள் இராணுவத்தினரையோ, விடுதலைப் போர்வீரர்களையோ அவமதிக்க நான் ஒரு போதும் நினைத்ததில்லை. அவர்களிடையே என் நண்பர்கள் பலர் இருந்திருக்கின்றனர். போரில் இறந்தவர்களையும் நான் அவமதிக்கவில்லை. அவர்களிடையேயும் என் நண்பர்கள் இருந்திருக்கின்றனர். ஒருவரை நான் அவமதிக்கும் போது (எனக்கு அப்படி நேர்வது எப்பொழுதாவது தான்) அதை நான் வெளிப்படையாகவே செய்வேன். சீருடை அணிவிக்கப்பட்டு வெற்றிக் கட்டளைச் சொற்களையும், போலியான காரணங்களையும், மண்டை ஓட்டுக்குள் திணித்து பலிக்களத்துக்கு அனுப்பப்படும் சாதாரணக் குடிமக்களை, என்னைப் போன்ற குடிமக்களை, ஒரு போதும் நான் அவமதிக்க மாட்டேன். எதற்காகப் போரிடுகிறோம் என்று தெரியாமல் போரிடுவது ஒரு மடையனின் செயல், வீரனின் செயல் அல்ல. தான் பாதுகாக்க வேண்டிய மதிப்புகளுக்குப் பயன்படும் வகையில் உள்ள சாவு என்று தெரிந்து, அந்தச் சாவை எவன் எதிர்கொள்கிறானோ அவனே வீரன். என் பாடலில் வரும் போர் வீரன் ஒன்றும் தெரியாத மனிதன். அவனுக்கு யார் விளக்கம் அளிக்கப் போகிறார்கள்? நீங்கள் எந்தப் போரின் முன்னாள் இராணுவத்தினர் என்பது எனக்குத் தெரியாது. அது முதல் உலகப்போராக இருந்திருந்தால், உங்களுக்கு சமாதானத்தை விட போர் புரிவதில் தான் திறமை அதிகம் என்று சொல்வேன். 1940இல் என்னைப் போல இருபது வயது நிரம்பியிருந்தவர்களுக்கு ஒரு வினோதமான பிறந்த நாள் பரிசு தான் காத்திருந்தது. தைரியசாலிகளுடன் என்னைச் சேர்த்துக் கொள்ள முடியாது. இருதயக் கோளாறினால் உடல் நலமற்று இருந்த நான், போரில் அடிபடவில்லை, நாடு கடத்தப்படவில்லை, கருங்காலியாக மாறவும் இல்லை. நான்கு ஆண்டுகளுக்கு மற்றும் அநேகம் பேர்களைப் போல, அரைகுறையான போஷாக்களிக்கப்பட்ட மடையனாக நானும் இருந்தேன். எதுவுமே புரிந்து கொள்ளாதவனாக இருந்தேன். புரிந்து கொள்வதற்கும் யாராவது விளக்கம் அளித்திருக்க வேண்டும் அல்லவா?

■

# சிதைவுகள்: படைப்பாற்றல்மிக்க ஒரு மொழிபெயர்ப்பு

சினுவா ஆச்சிபி ஆங்கிலத்தில் எழுதிய 'Things Fall Apart' என்னும் நாவல் தமிழில் 'சிதைவுகள்" என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதை என்.கே.மகாலிங்கம் மொழிபெயர்த்துள்ளார்.




சிதைவுகள்
ஆசிரியர்: சினுவா ஆச்சிபி
தமிழில்: என்.கே. மகாலிங்கம்.
வெளியீடு: காலம் வெளியீடு
விலை: 75-
விற்பனை உரிமை:
காலச்சுவடு பதிப்பகம், 151,
பி.கே.சாலை, நாகர் கோயில்
629001

சினுவா ஆச்சிபியின் 'சிதைவுகள்' நாவல் உலகப் பிரசித்தி பெற்றது. கறுப்பின மக்களின் வாழ்வியல் வெளிப்பாட்டின் உயிர்த்துவப் படைப்பாக அது கொள்ளப்படுவது. இதைப் படிக்காத ஆங்கிலம் தெரிந்த எழுத்துலக வாசிகள் மிகக் குறைவாகவே இருக்க முடியும்.

இந்நாவலில் வரும் பிரதான பாத்திரமான ஒக்கொங்வோவின் எழுச்சியோடு ஆரம்பித்து அவன் வீழ்ச்சியோடு முடிவடைகிறது கதை. இந்நூலின் வெளியட்டையில் இந்நாவல் பற்றிக் கூறுகையில் "நைஜீரிய நாவலான 'சிதைவுகளில்' வெளிப்படும் உலகம் இந்திய வாழ்க்கையையும், தமிழ் வாழ்க்கையையும் பெரிதும் நினைவூட்டக் கூடியது. நம் மரபு, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், தொன்மம், வாய்மொழிச் செல்வம், விடுதலை வேட்கை மற்றொரு விதத்தில் இந்த நாவலில் பிரதிபலிப்பது தமிழ் வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டக் கூடியது" என்று போடப்பட்டுள்ளது உண்மையே.

இன்றைய எமது விடுதலைப் போர்க்காலச்சூழலில் வெளிவந்துள்ள இந்நாவலைப் படிப்பவர்கள், நாம் இன்று முகங் கொடுக்கும் பலவற்றோடு இதில் வரும் நிகழ்வுகள் உரசிக் கொண்டு நிற்பதையும் நமது 'போராட்டத்தில் நிகழ்ந்துள்ள தவறுகள் - சரிகளை ஒத்த போக்குகள் இதில் வேறு கோணத்திலிருந்து வெளிவருவதையும் காணலாம்.

அயல் கிராமத்தவர்கள் செய்த குற்றத்திற்காக தண்டமாகப் பெற்றுவந்து, மகனைப் போல் தன்னோடு வளர்த்து வந்த வளரிளம் பருவத்துச் சிறுவனை கொலை செய்ய ஒக்கொங்வோ உடன்படுவதும், அவன் கண்முன்னேயே அச்சிறுவன் கொலை செய்யப்படுவதும் ஆகிய நிகழ்ச்சிகளோடு களை கட்டத் தொடங்கும் இந்நாவல், ஒக்கொங்வோ தெரியாமல் செய்த தவறுக்காக அவன் வீடு, பொருட்கள் எல்லாம் அழிக்கப்பட்ட நிலையில் ஊரில் இருந்து வெளியேற்றப்படல், மதபோதகர்கள் என்ற போர்வையில் வெளியார் வருகை, அவர்களோடு ஒக்கொங்வோவின் சொந்த மகனே சேர்ந்து கொண்டு இவர்களின் மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிராக நிற்றல், ஈற்றில் அங்கு வந்து முகாமிட்ட வெளியாருக்கு எதிராக ஒக்கொங்வோ கிளர்ந்தெழுவதும் அது பின்னர் அவன் தற்கொலை செய்து கொள்வதில் முடிவதும் என்று முற்றுப்பெறும் நாவல் இறுதிவரை சுவை கெடாது, நமது உணர்வுகளைத் தூண்டியவாறே செல்கிறது.

இந்நாவலின் பிரதான பாத்திரமான ஒக்கொங்வோ பயத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது, கோழையாக வாழக் கூடாது என்ற வலுவான கொள்கைக்கு ஆட்பட்டவனாக இருக்கிறான். ஆனால், அவன் மனிதநேயத்திற்கு தேவையான இரக்கத்தையும், கோழைத்தனத்தின் குணக்குறியாகக் கொள்கின்ற தவறான போக்கையும் இந்நாவல் சித்திரிக்கின்றது. இதை அவன் அயல் கிராமத்தவர்களிடமிருந்து பெறப்பட்டுத் தன் வீட்டுப்பிள்ளைகளோடு பிள்ளையாக வளர்க்கப்பட்ட இளைஞனை கொலை செய்ய உடன் போவதிலிருந்து தெரியலாம்.

ஒரு நாவலை விமர்சிப்பது என்பதும் ஒரு மொழிபெயர்ப்பு நாவலை விமர்சிப்பது என்பதும் இரு வேறான விஷயங்கள். மொழி பெயர்ப்பென்பது எப்பொழுதும் ஒரு மொழியில் எழுதப்பட்ட சிறந்த படைப்பே இன்னொரு மொழிக்கு பெயர்க்கப்படுகிறது. ஆகவே மொழிபெயர்ப்பு நூலை விமர்சிப்பவன், மூலநூலில் கலா ரீதியாகத் தரப்பட்டுள்ள விஷயங்கள் மொழிபெயர்பில் தக்க வைக்கப்பட்டுள்ளனவா அல்லது வீழ்ச்சியடைந்துள்ளனவா அல்லது மூலநூலில் தரப்பட்டுள்ள மொழிநடையையும் விட மொழிபெயர்ப்பு சிறப்புப் பெற்றிருக்கிறதா என்பன போன்ற விஷயங்களையே கவனிக்கிறான்.

அந்த ரீதியில் இந்நாவல் மொழிபெயர்ப்பு எவ்வாறு உள்ளது?

மேலெழுந்தமானமாகப் பார்ப்பவர் கூட இதன் இடர்ப்படாத, பிசிறற்ற தமிழ் நடையைப் பாராட்டவே செய்வர். இதன் மொழிபெயர்ப்பை படித்த சில இலக்கிய நண்பர்கள் தாம் மொழிபெயர்ப்பு நூலைப் படிக்கின்ற உணர்வைப் பெறாதது இதன் வெற்றிதான் எனக்கூறியுள்ளதும் இங்கு குறிப்பிடப்படவேண்டும்.

இருந்த போதும் இம்மொழி பெயர்ப்பில் துருத்திக் கொண்டு நிற்கும் சிலவற்றைக் கூறத்தான் வேண்டும். நாம் வழமையாகப் பாவிக்கும் சொற்கள் இருந்தும் அவற்றை விட்டுச் சில இடங்களில் நேரடி மொழிபெயர்ப்பில் இறங்கியிருப்பது, அழகான இம் மொழிபெயர்ப்பு நூலுக்கு சிறு நெருடலைத் தருகிறதென்றே கூறவேண்டும். உதாரணமாக 'தேங்காய்' என்று நாம் வழமையாகப் பாவிக்கும் சொல் இருக்க, 'தெங்கு பருப்பு' என்று கூறவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? 'Coconut' என்ற ஆங்கிலச் சொல்லை நேரடியாக மொழிபெயர்க்க முனைந்ததன் விளைவா? 'Nut' என்ற சொல்லை 'பருப்பு' என்று கூறியிருக்கிறாரா? இன்னும் 'தென்னங்கள்ளு' என்று நாம் பாவிக்கும் அழகான சொல்லிருக்க, 'தெங்குகள்ளு' என்று சொல்லும் நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது? இவ்வாறே தேங்காய் எண்ணெய்க்கு 'தெங்கு எண்ணெய்' என்று தரப்படுகிறது.

மேலும் 'சிதைவுகள்' நாவல் மொழிபெயர்ப்பை நான் வாசிப்பதற்கு முன்பே "வாசித்திருந்த எம்.ஏ.நுஃமான், அவர்கள், இம்மொழிபெயர்ப்புப் பற்றிக் கதைத்தபோது, 'மொழி பெயர்ப்பு நல்லாத்தான் இருக்கிறது. ஆனால், அதில் ஓரிடத்தில் "மனிதத் தலையில் தான் அவன் தெங்குக் கள்ளை அருந்துவான்" என்று வருகிறது" என்று கூறியவர், "மனிதத்தலையில் எப்படிக் கள்ளருந்தலாம்? மனிதத் தலையில் கள்ளை ஊற்றினால் வெளியே வழிந்து விடுமே?" என்று சிரித்தார். நாவலின் 2ம் அத்தியாயத்தில் 23ம் பக்கத்தில் அவர் கூறிய இந்த வசனம் இருக்கிறது. மூலநூலில் இதன் வார்த்தைப் பிரயோகம் எவ்வாறு உள்ளது என்பதைப் பார்ப்பதற்கு கைவசம் நூல் இல்லை. இருந்தாலும் மனிதத்தலை என்ற வார்த்தைப் பிரயோகத்திற்குப் பதிலாக யாரும் ஏற்றுக் கொள்ளுதற்கு உகந்தவாறு 'மண்டை ஓடு' என்று மாற்றி, "மண்டை ஓட்டில் தான் அவன் தென்னங் கள்ளருந்துவான்" என்று பாவித்திருக்கலாம். இவ்வாறான தேவையற்ற அசௌகரியத்தை ஏற்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களை ஆசிரியர் தவிர்த்திருக்க வேண்டும் என்பதே எமது கருத்து.

இத்தகைய சில நெருடல்களை நீக்கி நாம் நோக்கும்போது, இந்நூல் மிக சிறப்பாகவே செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பென்று தோன்றாதவாறு செய்யப்பட்ட படைப்பாற்றல் என்றே கூறவேண்டும். இம்மாதிரியான மேலும் நல்ல மொழிபெயர்ப்புகளை ஆசிரியர் மேற்கொண்டால் தமிழ் மொழியும் மக்களும் வளமும் வனப்பும் பெறுவர்.

இறுதியாக ஒரு வார்த்தை: 'Things Fall Apart' என்று மூல நாவலில் காணப்படும் ஆங்கிலத் தலைப்பு, காலாகாலமாக ஒரு இனத்துவக் குழுவைச் சூழ்ந்திருந்த சம்பிரதாயங்கள் நம்பிக்கைகள், தொன்மங்கள், கோட்பாடுகள் எல்லாம் எவ்வாறு படிப்படியாகச் சிதைந்தழிந்து போகின்றன என்பதை ஒரு விதக் கவித்துவத் தன்மையோடு காட்டுவதாய் இருக்க, 'சிதைவுகள்' என்ற தலைப்பு அதை அவ்வாறு காட்டாது மொட்டையாகத் தருவது போல் தெரிகிறது.

மு.பொ.



# உனது வெயிற் சுண்டல்

ஒரு மழையாகவே பெய்வேன். என்னையல்ல.
நான் எனது பார்வையை!
உன் தலைமுடிகள் கொழுத்து. கறுப்பேறிப். பூக்கள்
மயங்கும் தரத்திற்கு மாறி.
நீளுகின்ற நிலத்தில். இனி எனது
வண்ணத்துப் பூச்சி வந்து மொய்க்கும். மயிர்க் கருமை
ஒட்டிச் சிறகில்பாரம் ஏற்பட்டுப் பறக்கையிலே
இடற. வெயில் தூக்கி நிமிர்த்தி.

என் கண்ணுக்குள் இருந்து இந்தப் போசாக்கு நிறைந்த ஒளி
பட்டு உன் கூந்தல் கொழுத்து
அதில் வண்ணத்துப் பூச்சி குந்தி.
பின் கறுப்பு ஒட்டிப் பறப்பதற்கு
இயலாமல் இடறுகையில் கை தூக்கும்
வெயிலுக்கும் இளைக்கிறது! அதன் இரத்தத்தில் குரூரம்
ஊறிப் போனதன். அடையாளம்—
அந்த மரம்! அந்த.
பொன் குருத்து வாயாலே
வருகையிலே அத நோண்டி
கொன்ற குடை!

அந்த மரம் அழிகையிலே. அதன் இலைகள் உதிர்ந்து
காற்றில் கலந்தபடி கத்தினவாம்.
சின்னப் பறவையொன்று
வாய். விக்கி விக்கிச் சொன்னதென.
என் பறவையானவளே நீ சொன்னாய்:
ஒரு நாள்!
குருவி மொழி உனக்கு
தேன் தமிழை விடவும் தேர்ச்சி!
மகிழ்ந்து.
நீ அடிப்பது கையல்ல:
சிறகு!
பச்சைக் கிளி பாட. நீ வீட்டிற்குள் இருந்து
தாளத்தில் என்மீது. கண் போட்டு!

இந்தப் பலமிழந்த வெயிலின் கதை
நமக்குத் தேவையில்லை இவ்விடத்தில்.
ஒரு வண்ணத்துப் பூச்சியினை கை தூக்கி விடுகையிலே
களைக்கின்ற இளைய வெயில்.
நீ நோண்டிச் சுண்டுவாய். ருசி பார்க்க!
என் பார்வையினால் கிடைக்கின்ற பசளைபட்டு பசளைபட்டு
தெம்பாகி உன்னுடைய பிடரிமயிர் சடைக்க.
என் உண்மை அன்பே. நான். உயிர் விதைக்கும் ஆறே.
உனது வெயிற் சுண்டல் தின்ன நானும் வருகிறேன்:
இந்த வாயாலே அல்ல.
என் பெருவிரலின் பூ நகத்தால்

சோலைக்கிளி

10.08.1998

# தமிழ் மக்களை வந்தேறு குடிகளாக்கும்—
# ரூபவாஹினி
# ஐ.ரி.என்.
# இ.ஒ.கூ.

> ரூபவாஹினியில் தமிழ் தனி அலைவரிசை ஒன்றை ஆரம்பிப்பது பற்றி முன்பு கேட்ட போது அதற்கு நிதி இல்லையென்று அதன் தலைவர் தெரிவித்தார். ஆனால், ரூபவாஹினி விளையாட்டுக்கென தனி அலைவரிசை ஒன்றை விரைவில் தொடங்கவிருப்பதாக தெரியவருகிறது. இதற்கு நிதி எங்கிருந்து வந்தது?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஆகியவற்றின் தமிழ் நிகழ்ச்சிகள் பற்றி பாராளுமன்றத்தில் கூட்டம்




நடைபெறுவது பற்றி சரிநிகரில் முன்பொரு தடவை குறிப்பிட்டிருந்தோம்.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க இருந்த காலத்தில் இந்தக் கூட்டம் ஒழுங்காக நடைபெற்று புதிய அமைச்சர் மங்கள சமரவீர வந்ததன் பின்னர் சில காலம் நடைபெறாமல் இருந்து மீண்டும் நிகழத் தொடங்கியிருக்கிறது.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில், புதிய அமைச்சர் பதவிக்கு வந்தவுடன் பழைய அமைச்சரின் கீழ் இருந்த தொலைக்காட்சி, வானொலி நிலையங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மாற்றம் செய்யப்பட்டனர் என்பதாகும். இதன்படி கலாநிதி நுஃமான், பிரேம்ஜி ஞானசுந்தரம், செல்வி திருச்சந்திரன், சித்திரலேகா மௌனகுரு போன்றவர்கள் நீக்கப்பட்டு புதியவர்கள் சேர்க்கப்பட்டனர். புதியவர்களுடன் ஒப்பிடுகையில், பழையவர்கள் ஊடக உலகத்துக்கு தெரிந்தவர்கள் என்பது முக்கியமானது. புதியவர்களோ, நியமனம் கிடைத்த பின்னரே ஊடக உலகத்துக்கு அறிமுகமானார்கள்.

புதிய அமைச்சர் மங்கள சமரவீர இப்புதிய பணிப்பாளர் சபையுடன் வேறு இரு ஆலோசனைச் சபைகளையும் நியமித்திருந்தார். இந்து சமய ஆலோசனைச் சபை, பொதுவான தமிழ் நிகழ்ச்சி ஆலோசனைச் சபை என்று அவை அழைக்கப்பட்டன.

கம்பவாருதி ஜெயராஜ், சர்வமங்களம் கைலாசபதி, எஸ். கே. பரராஜசிங்கம், ஜின்னா ஷெர்புதீன், ஷம்ஸ், வசந்தா வைத்தியநாதன், குமாரசாமி, கு. சோமசுந்தரம், தெளிவத்தை ஜோசப் என்று பல பிரமுகர்கள் இக்குழுக்களில் உள்ளனர்.

இதேவேளை திருமதி ஜெயந்தி வினோதன் ரூபவாஹினியின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக நியமனமாகியிருக்கிறார். கூடவே அவருக்கு ரூபவாஹினி, ஐ.டி.என். இ.ஒ.கூ.தாபனம் ஆகியவற்றுக்கான முக்கிய ஆலோசகர் பதவி நியமனமும் வழங்கப்பட்டுள்ளது. நாம் அறிந்த வகையில், முன்பு குறிப்பிட்ட ஆலோசனைக்குழுக்களின் உறுப்பினர்களுக்கும், ஒவ்வொரு கூட்டத்தில் பங்குபற்றுவதற்கும், பணிப்பளர் சபை உறுப்பினருக்கும் வேறு தொகை அலவன்ஸ்ஸாக வழங்கப்படுகின்றது.

இதுவரையில், பல கூட்டங்கள் நிகழ்ந்துள்ளன. அவை என்ன தீர்மானங்கள் எடுத்தன? அவை தொடர்பாக இந்த நிலையங்களின் மேல்இடங்கள் எத்தகைய நடவடிக்கைகள் எடுத்தன என்பது வேறு. ஆனால் கூட்டத்திற்கு போய் இருந்துவிட்டு எழும்பினால் நல்ல சன்மானம் கிடைக்கும். கிட்டத்தட்ட எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்துவிட்டு வருவதுபோல.

இங்கு இன்னுமொரு சுவையான: விடயம் கம்பன் கழக ஜெயராஜ் பற்றியது. அவர் இக்கூட்டங்களால் ஒன்றும் செய்யமுடியாது எனவும், எல்லாம் ஒரு பேய்க்காட்டல் எனவும், தான் இதற்குப் போவதில்லை எனவும், சொல்லி வருகிறார். ஆனால், அலுவலக ரீதியாக அவர் இந்த ஆலோசனைக் குழு உறுப்பினர் பதவியில் இருந்து விலகவில்லை. இதுவரையில் நடந்த ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு இ.ஒ.கூ. இசைப்பணிப்பாளர் அருந்ததி சிறிரங்கநாதன் போனதேயில்லையாம். அவர் மீதே நடவடிக்கை எடுக்கக்கூட முடியாத இக்குழுவுக்கு வேறு எதைத்தான் செய்ய முடியும். இனி நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருவோம். இந்தக் கூட்டத்தொடர் ஆரம்பித்த நாட்களில் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

- ❑ தனித் தமிழ் ஒளிபரப்புச் சேவை, ரூபவாஹினியில் தேவை. அதற்கென்று ஒரு பணிப்பாளர் தேவை. முதலில் இப்போதுள்ள தமிழ் நிகழ்ச்சிப் பிரிவுக்கு பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதன் மூலம் தமிழ் நிகழ்ச்சிகளை சீர்படுத்தலாம். உள்ளூர் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கலாம்.
- ❑ தமிழில், தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும். வானொலி ஒலிபரப்பு முடிவில் அது ஒலிக்கப்படவேண்டும்.
- ❑ தமிழ் முஸ்லிம் ஊழியர்களின் எண்ணிக்கை கணிக்கப்பட்டு இந்த நிலையங்களில் இன விகிதாசரப்படி நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.
- ❑ ரூபவாஹினி, ஐ.டி.என். தமிழ் நிகழ்ச்சிக்கான தயாரிப்பாளர்கள் பற்றாக்குறை நீக்கப்படவேண்டும்.
- ❑ வானொலியில் ஒலிபரப்பு ஆரம்பமாகும் போது ஜயமங்கள காதாவுக்குப் பதிலாக தமிழில் பாடல் இசைக்கப்பட வேண்டும் என்றும், அது பின்னர் மங்கள இசையாக இருக்க வேண்டும் என்றும், மாறி அதற்கும் பின்னர் தமிழ் முஸ்லிம்களுக்கு பொதுவான இசையாக இருக்கவேண்டுமென கோரப்பட்டது. (இது பற்றி முன்னரும் சரிநிகர் குறிப்பிட்டிருந்தது)
- ❑ வானொலி ஒலிபரப்பில் தமிழ்ச் சேவை பல இடங்களுக்கு கேட்கவில்லை. அக்குறை நீக்கப்படவேண்டும்.
- ❑ ஐ.டி.என்னில் இரண்டு தமிழ் ஊழியர்கள்தான் உள்ளனர். எனவே ஊழியர்கள் அதிகரிக்கப்படச் செய்யவேண்டும்.
- ❑ தமிழ் நிகழ்ச்சிகள் திடீரென முன்னறிவித்தலின்றி நிறுத்தப்படுவது தவிர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன இவற்றில் முக்கியமான குறைகளைச் சுட்டிக்காட்டும் நடவடிக்கை எடுக்கக்கோரி சரியான ஆய்வறிக்கை ஈ.பி.டி.பி. மட்டுமே சமர்ப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் இந்தக் கோரிக்கைகளில் எவை எவை நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதைத்தானும் சொல்லமுடியுமா என்பதை சம்பந்தப்பட்ட அனைவரிடமும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

எத்தனை ஆலோசகர்கள், எத்தனை ஆலோசனைக் கூட்டங்கள் இது வரையில் நடந்த போதிலும் எல்லாம் "பேய்க்காட்டாகவே" தமிழ் ரசிகர்களுக்கும், நேயர்களுக்கும் புரிகிறது.

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர் என்ற ஒருவர் வந்ததன் பின்னர் உள்ளூர் கலைஞர்களுக்கு முன்னைய காலத்தைவிட முன்னேற்றம் கிடைத்ததாகத் தெரியவில்லை. முன்னைய காலத்தில் இப்படி ஆலோசனைக் குழுக்களும், ஆலோசகரும் பணிப்பாளரும் இருந்ததில்லை. கூட்டங்கள் இல்லை. ஆனால், இப்போ இவ்வளவு பேர் வந்ததன் பின்னர் ரூபவாஹினியில் நாம் காண்பது பாலச்சந்தரின் நாடகத்தொடர்களும், அவற்றின் 'சகோதரங்களும்' தான். இதற்கு ரூபவாஹினி தேவையா? அதற்குத்தான் தனியார் தொலைக்காட்சிகள் இருக்கின்றனவே.

இவற்றை ஒளிபரப்புவதற்கு ஆலோசகர் ஆலோசனை உறுப்பினர்கள் தேவை தானா? இதற்கு இவர்களுக்கு வழங்கப்படும் பணம் தமிழ் நேயர்களினது இல்லையா?

காலப்போக்கில் தமிழ்ப்பிரிவையே மூடிவிட்டு ஒரு தொழிநுட்பவியலாளரையே நியமித்து விட்டால் 'இந்திய கசற்றுகளை' இங்கு ஒளிபரப்பலாம்.

ஆலோசகர்கள் 'கசற்றுகளையும், தேவையானால் மோகன் வைத்யா, நெப்போலியன் போன்றவர்களை இறக்குமதி செய்து கொடுக்கலாம். இதற்கு ஒரு பணிப்பாளர் தேவையில்லை அல்லவா?

தமிழ் நிகழ்ச்சிகள் நிறுத்தப்படுவதை இன்னும் தடுக்க முடியவில்லை. நிகழ்ச்சி ஒளிபரப்பப்-படமாட்டாது என்பதை பத்திரிகைகளுக்கு அறிவிப்பதும் பணிப்பாளரின் பணியாக உள்ளது. (இதுவும் அவருக்கு வழங்கப்பட்ட ஆலோசனையோ தெரியவில்லை.) ஆண்டாண்டு காலமாக செவ்வாய்க்கிழமைகளில் மாலை 7 மணிக்கு ஒளிபரப்பாகும் கலையரங்கம் நிகழ்ச்சியும்,. நேரம் மாற்றப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

ஐ.டி.என்னில் ஒளிபரப்பான ஆயிரத்து ஒரு இரவு சொல்லிய அராபியக் கதைகள் தொலைக்காட்சித் தொடர் அறிவித்தல் ஏதுமின்றி இடைநிறுத்தப்பட்டது. ஒரு முஸ்லிம் எம்.பியும் வாய்திறக்கவில்லை. ரசிகர்கள் மட்டும் பத்திரிகைகளில் கேட்டிருந்தார்கள்.

காலப் பெட்டகம் நிகழ்ச்சி கடந்த மாதம் இடைநிறுத்தப்பட்டது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுள் ஓர் அறிவியல் தகவல் மஞ்சரி நிகழ்ச்சியான இதனை நிறுத்தும் போது எவ்வித அறிவித்தலும் செய்யப்படவில்லை.

ரூபவாஹினி செய்திகள் காட்டப்படும்போது தலையங்கங்கள் ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் காட்டப்படுவதை நீக்கமுடிவதில்லை.

தமிழ் நாடகங்களை வளர்க்க முடிவதில்லை.

சிங்களத்தில் ஒளிபரப்பாகும் சிறுவர் நிகழ்ச்சிகள், விவரண நிகழ்ச்சிகளின் தரத்துக்கு தமிழ் நிகழ்ச்சிகளை உயர்த்த முடியவில்லை.

அதற்குக் காரணமான ஊழியர் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லை.

வானொலி ஒலிபரப்பைக் கேட்க முடிவதில்லை.

ரூபவாஹினியில் தமிழ் தனி அலைவரிசைபற்றி முன்பு கேட்டபோது நிதி இல்லையென்று அதன் தலைவர் தெரிவித்தார். ஆனால், ரூபவாஹினி விளையாட்டுக்கென தனி அலைவரிசை ஒன்றை விரைவில் தொடங்கவிருப்பதாக தெரியவருகிறது.

இவற்றை இறுக்கிக் கேட்க வேண்டியது எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் முக்கிய கடமையாகும். இல்லையெனில், தனிப்பட்ட செல்வாக்குகள், தனிப்பட்ட உறவுகள் மூலம் ஆலோசகர்களாக வந்தவர்களின் தனிப்பட்ட நலன்களால் எமது பண்பாட்டு நலன்கள் வீழ்பட்டுப்போகும் என்பதை மிக கவனத்துடன் எடுத்துக் கூறுகிறோம்.

இந்நிலையில் தமிழ்ச் செய்திகளும், கேள்விகளால் ஒரு வேள்வியும், இறக்குமதி ஒலி நாடாக்களும் இறக்குமதி கலைஞர்களும் மட்டும்தான் அரச தொலைக்காட்சி நிலையங்களால் செய்யக்கூடிய தமிழ் நிகழ்ச்சிகளாயின் இன்னும் அரை நூற்றாண்டுக்குள் நாங்கள் நிச்சயமாய் வந்தேறு குடிகள் தான்.



# லிங்க வழிபாடு: சிலகுறிப்புக்கள்

158 இதழில் 'கோமதி' என்பவர் எழுதிய "லிங்கவழிபாடு" பற்றிய குறிப்புத் தொடர்பாகவும், அதே இதழில் "சொல்லாட்சி சரியானதா" என்ற செல்வி திருச்சந்திரன் என்பவரின் விளக்கம் தொடர்பாகவும் கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பீடலிங்கவழிபாடு பற்றி சிவஞான சித்தியார் என்ற நூலில் அருணந்தி சிவாச்சாரியார் விளக்கியுள்ளார். ஆனால், பதம் புராணத்தில் காணப்படுவது போன்றோ, அல்லது கந்தபுராணத்தில் காணப்படுவது போன்றோ "ஆபாசமாக" எதனையும் அவர் கூறவில்லை. இயல்பான ஒன்றான ஆண் பெண் இணைவினால் இனப்பெருக்கம் ஏற்படுகின்றதென்பதை "பீடலிங்கம்" என்ற தொடரால் சுட்டிக் காட்டுகிறார்.

*"சக்தியும் சிவமுமாய தன்மை யில்வுலகமெல்லாம் / ஒத்தி ஒவ்வா ஆணும் பெண்ணும் உயர் குணகுணியுமாகி/ வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம் / இத்தையுமறியார் பீடலிங்கத்தின் இயல்புமோரார்."*

ஆரிய இந்து மத புராணங்களில் வெளித் தோற்றத்திற்கு ஒழுக்கம், பண்பாடு, உயர்ந்த சிந்தனை என்றெல்லாம் கூறப்பட்டாலும் உள்புகுந்து ஆராய்ந்து பார்க்கும் போது பால் கிளர்ச்சிகளைத் தூண்டும் ஆபாசக் கருத்துக்கள் நிறைந்திருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

"யாழ்ப்பாணத்தாரது கலாசாரத்தின் ஆணிவேர் கந்தபுராணம்" என்றெல்லாம் போற்றப்படுகின்ற கச்சியப்பரின் கந்தபுராணத்திலும் காமரசம் ததும்பும் பாடல்கள் நிரம்பவே உள்ளன. (இது பற்றி விரிவாகவே 1970ல் 'கந்தரசம்' என்ற பெயரில் நூலொன்றை எழுதி வெளியிட்டுள்ளேன்.) எதிர்பாலுணர்வுகள் பற்றி மாத்திரமல்ல, ஓரினச் சேர்க்கை (ஒத்தபாலுறவு) பற்றியும் கந்தபுராணத்தில் விரிவாகவே காணப்படுகிறது. அவற்றுள் சிலதுளிகள் இதோ:

தாருகாவனத்து முனிபத்தினிகள் பிச்சாடனக் கோலத்தில் பிறந்த மேனியராகக் காட்சியளித்த மகேஸ்வரனின் 'ஆண் அவயத்தை'க் கண்டு புலம்பிய பாடல்களுள் ஒன்று,

*"எந்தையர் தம் இருங்குறியின்கண்ணே / சிந்துகின்ற திவலை யொன்றல்லவோ / உந்திமேல் வந்துலகனைத்துந்தரும்/ அந்த நான் முகன் ஆனதென்பார் சிலர் "*

(கந்தபுராணம், தக்சகாண்டம் ததீசி யுத்தரப்படலம், செய்யுள் எண். 62)

(திவலை - துளி)

அதேபடலத்தில் வரும் "பாசம் நீங்கி... எனத் தொடங்கும் செய்யுளில் "ஐயர்தங்கோசம் நோக்கினர் கும்பிடுவார் சிலர் " என்ற தொடரில் முனிபத்தினிகள் ஆண் அவயவத்தைக் கும்பிட்ட காட்சி சொல்லப்படுகிறது.

அதேபடலம் 67வது செய்யுளில், பிச்சாடனரின் அம்மணமேனியைக் கண்டதால் முனிபத்தினிகளின் ஆடைகள் அனைத்தும் உடலிலிருந்து கழன்று வீழ, தமது பெண் அவயத்தைக் கைகளால் பொத்தி மூடினார்கள் என்று கூறப்படுகிறது.

*"அண்ணல்மேனி கண்டார்வமுற்றாடை-போய்/ பெண்ணின் நீர்மைப்பெருங்குறி மூடியும்/ கண்மூடியுங்கைக் கடங்காமையால்..."*

அதேபடலம் 71வது செய்யுளில் முனிபத்தினிகள் தமது வெட்கத்தைவிட்டு பிச்சாடனரை தம்முடன் "கூட" வருமாறு அழைத்தானராம்.

*"இன்றுமைக் கண்டியாங்களும் ஆடை-போய் / ஒன்று காதலுற்றோய்த்தனம் இங்கிது/ ஒன்று கூடுதிர் நங்களை நீரென / நின்று கூறி நெடிதுயிர்த்தார் சிலர்."*

***

செல்வி திருச்சந்திரன் "சொல்லாட்சி சரியானதா?" என்ற வினா தொடர்பாக எனது கருத்துக்கள்:- (சரிநிகர் இதழ் 158, பக்கம் 19) செல்வி திருச்சந்திரன் Homosexulity, Lesbianism என்ற சொற்களுக்கு "ஓரினச் சேர்க்கை" என்பதே சரியான மொழி பெயர்ப்பாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். Homosexulity என்பது இரு ஆண்களிடையே அல்லது இரு பெண்களிடையே ஏற்படும் ஓரினச் சேர்க்கையைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல் ஆனால், Lesbianism என்பது இரு-பெண்களிடையே ஏற்படும் ஓரினச் சேர்க்கையைக் குறிப்பிடும் சிறப்புச் சொல். அதற்கு எதிர்பால் சொல் Sodomy என்பது. அது இரு ஆண்களிடையே ஏற்படும் ஓரினச் சேர்க்கையைக் குறிப்பிடும் சிறப்புச் சொல். இந்த வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்வது நன்று.

இந்த ஓரினச் சேர்க்கை பற்றி கந்தபுராணமும் விரிவாகவே கூறுகிறது. மகாவிஷ்ணுவும் மகேஸ்வரனும் ஓரினச் சேர்க்கையில் (Sodomy) ஈடுபட்டிருந்ததைக் கச்சியப்பச்சிவாசாரியார் விலாவாரியாக விபரிக்கின்றார்.

*"அன்பில் ஆடவர் ஆடலரோடு சேர்ந்து/ இன்பமெய்த்தியிருந்தனர் இல்லையால்/ முன்பு கேட்டமன்று முதல்வநீ / அன்பொடென்னைப் புணர்வது மாட்சியே!"*

(கந்தபுராணம், அசுரர்காண்டம், மகா சாத்தாபடலம் - செய்யுள் 34)

அதேபாடலம் 38ம் செய்யுளில் *"நாணியோடிய நாரணனை பிறை/ வேணியண்ணல் விரைவுடன் ஏகியே பாணியால் அவன் பாணிணைப் பற்றினான்/ சேணினின்று திசைமுகன் போற்றவே"*

(பாணி - கை)

எனவே எழுத்துச் சான்றுகளின்படி ஈரேழு பதினான்குலகங்களிலும் முதன்முதல் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டவர்கள் என்ற பெருமையை மகாவிஷ்ணுவும், மகேஸ்வரனும் தட்டிச் செல்கின்றார்கள். கின்னேர்ஸ் புத்தகத்திலும் இடம்பெற வேண்டிய செய்தி இது.

ஆவரங்கால் அண்ணா இராசேந்திரம்

# மணிரத்தினத்தின்...

கருணாநிதி - எம்.ஜி.ஆர். இருவரினதும் நட்பையும், நட்பிற்கு மேலான அரசியலையும் கூறுகின்றது. இங்கு தெரிவு செய்யப்பட்ட அரசியல் பதவி வெறியில் நிலை கொண்டிருப்பதனைக் காணலாம். அதிலும், குறிப்பாகக் கருணாநிதி பதவிக்காக எதுவும் செய்வார் என்கிற மாதிரி சித்திரிக்கப்படுகின்றது. குறிப்பாக எம்.ஜி.ஆர். கழிவிரக்கத்-திற்குரியவர் என்றும், கருணாநிதி கர்வத்திற்கு உரியவர் என்றும் இருவர் திரைப்படம் கதை சொல்கின்றது. திராவிட அரசியலைப் பலவீனப்படுத்த இந்திரா காந்தி அவர்கள் எம்.ஜி.ஆரைப் பலப்படுத்தி, தி.மு.கவிலிருந்து வெளியேற வைத்த விதம் பற்றி இருவர் திரைப்படம் மூச்சுவிடவில்லை. எம்.ஜி.ஆரின் அந்திய காலங்களில் ஜெயலலிதாவினால் எம்.ஜி.ஆருக்கு வந்த நெருக்கடிகள் பற்றியும் சொல்லப்படவில்லை. எம்.ஜி.ஆர் கருணாநிதி உறவில் இவையும் முக்கியத்துவம் பெற்றன.

அத்துடன் இன்னொன்றையும் குறிப்பிடலாம். கருணாநிதி மீண்டும் ஆட்சிக்கு வந்த (1996 மே) பின்னர் எடுக்கப்பட்ட காட்சிகளில் (எந்தெந்தக் காட்சிகள் என்பதை நாம் தெளிவாகச் சொல்வது கடினம்.) குறிப்பாக இறுதிக் காட்சி எம்.ஜி.ஆரின் மரணத்திற்கு கருணாநிதி வேதனைப்படுவதாக அமைந்த காட்சி, கருணாநிதியைத் திருப்திப்-படுத்துவதற்காக எடுக்கப்பட்டதாகப் புரிய முடிகிறது. இது தொடர்பான பேட்டி-யொன்றில் முதல்வர் கருணாநிதி தன்னை சுகாசினி மணிரத்தினம் இருவர் திரைப்-படத்தை திரையிட்டுக் காட்டுவதற்காக விசேடமாக அழைத்ததாகவும் குறிப்-பிட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பங்களில் தான் மணி-ரத்தினத்தின் நேர்மை கேள்வி-க்குள்ளாகின்றது. வேறொரு கேள்வியையும் இப்போது நாம் கேட்கலாம். இந்திரா காங்கிரஸ் கட்சியின் 'பாரம்பரியத்தில்' ஏதாவதொரு கூறையாவது மணிரத்தினம் திரைப்படமாக எடுக்க முயல்வாரா?

4

மணிரத்தினத்தின் சினிமா குறித்த கட்டுரையின் இறுதிப் பகுதிக்கு வந்து விட்டோம் என நினைக்கிறேன். யமுனா ராஜேந்திரன் தனது புத்தகத்தில் குறிப்பிடாத வேறு சில விடயங்களுக்குப் போகலாம்.

மணிரத்தினத்தின் அரசியல் தான் என்ன?

இந்த நூலில் யமுனா ராஜேந்திரன் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். "மணிரத்தினத்தைச் சிலர் இந்து மத வெறியன், ஜாதி வெறியன், தமிழின விரோதி எனக் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுகின்றார்கள்" (பக்.89)

இந்த வாக்கியத்தில் வரும் வெறியன், விரோதி என்ற சொற்களைச் சற்றுத் தளர்த்தி விட்டுப் பார்ப்போம். மற்றும்படி மேற்கூறிய வாக்கியத்தில் ஓரிரு உண்மையின் கூறுகள் தென்படுகின்றதா?

காஷ்மீர் விடுதலைப் போராளிகளின் மீதான இந்திய அரசின் பார்வையையே மணிரத்தினத்தின் 'ரோஜா' திரைப்படம் உணர்த்தியது.

அயோத்தி, பம்பாய் மதக்கலவரத்தை அப்போதைய நரசிம்மராவ் அரசாங்கம் எப்படிப் பார்த்ததோ அதனை மணிரத்-தினத்தின் பம்பாய்த் திரைப்படம் சொன்னது.

அப்போதைய அரசியல் சூழலில் திராவிட இயக்கங்களின் வளர்ச்சிக்குச் சில தேவைகள் இருந்தன. திராவிட இயக்கங்களைப் பலவீனப்படுத்த வேண்டிய தேவை இந்திய தேசியக் கட்சிகளுக்கு (குறிப்பாக காங்கிரஸ் கட்சி) இருந்தது. அதன் ஒரு வெளிப்பாடு மணிரத்தினத்தின் இருவர்.

இவற்றிலிருந்து மணிரத்தினத்தின் அரசியலைப் புரிந்து கொள்ள முடியும்.

இறுதியாக வெளிவந்த மணிரத்-தினத்தின் 'உயிரே' திரைப்படம் மணிரத்தினத்தின் அரசியல் என்னவென்று புட்டுப்புட்டு வைக்கின்றது.

அரசியல் ஒடுக்கு முறைக்கு உள்ளான இனத்திலிருந்து (பலரைப் போல) ஒரு பெண் போராளியாகப் புறப்படுகின்றார். அவரைக் காதல் துரத்துகின்றது. இடையில் சலனம் அவளிடம் இருந்தாலும், இலட்சியம் வெல்கின்றது. துரத்துகிற காதல் அவளை விடவில்லை. இறுதி இலக்கை அடைவதற்காக உடனடி இலக்குக்காக அவள் தன்னைப் பலியாக்கத் தயாராகிறாள். தற்கொலைப் போராளியாகிறாள். ஆனால், துரத்திய காதல் அவளது உடனடி இலக்கை அடைய விடாது இடையிலேயே தோல்வியடைய வைக்கிறது.

மணிரத்தினத்தின் தேர்வு அதுவாகத் தான் இருந்தது. உடனடி இலக்கை அடையக் கூடியதாகவும், மணிரத்தினம் உயிரே திரைப்படத்தை முடித்திருக்கலாம். மணிரத்தினத்தின் விருப்பம் அதுவல்ல. மணிரத்தினம் சொல்ல விரும்புவது இதனைத் தான். "உயிரே படத்தில் தீவிரவாதத்தை அழிக்க இன்னொரு தீவிரவாதத்தை கையில் எடுத்துக் கொள்ளாதீர்கள்... அன்பு, அரவணைப்பு மூலம் அதை வெல்லலாம் என்று காட்டியிருக்கிறேன்... என்னவாக இருந்தாலும் ஆயிரம் நியாயங்கள் இருந்தாலும் தீவிரவாதம் முடிவு அல்ல. தீர்வும் அல்ல" (குங்குமம் 4.9.98 இதழ்)

இப்போது புரியக் கூடியதாக இருக்கிறது மணிரத்தினம் யாரென்பது. அரச வன்முறை அல்ல அவரது பிரச்சினை. ஒடுக்கப்படும் மக்களின் உரிமைப் போரே அவரது பிரச்சினை. அதற்கெதிராக அவர் தனது வளங்கள் யாவற்றையும் பயன்படுத்துகிறார். இதே கருத்தோட்டத்தில் நின்று ரோஜா பம்பாய், இருவர் திரைப்படங்களையும் நோக்க-லாம். அதன் அரசியலையும் புரியலாம்.

ஒடுக்குகின்ற அரசின் சார்பாக நிற்பவர்களுக்கு ஒடுக்கப்படுகிற மக்களின் வலியைப் புரிந்து கொள்ள முடியாது. புரிந்து கொள்ள முடியாதவர்கள் இவ்வாறான திரைப்படங்களை எடுப்பதைத் தவிர்க்கலாம். ஆனால், மணிரத்தினம் போன்றவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்-வார்கள். ஏனென்றால், அரச விசுவாசம், அடக்கு முறைக்கு ஆதரவான குரலை வெளிப்படுத்துகிற வேகம், வர்க்கநலன் இவற்றையெல்லாம் கொண்டவர்களால் சும்மா இருக்கமுடியாது.

இவற்றையெல்லாம் யமுனா ராஜேந்திரன் ஏன் புரியாமல் விட்டார்?

இறுதிக் குறிப்பு!

இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். மணிரத்தினம் பற்றியதல்ல. மணிரத்தினத்தினத்தைத் தாண்டிப் போகும் தமிழ்ச் சினிமா பற்றியது.

70களின் இறுதிப்பகுதியில் மிக முக்கியமான தமிழ்ச் சினிமாக் கலைஞர்கள் வெளித் தெரிந்தார்கள். மகேந்திரன், பாலுமகேந்திரா, பாரதிராஜா, ருத்ரையா, சிறீதர்ராஜன், பாரதிவாசு என்று அடுக்கிக் கொண்டே போகலாம். தேங்கிக் கிடந்த தமிழ்ச் சினிமாவின் கட்டுடைத்து காட்டாற்று வெள்ளமெனப் பாய்ந்தார்கள். தமிழ்ச் சினிமாவின் பெருநிறுவனங்களே இந்தப் பாய்ச்சலில் அடிபட்டுப் போனது.

அதேயளவு ஆளுமை இல்லா-விட்டாலும், காட்டாற்று வெள்ளமாக இல்லாவிட்டாலும் ஒரு வெள்ளம் 90களின் இறுதியில் தமிழ்ச் சினிமாவில் பாய வெளிக்கிட்டிருக்கிறது. சேரன், அகத்தியன், பாலசேகரன், சசி என்று நீளும் பட்டியல் தொடர்கின்றது. காலம் உருவாக்கிய கலைஞர்கள் இவர்கள். எனவே காலத்திற்குக் குந்தகம் விளைவிக்க மாட்டார்கள் இவர்கள் என நம்புவோமாக.

# உறங்காத உண்மைகள்!

இலங்கை வானொலி தேசிய சேவையின் 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சி அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். பிரதி ஞாயிறு தோறும் காலை மாகாணச் செய்திகளின் பின் எட்டுமணி வரை இடம்பெறும் சமகால நிகழ்வுகளை உடனுக்குடன் தரும் சஞ்சிகை நிகழ்ச்சி இது.

15.11.98 அன்று இடம்பெற்ற வாரம் ஒரு வலத்தில், அன்றைய ஏரிக்கரைப் பத்திரிகையின் தலைப்புச் செய்தி, அதன் நம்பகத் தன்மை பற்றி ஒரு சர்ச்சை எடுக்கப்பட்டது. ஒரு ஊது குழலின் கைவரிசையை மற்றைய ஊது குழல் விமர்சிக்கின்றது. நிகழ்ச்சித் தொகுப்பாளர் தன் சக ஒலிபரப்பாளரிடம் கருத்துக் கேட்கிறார். 'சில மாற்றுப் பத்திரிகைகள் அரச ஊடகமான எம்மீதும், எமது ஒலிபரப்பாளர்கள் மீதும் சேறு பூசுகின்றன. இந்தப் பொறுப்புள்ள பத்திரிகைகளும் கூட தவறு விடுகின்றன. இப்படி சேறுபூசும், தவறுவிடும் பத்திரிகைகள் பற்றி எமது வானொலி விமர்சிக்கப் புறப்பட்டால் நிலைமை என்ன ஆகும்?" என்கிறார்.

அதற்கு சக ஒலிபரப்பாளர் பதில் தருகிறார். அவர் ஒலிபரப்பாளர் மட்டுமல்ல இன்னொரு பலமான தேசிய பத்திரிகையையும் சார்ந்தவரும் கூட அவர் கூறுகிறார்.

"தேசிய பத்திரிகைகள் மிகுந்த சமூகப் பொறுப்பும், கடமையும் உடையவை. ஆனால், மாற்றுப் பத்திரிகைகள் அப்படியல்ல. மாற்றுப் பத்திரிகைகள் - ஏமாற்றம், தவிப்பு, தோல்வி நிலையில் உள்ளவர்களால் வெளியிடப்படுவது. இப் பத்திரிகைகளில் சமூகத்தின் மேல் நம்பிக்கையில்லாதவர்களே எழுதுகின்றனர். அப்பத்திரிகை சமூகத்தில் ஒரு சிலரால் மட்டுமே வாசிக்கப்படுகின்றது. எனவே அவற்றின் கருத்துக்களைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை..." என்றார்.

அத்துடன் "எத்தனை வானொலி-கள், பத்திரிகைகள் முண்டியடித்து செய்திகளை வெளியிட்டாலும் மக்கள் இலங்கை வானொலிச் செய்தியையே கேட்கின்றனர். அது தாமதமாக ஒலிபரப்பப்பட்டாலும் அப்படி ஒரு நிகழ்வு நடந்ததா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள்..." என்றும் கூறினார்.

கண்களையும், காதுகளையும் வாயுடன் ஆன்மாவையும் அடகு-வைத்து விட்டு அரசுக்கு ஒத்து ஊதும் இந்த ஊது குழலாளரை என்ன செய்வது? பொய்யை மட்டுமே திரித்து உண்மையாகக் கூறவல்ல-வர்கள் இவர்கள்.

ஒரு நிகழ்வின் அல்லது சம்பவத்தின் பரிமாணங்களை மாற்றுப் பத்திரிகைகளாலேயே பார்க்க முடியும். தகவல்களின் ஆழத்தை, பின் விளைவுகளை மாற்றுப் பத்திரிகைகளாலேயே பகிரங்கப்படுத்த முடியும்.

அவை மக்களை, வாசகர்களைச் சிந்திக்க வைக்கின்றன. அந்தச் சிந்தனைகளின் விளைவே இன்று அரச ஊது குழல்களின் செய்திகள் 'லங்கா புவத்' என்ற அடைமொழியில் அரிச்சந்திரனின் எதிர்க் குணமாக் அடையாளம் காணப்பட்டு ஏளனப்-பட்டு நிற்கின்றன. வீழ்ந்தும் மீசையில் மண்படவில்லை என்கிறார் அந்த ஒலிபரப்பாளர். நக்குண்டார் நாவி-ழக்கத் தானே வேண்டும்.

அப்படி மாற்றுப் பத்திரிகைகளால் தாம் சேறுபூசப்படுவதாக உணர்ந்தால் சம்பந்தப்பட்டவர் தனது பக்க நியாயத்தை ஒட்டியோ, வெட்டியோ அந்த மாற்றுப் பத்திரிகைக்கு எழுதி அனுப்ப வேண்டியது தானே! அரச ஊது குழல்களைப் போல் பத்திரிகா தர்மம் மறந்து, தகவல்துறை ஜனநா-யகம் மறந்து மாற்றுப் பத்திரிகைகள் செயற்படுவதில்லையே. அவற்றுக்கும் முகவரி, பதிவு இலக்கங்கள் இருக்கத் தானே செய்கிறது.

எனவே புதிய ஒலிபரப்பாளர்கள், தம்மை துறை தோய்ந்தவர்களாகக் காட்டிக் கொள்ள கண்ணாடி வீட்டுக்குள் நின்று கல்லெறிய வேண்டிய அவசியம் இல்லை. கண்களை அகலத்திறந்து இதயசுத்-தியுடன் உண்மையை உணரத் தலைப்பட வேண்டும். உண்மைகள் உறங்குவதில்லை.

பட்டினத்தடிகள்,
கொழும்பு - 4

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு-05

தொலைபேசி : 01-593615, 01-584380

தொலைமடல் : 01-594229


## "யுத்தத்தை நிறுத்து! சமாதான முயற்சியைத் தொடங்கு!"

நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்குத் தான் தயார் என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளைபிரபாகரன் அறிவித்துள்ளார்.

புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. க. அறிவித்துள்ளது.

சமாதானத்தை விரும்பும் மக்களின் தொகையே இந்த நாட்டில் அதிகம் என்று கருத்துக் கணிப்பீட்டு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதை உறுதி செய்யுமாப் போல்,மேர்ஜ் இயக்கத்தின் சார்பில் நடாத்தப்பட்ட எல்லைப்புற கிராமங்களில் உள்ள மக்களின் நிலை பற்றிய தகவலறியும் பிரஜைகள் ஆணைக்குழு விசாரணைகளின் அடிப்படையில் வெளியிட்டுள்ள இடைக்கால அறிக்கையில் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் அமைந்துள்ளன.

சிங்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் என்று இன வேறுபாடுகள் இன்றி இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், சமாதானம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் தமது சாட்சியங்களில் அவர்கள் தெரிவித்துள்ளதாக அவ்வறிக்கை கூறுகிறது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருமாறு அவர்கள் ஏகோபித்த குரலில் தெரிவித்துள்ளார்கள்.

இந்த நிலையில், புலிகளால் விடுவிக்கப்பட்ட சமாதான சமிக்ஞையை ஏற்று அவர்களுடன் பேச முன்வர வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

இவையெல்லாம், அரசியல் ரீதியாக மக்கள் மத்தியில் நிலவும் சமாதான விருப்பை வெளிப்படுத்தும் சமிக்ஞைகள் என்பதில் ஐயமில்லை.

ஆனால், ஜயசிக்குறு நடவடிக்கையை முடித்து விட்டதாக அறிவித்த அரசாங்கம் அது முடிந்த கையோடு ரிவிபல என்ற பெயரில் இன்னொரு யுத்த நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறது.

புலிகள் பலமாக உள்ள வன்னிப்பகுதியை மையமாகக் கொண்டு நடாத்துவதற்காக இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறக்குறைய அனைத்து மட்டங்களிலும் சமாதானத்துக்கான கோரிக்கை எழுப்பப்படுகையில் அரசாங்கம் மட்டும் அதைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் யுத்தத்திலேயே கவனம் செலுத்தி வருவதாகத் தெரிகிறது.

யுத்த விரும்பிகளான இனவாதிகளும், ஆயுத வியாபாரிகளும் அவர்களது பிரச்சார சாதனங்களும் மட்டுமே இன்று அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கையை ஆதரிக்கின்றன.

கடந்த இரண்டு தசாப்தங்களாக நடந்து வரும் இந்த யுத்தம் இன்று முடிவேதும் இன்றித் தொடர்ந்து கொண்டிருப்பதால் இலாபமடைந்தவர்கள் இந்நாட்டில் இவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை. அரசாங்கமும் கூட அரசியல் ரீதியாக அடைந்த இலாபத்தை விட இழப்புக்களே அதிகம். ஆயினும் அது தனது முடிவை மறு பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை.

சமாதானத்தில் நம்பிக்கை வைத்து வாக்களித்துப் பதவியில் அமர்த்திய மக்களுக்கு இந்த அரசாங்கம் செய்கின்ற உபகாரம் இது தான்.

ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுப் பேச வருமாறு புலிகளைக் கோருவது சமாதானத்தை நாமும் விரும்புகிறோம் என்று உலகுக்குக் காட்டப் போதுமான ஒரு காரணம் அல்ல. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என்று அறிவித்தாலும் இந்த அரசாங்கம் அதைத் தவிர்த்து வேறு எந்த வழியிலும் ஒரு பேச்சை நடாத்த உரிய வழிமுறையைத் தெரிவிக்கவில்லை.

அதன் கவனம் இப்போது எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் குவிந்திருக்கிறது போலும். ஆனால் எந்தத் தேர்தலும்,எந்தத் தீவிரமான பிரச்சாரமும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத வரை எந்தப் பயனும் அற்றவை. ஏனென்றால் மக்கள் ஒரு தேர்தலை விட முக்கியமானதாக அமைதி, சமாதானம் தமது சுதந்திரமான நடமாடும் உரிமை என்பவற்றையே கருதுகிறார்கள்.

ஆயினும் அரசாங்கத்தின் அக்கறை அதில் இருப்பதாகத் தெரியவில்லை

இது, இன்றைய அனைத்து ஜனநாயக சக்திகளும் சமாதான விரும்பிகளும் மக்கள் ஸ்தாபனங்களும் சமாதானத்தை நோக்கிச் செயற்படுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறைந்த பட்சம் சமாதானப் பேச்சை எப்படி நடாத்துவது என்பது பற்றிய ஒரு பேச்சிலாவது அரசாங்கத்தை ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்க அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப வேண்டிய தருணம் இது.

இந்த நாட்டின் எதிர்காலத்தின் பேரால், இந்த நாட்டின் இளந் தலைமுறையின் பேரால் சமாதானத்திற்கான அழைப்பை உரத்து ஒலிக்க முன்வருவோமாக.

"யுத்தத்தை நிறுத்து!
சமாதான முயற்சியைத் தொடங்கு!"

## ஜயசிக்குறுவுக்குப் பதில் ரிவிபல: மக்கள் இன்னமும் அதே சப்பாத்துக்களின் கீழ்!

ஜயசிக்குறு கைவிடப்பட்ட நிலையில், அரச படைகள் தமது படையெடுப்பு நடவடிக்கையின் இலக்கைத் திசை திருப்பி, ஒட்டுசுட்டானைக் கைப்பற்றி வன்னிப் போர்முனையில் திடீர் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளள.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தையும், 214 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 700 பொதுமக்களையும் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்த இராணுவத்தினரை உற்சாகப்படுத்தவும், அப்பகுதியின் நிலைமைகளைப் பார்வையிடுவதற்காகவும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு சென்றிருந்தார். அப்போது, விடுதலைப் புலிகள் திடீர் மோட்டார் தாக்குதலை நடத்தி, அமைச்சரை ஆபத்தின் விளிம்பிற்குத் தள்ளியதன் மூலம், அரசாங்கத்தையும், அரச படைகளையும் திகிலடையச் செய்தார்கள்.



இலங்கை சுதந்திரம் அடைந்த தினம் வருடந்தோறும் கொண்டாடுவதைப் போல, இராணுவத்துடனான மோதல்களில் உயிரிழந்த தமது சகாக்களைப் புலிகள் நினைவு கூர்ந்து கொண்டாடுகின்ற மாவீரர் தின வைபவங்கள் வருடந்தோறும் விசேடமாகக் கொண்டாடுவது வழக்கம்.

இந்த வருடத்திலும் மாவீரர் தினத்தை விசேடமாக விடுதலைப் புலிகள் கொண்டாடினார்கள்.

வழமையான கொண்டாட்ட விசேடங்களுடன், புலிகளின் வான்படை பற்றிய செய்தியை அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் வெளியிட்டு, நாட்டை ஒரு கலக்குக் கலக்கினார்கள். அதனையடுத்து, வன்னிப் போர்முனைகளில் எழுந்த திருப்பமாகவே மேலே சொல்லப்பட்ட சம்பவங்கள் நடந்தேறின.

அதுமட்டுமல்லாமல், கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டு அதிகாரிகள் இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வன்னிக்குப் பயணமானார்கள்.

வன்னியில் உள்ள குடிமக்களின் எண்ணிக்கை, அங்குள்ள இடம்பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்பாக வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களுக்கும், அரசாங்கத்துக்கும் இடையே ஒரு பனிப்போரே நடந்து வருகின்றது.

வன்னிப்பகுதியின் உண்மையான நிலைமைகளையும், அங்குள்ள இடம்பெயர்ந்த மக்கள் உணவுப் பற்றாக்குறை, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், விவசாய இடு பொருட்கள் ஆகியவற்றின் பற்றாக்குறைகளினாலும், அப்பகுதி மக்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்களையும், பாதிப்புகளையும் அறிந்து கொள்வதற்காக, உயரதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவை அல்லது, பக்கசார்பற்றவர்கள் அடங்கிய குழு ஒன்றை அங்கு அனுப்பி நிலைமைகளின் தீவிரத்தை அறிந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு, அவர்கள் பலதடவைகள் வேண்டுகோள்கள் விடுத்திருந்தார்கள்.

இந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், இந்த இரண்டு அதிகாரிகளின் விஜயமும் அமைந்துள்ளது என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும், வடமாகாணத்திற்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாண அதிகார சபையின் தலைவருமாகிய என்.ஒபடகே, மனிதாபிமான சேவைகளின் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவருமாகிய கலாநிதி டேவிட் ரட்ணவேல் ஆகிய இருவருமே இந்த அதிகாரிகளாவர்.

இடம்பெயர்ந்த மக்களின் பராமரிப்பு பணிகளுடனும், புனர்வாழ்வு நடவடிக்கைகளுடனும் தொடர்புடைய அரச நிறுவனங்களின் தலைமை அதிகாரியும் மனிதாபிமான சேவைகளின் ஆணைக்குழுவின் அதிகாரியும் இவ்வாறு முதல் தடவையாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளமையானது, மிக முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

இது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான நடவடிக்கையாகும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்து நிலைமைகளை அவதானிக்கவுள்ள இவ்வதிகாரிகள் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப் போகும் அறிக்கையின் மூலம் அப்பகுதிகளில், போரினாலும், தொடர்ச்சியான பொருளாதாரத் தடை நடவடிக்கைகளினாலும், துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் அப்பாவிப் பொது மக்களின் கஷ்டங்கள் தீர வேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமும் ஆகும்.

இதே வேளையில், எதிர்பாராத விதமாக ஒட்டுசுட்டான் பகுதிக்குள் இராணுவம் முன்னேறியபோது,

அவர்களிடம் சிக்கிக் கொண்ட சுமார் 700 அப்பாவிப் பொதுமக்களில் 47 பேரை இராணுவம் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைக்கு உள்ளாக்கியுள்ளது.

புலிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள் என்றும், அமைச்சர் ரத்வத்தை ஒட்டுசுட்டானுக்கு விஜயம் செய்திருந்த போது, புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்துவதற்கு இவர்களில் சிலர் உளவுத் தகவல் வழங்கி உதவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலும் விசாரணைகள் நடைபெறுவதாகத் தெரிகின்றது.

புலிகளிடம் இருந்து, அவர்களின் அடக்கு முறைகளில் இருந்து பொதுமக்களை விடுவிப்பதாகக் கூறுகின்ற அரச படைகள், ஒட்டுசுட்டான் பொதுமக்களையும், வவுனியாவில் திறந்தவெளிச் சிறைச்சாலைக்கு ஒப்பானதாக விளங்குகின்ற அரச நலன்புரி நிலையங்களுக்குள் தள்ளுவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள்.

இந்த மக்களைப் பொறுத்த மட்டில், இந்த நிலைமையானது, மரமேறி வழுந்தவனை மாடு மிதித்த கதையாகவே அமையப் போகின்றது என்பதில் சந்தேகமில்லை.

-தம்பு

## வட மேல்...

அங்கத்தினர்களது மனோநிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக கருதப்பட்ட கட்சியின் முடிவு கைவிடப்பட்டது. அதாவது தனித்து நிற்பது என்ற முடிவு கைவிடப்பட்டது. நமக்குள் ஆயிரம் இருப்பினும் நம் பொது எதிரியான ஐ.தே.க. ஆட்சிக்கு வருவதை அனுமதிக்கக் கூடாது என்ற ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைச்சர் அஷ்ரஃப் ஒப்புக் கொண்டதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால், உண்மையில் அப்படி நடக்கவில்லை என்றும், ஜனாதிபதி அமைச்சர் அஷ்ரஃப் அவர்களது அமைச்சர் பதவியைப் பறித்து விடுவேன் என்று மிரட்டியதன் காரணமாகவே, இம்மிரட்டலுக்குப் பயந்த அமைச்சர் இம் முடிவுக்கு ஒத்துப்போனதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது. கடந்த மாதம் காங்கிரசின் அரசியல்பீடம் எடுத்த தனித்து நிற்பது என்ற முடிவை மாற்றி, அமைச்சர் அஷ்ரஃப் சந்திரிகாவுடன் பேசியபின் அரசாங்கத்துடன் கூட்டாக நின்று கேட்பது என்ற முடிவை, அதே அரசியல் பீடம் எடுத்துள்ளது. இந்த ஒற்றைச் சந்திப்பிற்குள் இவ்வளவு காலமும் வழங்கப்படாத எந்த வாக்குறுதி திடீரென வழங்கப்பட்டு விட்டது என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

பொ.ஐ.முவுக்குள் தமக்கு ஒரு முக்கியத்துவத்தை நிலைநாட்ட முனைந்த முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியின் மிரட்டல் காரணமாக மூக்குடைபட்டு கூட்டாக வேட்பாளரை நிறுத்த உடன்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கிறார் அமைச்சர் பௌசி.

அமைச்சர் பௌசியின் கருத்துக்கள் எவ்வளவுக்கு உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால், அவர் கூறுவதில் ஒரு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

ஆம், மந்திரிப்பதவி இல்லாத அஷ்ரஃப்பும், ஆட்சியிலில்லாத முஸ்லிம் காங்கிரசும், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன்று ஸ்தாபன ரீதியிலான செல்வாக்கைக் கொண்டிருக்க முடியும் என்று சொல்லமுடியாது. கட்சி தனது பலத்தை பரந்துபட்ட முஸ்லிம்கள் மத்தியில் வேரூன்றிய ஒரு கட்சியாக கட்டி எழுப்புவதன் மூலம் உருவாக்கிக் கொள்ள வேண்டுமே ஒழிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதன் மூலமாக அல்ல என்பது முஸ்லிம் காங்கிரசை விமர்சிக்கும் பலராலும் தெரிவிக்கப்படும் ஒரு அபிப்பிராயமாகும். கட்சியின் கீழ்மட்ட அரசியல் அணிகளிடையே பலமாக வேரூன்றி வாழும் இந்தக் கருத்தே கடந்த மாதம் கட்சியின் அரசியல்பீடம் தேர்தலில் தனித்து நிற்கும் முடிவை எடுக்கக் காரணமாக இருந்தது.

ஆனால், அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் அப்படிக் கருதவில்லைப் போலும்!

அரசாங்கத்தில் அங்கம் வகிப்பது அவசியம் என்று அவர் கருதுகிறார் போலும். கட்சியைக் கட்டிக்காக்கவும், முஸ்லிம் மக்களின் உரிமையை வென்றெடுக்கவும் அது அவசியம் போலும் அவருக்கு.

ஆக, அமைச்சர் பௌசி சொல்வதை, அதாவது மந்திரிப்பதவி போய்விடும் என்பதால் தான் அமைச்சர் அஷ்ரஃப் கூட்டாக தேர்தலில் நிற்க ஒப்புக் கொண்டார் என்பதை மறுத்துரைக்க எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்!

## சூரியனும்...

தொடர்பூடகங்கள் தெரிவித்துள்ளபடி அவரின் சொத்துக்களின் பெறுமதி 20 கோடிபவுண்கள் ஆகும். பிரித்தானிய பொலிசாரின் கருத்துப்ப்டி இந்நபர் பெயர்போன ஊழல் பேர்வழியாவார். அவருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களின் கீழ் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 700 மட்டில் உள்ளன. இந்நபரின் இலங்கையின் உள்ளூர் பங்குதாராக செயற்பட்டுள்ளவர் ஜனாதிபதியின் நெருங்கிய நண்பரெனக் கருதப்படும் றொனி பீரிஸ் ஆவார். லிற் பிரதான வானொலி நிலையத்துக்குப் புறம்பாக இரவுக் களியாட்ட நிலையங்களின் வியாபாரத்தையும் பிரித்தானியாவில் நடாத்துகிறார்.

இச்சம்பங்கள் தொடர்பாக றொனி பீரிஸ் என்ன கூறுகிறார் எனத் தெரிந்து கொள்வதற்காக எமது நிருபர் ஒருவர் லண்டனிலுள்ள றொனி பீரிசின் எக்ஸ்பிரஸ் ட்ரவல் நிறுவனத்துக்குச் சென்றபோது அவர் அந்நிறுவனத்தை மூடிவிட்டு இலங்கைக்கு வந்துள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது என ராவய செய்தி வெளியிட்டுள்ளது.

வெளியிடுபவர்: ச. பாலகிருஷ்ணன், இல. 18/2, அலோ சாலை, கொழும்பு-03. அச்சுப் பதிவு: பிறின்ற் இன், இல.07, கெகடிய இடம்,சிறிமல் உயன, இரத்மலானை. 1998.12.09